# மண்

இதழ் 178

ஆடி / ஆவணி
July / August
2016

1990 - 2016



'மல்லிகை' ஆசிரியர்
திரு. டொமினிக் ஜீவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















யேர்மனி தமிழ் எழுத்தாளர்சங்கம் (11.6.2016) டொட்மூண்டில் நடாத்திய கௌசியின்
முக்கோணமுக்குளிப்பு நூல்வெளியீட்டு விழா நிகழ்வு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே

R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD


- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி



முகவரி: V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

தொலைபேசி: 0203/8073898

தொலைநகல்: 0203/8073898

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de

வங்கிவிபரம்: Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கருத்து...

## எதிலும் இனவாத சிந்தனை நாட்டை அழிக்கும்......

**த**மிழ் மக்களின் 30 வருட கால விடுதலைப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது என்பது போரின் மூலமாக இருந்திருக்கக் கூடாது. அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டிருந்தால், இன்றைய இலங்கை என்பது உலக நாடுகளுக்கான உதாரணமாக இருந்திருக்கும்.எனினும் துரதிர்ஷ்டவசமாக போர் முடிந்து போனதால் இழப்புக்களும் துன்பங்களுமே எங்களுக்கானதாகிவிட்டன. எனினும் இந்த இழப்புக்கள் ஓர் இனத்துக்கானது என்று யார் நினைத்தாலும் அது மிகப்பெரும் அநீதியாகும்.மாறாக 2009இல் நடந்த இறுதிப்போர் என்பது இந்த நாட்டுக்கு ஏற்பட்ட இழப்பாக பார்க்கப்பட வேண்டும்.வன்னி யுத்தத்தில் நடந்த அழிவுகளை தமிழினத்துக்கான அழிவாகக் கருதி சிங்கள மக்கள் மகிழ்வுறுவார்களாக இருந்தால், அவர்கள் பின்பற்றும் பௌத்த மதமும் புத்தபிரானின் போதனைகளும் தோற்றுவிட்டன என்றே சொல்ல வேண்டும்.எனவே போரில் ஏற்பட்ட இழப்புகளுக்காக ஒட்டு மொத்த இலங்கை மக்களும் வருந்த வேண்டும்.

என்ன காரணத்துக்காக தமிழ் மக்கள் போராட வேண்டி இருந்ததோ அந்த விடயத்தை தீர்த்து வைத்து தமிழ் மக்களும் இந்த மண்ணில் நிம்மதியாக-சுதந்திரமாக வாழ்வதற்கான வழியை ஏற்படுத்துவதே பொருத்தமானது.இதைச் செய்யாமல் இலங்கையில் இன ஒற்றுமையை ஏற்படுத்துவோம் என்று யார் சபதம் செய்தாலும் அது ஒருபோதும் சாத்தியமாகாது என்பது உண்மை.இந்த நாட்டில் இன்று தமிழர்கள் துன்பப்படுவது சிங்கள மக்களுக்கு ஆறுதலாக இருக்கலாம். ஆனால் என்றோ ஒரு நாள் யுத்தம் நடத்தி தமிழ் மக்களை வதைத்தது மிகப்பெரும் கொடுமை என்பதை சிங்கள மக்கள் ஏற்றுத்தானாக வேண்டும்.இதனால்தான் தோற்றவனை விட வென்றவனுக்கே அதிக துன்பம் என்று கௌதம புத்தபிரான் போதித்து அருளினார்.ஆக, தமிழ் மக்கள் பட்ட துன்பங்களைக்களைய வேண்டிய பெரும் பொறுப்பு சிங்கள மக்களுக்கு உண்டு.இருந்தும் சிங்கள ஆட்சியாளர்களின் அனைத்து நகர்வுகளும் தமிழ் மக்கள் தங்கள் மீது மீண்டும் சினம் கொண்டு விடுவார்களோ என்ற நினைப்போடு நடப்பதைக் காணமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தாயகத்திலும் சரி, இலங்கை நாட்டுக்கான சட்டவாக்கமாக இருந்தாலும் சரி தங்களின் நடவடிக்கைகள் தமிழர்களுக்கு ஒரு போதும் சாதகமாக இருக்கக்கூடாது என்பதுடன் அது தமிழர்களுக்கு பாதகமாகவே அமைய வேண்டும் என்பதிலும் ஆட்சியாளர்கள் உறுதியாக இருப்பது மிகப் பெரும் வேதனைக்குரியது.

தமிழர்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பதாக இருந்தாலும் சரி பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொடுப்பதாக இருந்தாலும் சரி எதிலும் ஒரு சிக்கலைத் தோற்றுவிப்பது அல்லது ஒரு உள்நோக்கத்துடன் செயற்படுவதாக இருப்பது இன ஒற்றுமையை ஒரு போதும் ஏற்படுத்த மாட்டாது. எனவே இனவாதம் என்ற சிந்தனையை அடியோடு வேரறுத்து இலங்கை மக்கள் இலங்கைத் திருநாடு இது அனைவருக்கும் சொந்தம் என்ற நினைப்போடு செயற்படுவதே பொருத்துடையதாகும். - ஆசிரியர் -

**மது வருமானத்தில் 1 வது இடத்தில் யாழ்ப்பாணம்..............**
**நிலைமை மாறவேண்டும் ஜனாதிபதி....**

அரசாங்கத்தின் சட்டரீதியான அனுமதி பெற்று மது விற்பனை செய்து அரசாங்கத்திற்கு அதிக வருமானம் ஈட்டித்தரும் மாவட்டங்களில் முதலாம் இடத்தை யாழ்ப்பாண மாவட்டமும் இரண்டாம் இடத்தை நுவரெலியா மாவட்டமும் மூன்றாம் இடத்தை மட்டக்களப்பு மாவட்டமும் பெற்றுள்ளன. இந்த நிலையை மாற்றி அமைக்க வேண்டும். இது ஒரு ஆரோக்கியமான செயற்பாடு அல்ல என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். நுவரெலியா மாவட்டத்தில் மதுவற்ற நாடு எனும் வேலைத்திட்டத்தின் ஆறாவது நிகழ்ச்சித்திட்டக் கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரபால சிறிசேன தலைமையில் நுவரெலியா புதிய நகர மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்தின் அனைத்து அலுவலகங்களிலும் போதை ஒழிப்பு தொடர்பாக விசேட பிரிவு ஒன்றை ஏற்படுத்தி அதில் இந்த செயல்திட்டம் தொடர்பாக செயற்பட வேண்டும். இதற்கான விசேட சுற்றறிக்கைகளை நாம் கடந்த வருடத்தில் எல்லா திணைக்களங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளோம். அதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும். தங்களுடைய அலுவலகங்களில் மதுபானத்தை பாவிப்பவர்களை அதில் இருந்து மீட்பதற்கான நடவடிக்கைகளை முதலில் மேற்கொள்ள வேண்டும். மதுவற்ற ஒரு சமூகமாக நாம் மாற்றம் பெற்றால் பல மாற்றங்களை எமது நாட்டில் ஏற்படுத்த முடியும். நாட்டிற்கு சிறந்த தலைவர்களாக குடும்பத்தின் நல்ல தலைவனாக பிள்ளைகளுக்கு ஒரு சிறந்த தந்தையாக சமூகத்திற்கு ஒரு வழிகாட்டியாக முன்னோக்கி செல்ல முடியும் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி விளக்கம்!...




## செய்வன திருந்தச்செய்:-

ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பிக்கிறாய். நீ செய்யும் அக்காரியம் நல்லது. அவசியமானதும் கூட. அத்தகைய காரியத்தைச் செய்ய முற்படும் நீ எப்படிச் செயல்பட வேண்டும்?..அவசரப்படாமல், தீர ஆலோசித்து, அக்காரியத்தை எவ்வாறு செய்தால் சிறப்பாக, தோல்வி இல்லாமல் செய்து முடிக்கலாம் என்பதைத் திட்டமிட வேண்டும். அக்காரியத்தை முடிக்கவேண்டுமென்று அரைகுறையாகச் செய்யக்கூடாது. திருத்தமாக, திட்டமிட்டு, நிதானமாகச் செய்யவேண்டுமேயொழிய, செம்மையில்லாமல் அவசர...அவசரமாகச் செய்யக்கூடாது.. சீக்கிரம் முடிக்க வேண்டும் என்பதற்காக அவசர கோலம் அள்ளித் தெளிப்பது போலச் செயற்படக்கூடாது. நீ செய்யும் எந்தக் காரியத்தையும் திருத்தமாகச் செய் என்று வலியுறுத்துகிறார் ஔவைப் பாட்டி.

## சேர் இடம் அறிந்து சேர்:-

ஒரு குட்டிக்கதை. ஒருவன் இரண்டு கிளிகளைப் பிடித்தான். ஒரு கிளியைக் கசாப்புக் கடைக்காரனிடமும் மற்றதை ஒரு குடியானவனிடமும் விற்றான். மாதங்கள் உருண்டன. கசாப்புக்கடைக் கிளி அங்கு இறைச்சி வாங்க வருவோரிடம் பேச்சுக்களைக் கேட்டுத் தானும் பேசக் கற்றுக்கொண்டது. எப்படி?.. "வெட்டுக் கொத்து" "ஆட்டுக்கறி ஆறு ரூபாய்" இப்படியாக. குடியானவனின் வீட்டில் வளர்ந்த கிளி வீட்டுக்கு வருவோரை "வாருங்கள்" "உட்காருங்கள்" "தாகத்திற்கு என்ன சாப்பிடுகிறீர்கள்" என்று அன்பாகவும் மரியாதையாகவும் கேட்கும். ஒரே இடத்தில் பிறந்த இவ்விரு கிளிகளின் பேச்சில் இப்படிப்பட்ட வேறுபாடு ஏன்?.. அவை வளர்ந்த இடத்தின் சூழ்நிலை. ஆகவே சேரத்தகுந்த நல்ல இடத்தை ஆராய்ந்து தேர்ந்தெடுத்துச் சேர். என்று அறிவுரை கூறியுள்ளார் ஔவைப்பாட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொன்றை வேந்தன்... (தொடர்ச்சி)

**08-ஏவாமக்கள் மூவா மருந்து..**

ஏவா இதைச் செய் என்று சொல்வதற்கு முன்பே குறிப்பறிந்து செய்யும் மக்கள்-பிள்ளைகளே, மூவா மருந்து தேவாமிர்தம் போன்றவர்கள். குறிப்பறிந்து செயலாற்றும் பிள்ளைகள் தேவாமிர்தம் போன்றவர்கள்.

**09-ஐயம் புகினும் செய்வன செய்..**

ஐயம் புகினும்- பிச்சை எடுத்தாலும், செய்வன செய்ய வேண்டிய நல்ல காரியங்களைச் செய். - விட்டுவிடாமல் செய். பிச்சை எடுத்தாலும் நல்ல காரியங்களைச் செய்வது தவறேல்.

**10-ஒருவனைப்பற்றி ஓரகத்திரு..**

ஒருவனைப்பற்றி - நற்குணமுள்ள ஒருவனைத் துணையாகப் பற்றிக்கெண்டு ஓரகத்து - ஓரிடத்திலே இரு- வாழ்ந்திரு. ஒரே கணவனை மணந்து ஒரு வீட்டிலேயே வாசம் செய்ய வேண்டும்.

**11-ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்..**

வேதியர்க்கு - பிராமணர்க்கு, ஒழக்கம் - உயர்ந்த ஆசாரம். ஓதலின் - வேதம் ஓதுவதைவிட , நன்றே - நல்லது. வேதம் ஓதுவதைவிடப் பிராமணர்க்கு மிகச்சிறந்தது ஒழுக்கமே.

**12-ஒளவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு..**

ஒளவியம் பேசுதல் - பொறாமைகொண்டு பேசுவது ஆக்கத்திற்கு - உயர்ச்சிக்கு -அழிவு - கேடு தரும். பொறாமை வார்த்தை கூறுவது வளர்ச்சிக்குக் கேட்டைத் தரும்.

**13-அஃகமும் காசும் சிக்கனத் தேடு..**

அஃகமும் - தானியமும், காசும் - பணமும், சிக்கென - வீண் செயவு செய்யாமல் தேடு - சம்பாதி. வீண் செலவு செய்யாமல் தானியத்தையும், பொருளையும் தேடவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் ஏன் படிக்கவேண்டும்!...

இரத்தத்தை வியர்வையாக்கி உழைத்து ஓடாகி, இறப்பர் மரத்திலும், தேயிலைத் தோட்டங்களிலும் அட்டைக் கடியில் படாதபாடுபட்டு படிக்க வைக்கும் எம் தாய் தந்தையருக்காகவா?.. காலையில் பாடசாலை சென்று, அங்கிருக்கும் கதிரைகளைச் சூடாக்கி, குந்தியிருக்கும் எங்களை, நேற்றுக் கொடுத்த வீட்டுப் பாடங்களைக்கேட்டு, பெரிய தடியால் வலிக்க...வலிக்க அடித்து, நன்றாகப் படி...படி என்றுகூறி, சிரித்துக்கொண்டிருக்கும் எங்களை ஐந்து நிமிட சோகத்தில் மூழ்கடிக்கும் ஆசிரியர்களுக்காகவா?...

இரப்பர் மரங்களுக்கிடையில் அட்டைக்கடிகளுக்குத் தனது இரத்தத்தை தானம் செய்து, இறப்பர் பாலுக்காக அன்றாடம் போராட்டம் நடத்தும் சாதாரண களனித்தோட்ட குடிமக்களின் மகளாகிய நான், எனது சமூகத்தை உயர்த்துவதற்காகவா கற்கவேண்டும்?...

முக்கியமாக எனக்காகக் கற்க வேண்டும். எனது எதிர்காலத்திற்காகக் கற்கவேண்டும். எனது எதிர்காலம் இந்தச் சமுதாயத்தில் என்பதால் அதன் எழுச்சிக்காகக் கற்கவேண்டும்!..

செல்வி.தனுஷிகா
களனி தமிழ் வித்தியாலயம்

நன்றிகள்!..

மண் சஞ்சிகையின் அட்டைப்பட கணனி வடிவமைப்பு
செல்வன் பானுஸ்கந்தா-புவனேந்திரன்
Duisburg
மண் சஞ்சிகையின் கணனி வடிவமைப்பு
செல்வன் சிவகாந்த்-சிவராசா
Duisburg



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசை பெருநட்டம்

ஒருசமயம் பலத்த மழை பெய்துகொண்டிருந்தது. எங்கும் மழைவெள்ளம் கரைபுரண்டோட மக்கள் தத்தளித்தனர். பலர் நீரில் அடித்துச் செல்லப்பட்டனர். மக்களைக் காப்பாற்ற ஒரு படகு அனுப்பப்பட்டது. மக்கள் தாம் உயிர்தப்பினால் போதுமென்று தம் பொருட்களை எல்லாம் துறந்து படகில் ஏறினர்.

பண ஆசையுள்ள ஒருவன் வெள்ளம் திரண்டு வருவதைக்கண்டதும், முதலில் தன் பணத்தை எல்லாம் துணியில் வைத்து தன் இடுப்பில் கெட்டியாகக் கட்டிக்கொண்டான்.. அதன் பின் அவனும் படகில் ஏறினான். படகு நீரில் சென்றுகொண்டிருந்தபோது ஆறாவளிக் காற்று வீசியது. படகு கவிழ்ந்துவிட்டது. நீச்சல் தெரியாதவர்கள் நீரில் மூழ்கிவிட்டனர். தெரிந்தவர்கள் கரையை நோக்கி நீச்சலடித்துக் கொண்டிருந்தனர்.

பண ஆசையுள்ளவன் நீச்சல் வீரன் என்று பெயர் பெற்றவன். எனினும் அவன் இடுப்பில் பணம் இருந்ததால் வேகமாக நீந்தமுடியாமல் திணறினான். அருகில் நீந்திக்கொண்டிருந்தவர்கள் இடுப்பிலுள்ளதை அவிட்டுவிடு..உயிர் தப்பலாம் என்றனர். ஆனால் அவன் பணத்தை இழக்க சிறிதும் விரும்பவில்லை இடுப்பில் கனம் அதிகமாகவே நீந்தமுடியாமல் கஷ்டப்பட்டு அவதிப்பட்டு இறுதியில் நீருக்குள் மூழ்கினான். ஆபத்தில் அவன் பணம் அவனையே காப்பாற்றவில்லை. அவன் உயிருக்கு அவனது பணமே எமனாக அமைந்து விட்டது. பேராசை பெருநட்டம். இக்கதைமூலம் பேராசையே நம் துன்பத்திற்கு மூலகாரணம் என்பதைப் புரிந்து கொள்வோம்!..

செல்வி நிவேதா ஜதீஸ்குமார்
நீத் மிஷன் – கிளிநொச்சி

**அம்மா!...**

என்னைப் பத்து மாதம்
வயிறு என்னும் கோவிலில்
வைத்துப் பாதுகாத்தாய்!..

தாய் மடி என்னும் தங்க
பெட்டியில் எனை வளர்த்தாய்
என் மழலை ஒலி
கேட்டு நீ மலர்ந்தாய்!...

பாசமென்னும் தெய்வம் நீ
கண்முன் தோன்றினாலும்
உன் அன்பிற்கு ஈடாகாதே!...

செல்வி ஜக்சினா யோகராசா
நீத் மிஷன் – கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை பார்!...

செவ்வானம் அழகாக விழுவதைப்பார்
பனித்துளிகள் மலரில்விழுவதைபபார்
பள்ளி செல்லும் சிறுவனைப் பார்
பாடம் சொல்லும் ஆசானைப் பார்...

சேவல் கூவும் அழகினைப் பார்
சோம்பேறிகள்எழும்பும்நேரத்தைப்பார்
குரங்கு செய்யும் சேட்டையைப் பார்
குறவன் காட்டும் கூத்தினைப் பார்..

தடுமாறி நிற்கும் முதியவரைப் பார்
அவருக்கு உதவும் சிறுவனைப்பார்
கடையில் திருடிய திருடனைப்பார்
காசிலா அலையும் எழையைப்பார்...

குற்றம் செய்த மனிதனைப் பார்
நீதி சொல்லும் நீதவானைப் பார்
கொல்லன் செய்த கத்தியைப் பார்
விவசாயிசிந்தும் வியர்வையைப்பார்..

சிரித்துத்திரியும் குழந்தையைப் பார்
சுகமாகஇருக்கும்பணக்காரனைப்பார்
துணிந்து நிற்கும் வீரனைப் பார்
தோல்வி கண்ட மூடனைப் பார்!...

செல்வன்.யோ.கோபி
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம்
சந்திவெளி-மட்டக்களப்பு.

# இன்றைய இளைஞர்கள்....

நாகரீகம் வளர்ந்த நாட்டிலே
இளைஞர் சமுதாயம்
குடி கெட்டுப் போகிறது
படிக்கும் வயதில்
போதை என்னும் பாரத்தை
தூக்கி நடக்கிறார்கள்....

அடக்கமாய் இருந்த பெண்கள்
எல்லாம் இன்றே
ஆரவாரத்தோடு அலைகிறார்
பெற்றோர்கள்
பேச்சைக் கேட்காமல் - அவர்கள்
சிறுவயதிலே கர்ப்பம் தரிக்கிறார்கள்....

இந்த வையகம் சிறிதுதான்
பெரிது என்று திரியும் இளைஞர்கள்
எப்போது தங்களது வாழ்வை
திரும்பிப் பார்க்க புத்தி கிட்டும்....

அழகான இளம் காய்கள்
தங்கள் வாழ்க்கையை
முத்திய பருத்திபோல் உடைக்கிறார்
வளரும் இளைஞர்கள் வாழ்வை
வளமாய் மாற்றுவோம்!....

செல்வன்.உ.விதுசன்
மாணிக்கவாசகர் இல்லம்
சந்திவெளி-மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் காப்பகங்களில் 15 ஆயிரம் சிறார்கள்!....



இலங்கையில் இயங்கிவரும் சிறுவர் காப்பகங்களில் சுமார் 15 ஆயிரம் சிறுவர்கள் தங்கியிருப்பதாக ஐக்கிய இலங்கை சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளின் சங்கம் தெரிவித்துள்ளது. அதன் பிரகாரம் நாடு முழுவதிலும் இருக்கும் தன்னார்வத் தொண்டு நிலையங்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் ஆகியவற்றால் நிர்வகிக்கப்பட்டுவரும் 435 சிறுவர் காப்பகங்களில் உள்ள சிறுவர்களின் அடிப்படை மனித உரிமைகளும் அவர்களின் மனநலமும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இத்தகைய காப்பகங்களில் வசிக்கும் சிறுவர்களின் கல்வி அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு அவர்கள் தங்கியுள்ள காப்பகங்களுக்கு அருகிலுள்ள அரச பாடசாலைகளில் அனுமதி வழங்குவதில் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்ற நியதி இருந்தபோதிலும், அது பெரும்பாலும் கடைப்பிடிக்கப்படாமல் உதாசீனம் செய்யப்படுவது அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதி எனவும், இந்தச் சிறுவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு விரைவில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உதவியை நாடவுள்ளதாகவும் இலங்கை சிறுவர் நன்னடத்தை சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வியையும் நேசியுங்கள்!...

வாழ்க்கை என்பது ஒரு விளையாட்டு அதில் வெல்வதோ, தோற்பதோ என்பது நம் கையில்தான். வெற்றி என்றவுடன் அனைவருமே விரும்பி ஏற்பார்கள். ஆனால் தோல்வி என்றவுடன் அதைத்தூக்கி வீசிவிட்டு வாழ்க்கையே பறிபோனவர்கள் போல் காணப்படுவார்கள். தோல்வியைத் தோல்வியாக நினைக்கும்போது நிஜமாகவே நாம் தோற்றுப்போகிறோம். தோல்விதான் வெற்றியின் முதல்படி. என்பதை முதலில் புரிந்துகொள்ளல் வேண்டும். இயலாமை என்னும் நோய் நம்மை வாட்டும்போதே நாம் தோற்றவராகின்றோம். எனவே இயலாமை என்னும் இருளை முற்றாக அகற்றி முயற்சி என்னும் விளக்கை நம் மனதில் ஏற்ற வேண்டும்.. அந்த விளக்கு ஒளி வீசும் ஒவ்வொரு நிமிடமும் நாம் வெற்றியாளராக மாறிக்கொண்டிருப்போம்.

உங்களுக்கு உங்கள் உறவினர்களால் அல்லது நண்பர்களால் சில சந்தர்ப்பங்களில் தோல்வி ஏற்பட்டிருக்கலாம். அதற்காக நீங்கள் அவர்களை எதிரிகளாக நினைத்துப் பழிவாங்கும் நினைப்புடன் செயற்பட முற்படுவீர்கள். இது கூட உங்களுக்கு ஏற்படும் பெரும் தோல்வியாக அமைந்துவிடும். அவர்களுக்காக அவர்கள் முன் நீங்கள் சாதனையாளராக மாற முயற்சியுங்கள். நியூட்டனின் விதியை ஒருமுறை நினைத்துப் பாருங்கள். எல்லாத் தாக்கத்திற்கும் சமனும் எதிருமான மறு தாக்கம் உண்டு என்றார். அதுபோலவே நம் வாழ்க்கையில் தோல்வி ஏற்பட்டுவிட்டால் நிட்சயம் ஒரு வெற்றியும் இருக்கும். எனவே ஒவ்வொரு தோல்வியையும் வெற்றியாய் மாற்ற முடியும் என்ற நம்பிக்கையை உங்கள் மனதில் நன்றாகப் பதியுங்கள். உங்களுக்குத் தோல்வி ஏற்பட்டவுடன் தோற்றுப் போனோம் என்று ஒதுங்காதீர்கள். உங்களைத் தோற்க வைப்பவர்களின் முன்னால் சாதனையாளர்களாக மாற்றிக்காட்டுங்கள்.

வெற்றியையும் தோல்வியையும் சமமாக நேசியுங்கள். தோல்வியும் உங்கள் வாழ்க்கையில் வெற்றியாக மாறும்.. அப்போது உங்களைத் தோற்க வைத்து வென்றவர்கள் கூட உங்கள் முன் தோற்றுப்போகக்கூடும். "நான் தோற்றவன்" "வெற்றியாளன் அல்லன்" என்று ஒருபோதும் நினைக்காதீர்கள். மனிதன் மனிதனாகப் பிறக்கும்போது மட்டுமே மனிதனாக வாழமுடியும். எனவே கிடைத்ததற்குரிய அரிய அற்புதமான மனிதப் பிறவியில் தோல்வியைக்கண்டு துவண்டுவிடாமல் விடாமுயற்சியடன் செயற்படுங்கள்.... வெற்றிக்கு வழி தோல்விதான் என்பதை மறவாதீர்கள்!...

செல்வி.வி.திர்ஷா
ரூத் மிஷன் - கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 3

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | | 5 | | | 7 | 9 |
| 2 | | | 6 | | | 1 | 5 | |
| | 8 | 9 | | 2 | 1 | | | |
| 1 | | | | 7 | 8 | 9 | | 6 |
| 9 | | 8 | 2 | | | | | 5 |
| | 2 | | | 4 | | 8 | | |
| 8 | | 5 | | 6 | 2 | | 9 | |
| | 9 | | 5 | | 7 | 6 | | 1 |
| 7 | | | 4 | | | | 8 | |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 92
## (ஆடி + ஆவணி 2016)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ – வ:

01-04 நாள் ஒன்று.

13-15 தாய் ஒத்த சொல்.

வ – இ:

08-06 உயிரினங்கள் உயிர்வாழ அவசிமானது.

12-10 தமிழர் விளையாட்டுக்களில் ஒன்று.

கீ – மே

09-01 கூரான ஆயுதம்.

மே – கீ:

03-15 மாணவர்களுக்கு இந்த வளமும் அவசிமானது.

08-16 ஒற்றுமைக்குப் பெயர்போன பறவை.

(விடைகள் இன்னொரு பக்கத்தில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணக்குப் புதிர்....

குறிப்பிடப்பட்ட அடையாளங்களையும் இலக்கங்களையும் பயன்படுத்தி பெட்டிக்குள் வரவேண்டிய இலக்கங்களைக் கண்டுபிடியுங்கள். முயற்சி செய்து பாருங்கள். முடியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள் பதில் கிடைக்கும்....




## வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்.....

இங்கே காணப்படும் இரண்டு படங்களுக்குமிடையே குறைந்தது எட்டு வித்தியாசங்கள் இருக்கின்றன. இந்த வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள். முடியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள் பதில் கிடைக்கும்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினா விடைகள்...

01- இலங்கையின் தேசிய இரத்தினக்கல் எது?..
நீல மாணிக்கம்.

02-அநுராதபுரத்தை தலைநகராக்கிய மன்னன் யார்?..
பண்டுகாபயன்.

03-இலங்கையை ஆண்ட இறுதி மன்னன் யார்?...
சிறீ விக்கிரம நரேந்திரசிங்க.

04-இலங்கையில் தேசியமட்டப் பரீட்சைகளை நடத்தும் நிறுவனம் எது?...
இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்.

05-இலங்கையில் உயர் நீதிமன்ற நீதியரசர்களின் பதவிக்காலம் எத்தனை?
ஐந்து ஆண்டுகள்.

06-உலகிற்குப் பாராளுமன்ற ஜனநாயகத்தை அறிமுகம் செய்தநாடு எது?..
பிரித்தானியா.

07-உலகிலுள்ள ஜனநாயக நாடுகளில் பெரியநாடு எது?..
இந்தியா.

08-சூரிய மையக்கோட்பாட்டை முதன் முதலில் விளக்கியவர் யார்?..
கொபர் நிக்கலஸ்.

09-பூமி உருண்டையானது என்பதை முதன்முதலில் கூறியவிஞ்ஞானி யார்.
கலிலியோ கலிலி.

10-முதன் முதலில் 48 தடவைகள் விண்கலத்தில் புவியைச்சுற்றிவந்த
பெண் வீராங்கனையின் பெயர் என்ன?..
வாலண்டினா தெரஷ்கோவா.

தொகுப்பு:- செல்வி.எஸ்.சானியா.
யாழ்.சுண்டிக்குளி மகளீர் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகளும் விடைகளும்...

01-நிலத்திற்கு மேலே பச்சையாகச் சிரிப்பான், நிலத்தின் கீழே மஞ்சளாய் விளைவான் அவன் யார்?..

02-நீரிலே பிறப்பான். குழம்பிலே மிதப்பான் அவன் யார்?..

03-குச்சித்தொப்பிக்காரன். உரசினால் கோபக்காரன் அவன் யார்?..

04-பார்த்தால் கம்பு. வெட்டிப் பிழிந்து குடித்தால் இனிப்பான் அவன் யார்?..

05-பாடி அழைப்பான் உறவை. கூடி உண்பான் அவன் யார்?..

06-ஒரு விளக்கில் ஊரெல்லாம் வெளிச்சம் அவன் யார்?..

07-காலம் காட்ட களைப்பின்றி ஓடுவான் அவன் யார்?..

08-ஆயிரம் கண் கொண்டான். அசந்து தூங்க மடி தந்தான் அவன் யார்?..

09-உயரம் கண்டால் ஏறான். பள்ளம் கண்டால் பாய்ந்து ஓடுவான் அவன்யார்.

10-உடலிலே வெளிச்சம் பூட்டி ஊர்வலம் வருவான் அவன் யார்?..

11-எட்டுமென்று நினைக்கலாம் ஆனால் எட்டாது அது என்ன?..

12-சொட்ட நனைந்தாலும் நடுங்கமாட்டான் அவன் யார்?..

13-சடக்கென்று வருவான் சத்தமிட்டுப் போவான் அவன் யார்?..

பதில்கள்:- மஞ்சள் - மீன் - தீக்குச்சி - கரும்பு - காகம் - நிலா,சூரியன் - கடிகாரம் - நாட்காட்டி - தண்ணீர்,வெள்ளம் - மின்மினிப்பூச்சி - வானம் - குடை - தும்மல்.

செல்வி.நிவேதா.ஜதீஸ்குமார்
ரூத் மிஷன் - கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை!...

செல்வி சு எஸ்தர்
ரூத் மிஷன் - கிளிநொச்சி

அந்தி மழைச் சாரலாய்
என்னுள் மீண்டும்
அந்த நினைவுகள்
ஆழ் மனதில் இருந்து
வேர் விட்டு விருட்சமாய்
எழுகின்றன பிஞ்சு வயதில்
கொஞ்சும் மொழியில்
பஞ்சுப் பாதங்களால்
எத்தனை முறை
பள்ளியை முத்தமிட்டோம்...
சிலமுறை ஆங்காங்கே
சித்திரங்கள் பலதும்
வரைந்து மகிழ்ந்தோம்
சிற்சில கட்டடங்களின் உள்ளே
ஓட்டைக் கூரைகளில்
வானத்தை அண்ணார்ந்து
வேடிக்கை பார்த்தோம்...
கொட்டும் மழையில் நனைந்து
கதைகள் பல பேசி
காகிதக் கப்பல் வீசினோம்
எம் வகுப்பறை முற்றத்திலே
இயற்கையை இரசித்தபடி
இதமான தென்றல் தாலாட்ட
பச்சை மரங்களின் கீழே
பட்டுச் செல்வங்கள் நாம்
பாடங்கள் பல பயின்றோம்....
இத்தனைக்கும் அப்பால்
மரங்களில் இதயங்களை
பறக்க விடுவதும்
சைக்கிள் காற்றைத் திறந்து
வேடிக்கை காட்டுவதும்
மேளம் தட்டுவதும்
கதிரைக் கால்களை எடுத்து
கிரிக்கட் விளையாடுவதும்
இன்றும் தித்திக்கின்றன...
அதிபரிடம் அடி வாங்கி
சுடு வெய்யிலில் மைதானத்தில்
முழங்கால் இட்டதும்
ஆசானிடம் பேச்சுக்கேட்டு
மேசைமேல் நிற்பதும்
கணக்குக் கொப்பி எல்லாம்
ரொக்கெற்றாய் பிளேனாய்
கூரையைத்தொடுவதும்....
பிழி சோற்றுக்குச் சண்டையிட்டு
மண்டை உடைந்ததும்
இன்னும் அழியாத வடுக்களாகவே...
கரும்பலகையில்
கிறுக்கிய கவிதைகளும்
சின்னச் சின்ன மெட்டெடுத்து
பாடிய பாடல்களும்
பசுமரத்தாணியாய் இன்றும்
எம் மனங்களில் இனிக்கிறது...
அன்பின் உளிகொண்டு
அறிவால் எம்மைச் செதுக்கி
இன்று பல்கலை சென்று
வந்த போதும்
அந்த நாள் ஞாபகங்களாய்
எம் இதயங்களில்
ஞாபகம் இருக்கின்றது
எங்கள் பள்ளி நினைவுகள்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும்

ஈகை: –

221. வறியார்க்கொன் றீவதே ஈரகமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர் துடைத்து.

222. நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனும் ஈதலே நன்று.

223. இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள.

224. இன்னா திரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகம் காணும் அளவு.

225. ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

226. அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

227. பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது.

228. ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

229. இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்.

230. சாதலின் இன்னாத தில்லை இனித்தூஉம்
ஈதல் இயையாக் கடை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறளும் பொருளும் (ஏற்போர்க்குக் கொடுத்தல்)

221. பொருளற்றவர் வேண்டும் பொருளைக் கொடுப்பது ஈகை. மற்றக் கொடை அளவுடன் வாங்கி, வாங்கின அளவினையே கொடுப்பதற்கு ஒப்பாகும்.

222. ஒருவரிடம் வாங்கும் பொருளால் நன்மை உண்டென்றாலும் அதை வாங்குவது தீமையாகும். பிறருக்குக் கொடுப்பதால் மேன்மை இல்லை என்றாலும் கொடுப்பதே நல்லதாகும்.

223. யான் வறியவன் என்று சொல்லும் இழிவைத்தான் பிறரிடம் சொல்லாமையும், தன்னிடம் யாசிப்பவருக்கு ஈதலும் நற்குடிப் பிறந்தவனின் குணமாகும்.

224. யாசிப்பவர் வேண்டிய பொருளைப் பெற்று மகிழுமளவு கொடுப்பவரால் கொடுக்க முடியாமல் மனம் வருந்துவது துன்பமானது.

225. மற்றவரது பசியை மாற்றுபவரின் ஆற்றலுக்குப் பிற்பட்டதே தம் பசியைப் பொறுத்துக்கொண்டு தவம் செய்பவரின் ஆற்றல்.

226. பொருளற்ற ஏழையின் கடும்பசியைத் தீர்ப்பதே தன் செல்வத்தைத் தனக்குப்பின் உதவுவதற்காகச் சேர்த்து வைத்த இடமாகும்.

227. பலருடன் பகிர்ந்து உண்ணும் பண்புடையவனிடம் பசி என்னும் நோய் தீண்டாது.

228. வறியவர் வேண்டுவதைக் கொடுத்து, அவர் மகிழ்வைக் காணாத அருளற்றவர் தமது செல்வத்தை ஈயாமல் இழந்து விடுவார்.

229. தனது பொருள் குறையை நிரப்ப வேண்டும் என்று தானே தனித்து உண்ணுவது பிச்சை எடுப்பதைவிடத் துன்பமானது.

230. ஒருவருக்குச் சாவைப் போன்ற துன்பம் வேறு இல்லை. அச்சாதலும் வறியவர் கேட்டதைக் கொடுக்க முடியாத இடத்து இனியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசி ஆனந்தனின் சிந்தனைகள்!...



பார்வை:-

தரிசு நிலம். குப்பைகளும் கூழாங்கற்களும் குவிந்து கிடந்தன. "உதவாத குப்பைகள் - கூழாங்கற்கள்" என்று உலாத்தலுக்கு வந்த நாள் கண்களை மூடி உரக்கக் குரைத்தது. படுத்துக்கிடந்த மாட்டுக்கு இது பிடிக்கவில்லை. "குப்பைதானே பெறுமதியான எருவாகிறது- கூழாங் கற்களைத்தானே தெருவாகப் போடுகிறார்கள்" என்றது மாடு. "நன்றாகப் பார் எதிலும் ஏதோ ஒன்று இருக்கிறது" மாடு தொடர்ந்தது.

"குப்பையை எருவாய்ப்பார் கூழாங்கல்லைத் தெருவாய்ப்பார்"

மதிப்பு:-

"வாழ்ந்தால் குயிலைப்போல வாழவேண்டும்" என்றது பட்டாம் பூச்சி. இன்னொரு பட்டாம்பூச்சி கேட்டது ஏன்?..."அதோ பார் மாமரத்தில் பாடுகிறது குயில்" மா மரத்துக்காகத்தான் அது பாடுகிறது. பின்பு மாங்கனியைச் சாப்பிடுகிறது. பறக்கிறது... புரியவில்லையே... "யாருக்கும் கடமைப்படக்கூடாது கொடுத்துப் பெறு தங்கி வாழாதே" "ஓ" இப்போது புரிகிறது என்றது இரண்டாவது பட்டாம்பூச்சி. தன்குள்ளே அது சொல்லிக்கொண்டது.

"மரத்துக்கு ஒரு பாட்டு குயிலுக்கு ஒரு பழம்"

உறுத்தல்:-

சூரியனைப் பார்த்து நிலம் கத்தியது. "நீ செய்வது சரிதானா" சூரியன் அதிர்ச்சியுற்றான். இதுவரை அவனை யாரும் இப்படிக் கேட்டதில்லை. என்ன சொல்கிறாய்?... "இருளை நீ மறைக்கலாம்.... அழகான விண்மீன்களை எப்படி நீ மறைக்கலாம்" சூரியன் திடுக்கிட்டான். "ஒவ்வொரு ஒளியிலும் ஒவ்வொரு அழகு இருக்கிறது உனக்குத் தெரியுமா" ஞாயிறு முகிலுள் ஒளிந்தான். நிலத்தின் குரல் அவன் காதில் ஓங்கி ஒலித்தது...

"வெளிச்சத்தை மறைக்கலாமா வெளிச்சம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளுக்கு தண்டனை கொடுக்காதீர்.....

பிள்ளைகளை நன்முறையில் வளர்க்க வேண்டும் என்று நினைத்து அவர்களை கண்டிப்புடன் வளர்க்கும் பெற்றோர்கள் கையில் எடுக்கும் ஆயுதம் தண்டனை. குழந்தைகளுக்கு தண்டனை கொடுக்காதீங்க பிள்ளைகளை நன்முறையில் வளர்க்க வேண்டும் என்று நினைத்து அவர்களை கண்டிப்புடன் வளர்க்கும் பெற்றோர்கள் கையில் எடுக்கும் ஆயுதம் தண்டனை.பேச்சை கேட்காத பிள்ளையை திருத்துகின்றேன் பேர்வழி என்று அதிக தண்டனைகள் வழங்கினால் உங்கள் பேச்சை இன்று வேண்டுமானால் கேட்பார்கள்.ஆனால் பிற்காலத்தில் உங்களைப் பற்றிய தப்பான கருத்தும், தண்டனையின் வலியும் வடுவாக அவர்கள் இதயத்தில் பதிந்துவிடும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

குழந்தைகளை இதை செய்யாதே அதை செய்யாதே என்று கூறி எதற்கு எடுத்தாலும் தண்டனை வழங்கி சித்திரவதை செய்கின்றோம். ஆகையால் தண்டனை கொடுப்பதை விட்டு விட்டு அறிவுரைகளால் திருத்துவதையும், வளர்ப்பதையும் பெற்றோர்கள் கடைப்பிடிக்க வேண்டும். குழந்தையை அடித்து பல வித தண்டனைகள் வழங்கினால் உங்கள் குழந்தைகள் உங்களை வெறுக்க ஆரம்பித்து விடுவார்கள். பின் என் குழந்தை என் மீது அன்பாகவே இல்லை என்றால் பயன் இல்லை. அன்பை கொடுத்துதான் அன்பை பெற வேண்டும். கொஞ்சம் அவர்கள் பக்கத்தில் உட்கார்ந்து பேசுங்கள் போதும் புரிந்து கொள்வார்கள்.ஒரு சில குழந்தைகள் தண்டனைகளை ஆரம்ப காலத்தில் பொறுத்து கொள்வார்கள்.

ஆனால் போக போக அதுவே வெறுப்பாக மாறி பெற்றோர்களை எதிர்க்கும் அளவிற்கு வந்து விடும். இது மிகவும் ஆபத்தானது.தண்டனைகளைத் தாங்கி வளரும் குழந்தைகள் பிற்காலத்தில் பயந்த சுபாவம் அடைவார்கள் என்று ஆராய்ச்சிகள் தெளிவு படுத்துகின்றன. இதனால் எப்பொழுதும் பயத்துடனே காணப்படும் பிள்ளைகள் எதை சாதிப்பார்கள் என்று நினைத்து பாருங்கள். இதனால் உளவியல் ரீதியான பிரச்சினைகளை அவர்கள் எதிர்கொள்ளக் கூடும் என்பதை மறந்து விடாதீர்கள்.

குழந்தைகள் செய்யும் சிறிய தவறுக்கு பெரிய அளவில் தண்டனை கொடுக்கும் பெற்றோர்களே ஒன்றை மட்டும் நினைவில் வைத்து கொள்ளுங்கள். இதனால் உங்கள் பிள்ளைகள் தாழ்வு மனப்பான்மை அடைவார்கள். மேலும் வாழ்வில் வேறு எந்த முன்னேற்றமும் இல்லாமல் வாழ்வின் மீது வெறுப்பு கொண்டு தற்கொலை செய்து கொள்ளும் அளவிற்கு கூடத்தள்ளப்படுவார்கள் என்பதை மறந்து விடாதீர்கள். ஆகவே அன்பை கொண்டு குழந்தைகளை வளர்க்க வேண்டும்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெற்றோரின் கவனத்திற்கு!...

குழந்தைகள் பொதுவாகவே பெற்றோர்களுக்கு தங்கள் பிள்ளை வகுப்பில் முதல் மாணவனாக வரவேண்டும், தனித்துவம் வாய்ந்தவனாக இருக்க வேண்டும் என்பதுவே ஆசை. இதற்காக எப்போதும் படி, படிஎன்று சொல்லிக் கொண்டே இருக்க கூடாது, அது அவர்களுக்கு வெறுப்பை மட்டுமே ஏற்படுத்தும். இதற்கு பதிலாக அன்புடன் அரவணைத்து சொல்லிக் கொடுப்பது அவசியம்.

ஒவ்வொரு நாளும் எந்தெந்தப் பாடங்களை படிக்க வேண்டும் என பட்டியலிட்டு, அதற்கேற்றாற் போல் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். பிள்ளைகளை படிக்கச் சொல்லிவிட்டு, நீங்கள் தொலைக்காட்சி பார்க்கக் கூடாது, அப்படி செய்தால் அவர்களுக்கு எதிர்மறையான எண்ணமே ஏற்படும்.

ஒருவேளை சரியாக படிக்கவில்லை என்றால் அதற்காக அவர்களை அடிக்ககூடாது, மதிப்பெண் குறைந்ததற்கு என்ன காரணம் என அலசிக் காரணத்தை கண்டறிந்து அதனைச் சரிசெய்ய வேண்டும்.பெற்றோர்கள் பிள்ளைகளின் ஆசிரியரை அடிக்கடி சந்திக்க வேண்டும், வகுப்பில் பாடங்களை கவனிக்கிறானா? மற்ற பிள்ளைகளுடன் எப்படி பழகுகின்றான்? என தெரிந்து கொள்ள வேண்டும்.

அவ்வப்போது ஓய்வு நேரங்களில் விளையாட அனுமதிக்கலாம்,வார இறுதிநாட்களில் பெற்றோர் ஜாலியாக பிக்னிக் கூட்டி செல்லலாம், இப்படி செய்தால் பிள்ளைகளுக்கு உங்களின் மீதான பாசம் அதிகரிக்கும். உங்கள் பிள்ளைகளுடன் ஒரு நண்பனைப் போன்று நீங்கள் பழகினாலே போதும், உங்கள் எண்ணம் போன்று அவனை சிறந்த மாணவனாக சமூகத்தில் பெரிய ஆளாக உருவாக்கலாம்!!!

---

**நூால்கள்:-**

-உலகில் முதன் முதலில் அச்சிட்டு வெளியிடப்பட்ட நூல்"டிமோன் சுட்ரா" என்ற நூலாகும். இது 868ம் ஆண்டு சீனாவில் வெளியிடப்பட்டதாகக் கருதப்படுகிறது.

-பேச்சிவல் பாதிரியாரின் வேண்டுகோளுக்கு இணங்க பைபிளை முதன் முதலில் மொழி பெயர்த்தவர் ஆறுமுகநாவலர் ஆவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய சில நிகழ்வுகள்.... (ஆடி,ஆவணி மாதம்)

## இலங்கை

03.07.1982-இலங்கை அரசின் Y-8 ரக விமானம் ஒன்றை விடுதலைப்புலிகள் ஆனையிறவுப் பகுதியில் சுட்டுவீழ்த்தப்பட்ட நாள்.

09.07.1995-இலங்கை அரச விமானப்படைகளின் நவாலிப் படுகொலை நாள் 141 தமிழர்கள் கொல்லப்பட்ட நாள்.

11.07.1990-வன்னி-கொக்காவில் இராணுவ முகாமை விடுதலைப்புலிகள் தாக்கியழிக்கப்பட்ட நாள்.

23.07.1983-வரலாற்று மிக்க யாழ் திருநெல்வேலி விடுதலைப்புலிகளின் தாக்குதல். யூலைக்கலவரம் ஆரம்பநாள்.

27.07.1983-வெலிக்கடை சிறைப்படுகொலை நாள்.

26.07.1957-பண்டா-செல்வா கைச்சாத்திடப்பட்ட நாள்.

29.07.1987-இலங்கை-இந்தியா,ராஜீவ்காந்தி-ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஒப்பந்தம் செய்யப்பட்ட நாள்.

06.08.1978-முதன்முதலாக இலங்கைக்கு விஜயம் பாப்பரசர் ஆறாவது சின்னப்பர்.

13.08.1849-யாழ்மாவட்ட கத்தோலிக்க பதில்மறை மாவட்டம் நிறுவியதினம்.

15.08.1977-இலங்கையில் ஆவணி இனப்படுகொலை ஆரம்பித்த நாள்.

25.08.1893-திருகோணமலை கத்தோலிக்க மறைமாவட்டம் நிறுவப்பட்ட தினம்.

## பிரமுகர்கள்:-

05.07.1987-முதற்கரும்புலி வீரன் கப்டன் மில்லர் நினைவுநாள் (வல்லிபுரம். வசந்தன்)

06.07.1992-கோவை மகேசன் நினைவுநாள் (22.02.1938-06.07.1992)

06.07.1992-தவில்மேதை ஆர்.சின்னராசா நினைவுநாள் (24.03.1934-06.07.1992)

08.07.1989-நடிகமணி வி.வி.வைரமுத்து நினைவுநாள் (11.02.1924-08.07.1989)

13.07.1989-தமிழர்கூட்டணித்தலைவர், எதிர்கட்சித்தலைவர் ஆ.அமிர்தலிங்கம் நினைவுதினம் (1927-1989)

15.07.2008-தெல்லிப்பளை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவுதினம்.

19.07.1947-விபுலானந்த அடிகளார் நினைவுதினம் (27.03.1892-19.07.1947)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26.07.1982-கலையரசு சொர்ணலிங்கம் நினைவுதினம்.

26.07.1857-யாழ் முதல் ஆயர் பெற்றாக்கினி நினைவுதினம்.

22.07.1978-யாழ் மாநகர முதல்வர் அல்பிரட் துரையப்பா நினைவுநாள்.

30.07.1969-வாக்கிய பஞ்சாங்க கணிதமேதை இரகுநாதையர் நினைவுநாள்.

02.08.1913-தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் பிறந்ததினம்

03.08.1892-யாழ் - கொழும்பு ஆயர் பொஞ்சின் நினைவு தினம் (1823-1892)

10.08.1790-தமிழ்-டச்சு அறிஞர் பிலிப் தெமெல்லோ நினைவுதினம்.

11.08.1747-கண்டி நாயக்க மன்னன் சிறீ விஜயராஜசிங்கன் நினைவுதினம்.

12.08.2005-இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் நினைவுதினம்.

14.08.1979-நிதிஅமைச்சர் டாக்டர் என்.எம்.பெரேரா நினைவுதினம்.

16.08.1971-தமிழரசுக்கட்சி டாக்டர் வி.நாகநாதன் நினைவுதினம்(1906-1971)

26.08.1952-தியாகி உரும்பராய் சிவகுமாரன் பிறந்ததினம்

28.08.1891-பிரித்தானியத்தமிழ் அறிஞர் அங்கிளிக்கன்சபை திருநெல்வேலி ஆயர் கார்ல்டுவேல் நினைவுதினம்.

31.08.1875-நல்லூர் ஞானப்பிரகாசர் பிறந்ததினம் (1875-1947)

## உலகம்

05.07.00-உலக சூழல் தினம்.

06.07.00-றம்ழான் தினம்.

10.07.2016-ஐரோப்பாகிண்ண உதைபந்தாட்டப்போட்டி முடிவடைந்தநாள்.

11.07.00-உலக சனத்தொகை தினம்.

16.07.1945-முதலாவது அணுக்குண்டு மெக்ஸிக்கோப் பாலைவனத்தில் பரிசோதிக்கப்பட்ட நாள்.

31.07.1648-உலகப்புகழ் தாஜ்மகால் முகாலபயா அரசன் சாஜகான் தனது காதலி மும்தாஜ இற்காகக்கட்டினான்.

01.08.1907-சாரண இயக்கத்தின் தந்தை பேடன்பவல் பிரவுன்சித் தீவில் முதன்முதல் பாசறை அமைத்த உலக சாரணர் தினம்.

06.08.1945-இரண்டாம் உலகப்போரில் யப்பான்-கிரோஸிமா மீது அமெரிக்கா அணுக்குண்டுவீசியது.

06.08.1945-பென்சிலின் மருந்தைக் கண்டுபிடித்த பிளெமிஞ்கிற்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

07.08.1913-தமிழில் முதல் தமிழ்ப்படம் தயாரிக்கப்பட்டது. "கீசகவதம்"

09.08.1945-இரண்டாவது அணுக்குண்டு யப்பான் மீது அமெரிக்கா வீசியது நாகசாகி நகர் முற்றாக அழிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10.08.1953-இமாலய உச்சியான எவெரெட்ஸ் மலையில் (8.848 மீட்) முதன் முதல் கால்பதித்தார்கள். நியூசிலாந்து நாட்டவரான எட்மன் கிலறி என்பவரும் நேபாளத்தைச் சேர்ந்த டென்சிங் நோர்கே என்பவருமாவர்.
12.08.00-சர்வதேச இளையோர் தினம்.
13.08.1942-ரி.சேட் அமெரிக்க கடற்படையினரின் சௌகரியத்திற்காக முதன்முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.
14.08.1947-பாக்கிஸ்தான் நாடு உருவாகியநாள்.
15.08.1947-இந்திய சுதந்திர தினம்.
21.08.1860-உலகின் முதலாவது துரித தபால்சேவை (Express) அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டது.
28.08.1954-உலகின் முதல் அணுமின் நிலையம் சோவித் யூனியனால் நிறுவப்பட்டது.
31.08.1787-முதன் முதலாக அமெரிக்காவில் டொலர் நாணயம் அறிமுகமானது.

## உலகப்பிரபலங்கள்:-

01.07.1961-பிரித்தானியா இளவரசி டயானா பிறந்ததினம்.
04.07.1934-ரேடியத்தைக் கண்டுபிடித்த விஞ்ஞானி மேரி கியூரி அம்மையார் நினைவுதினம். (07.11.1867-04.04.1934)
11.07.1966-இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்த்திரி நினைவுதினம்
14.07.1789-கவிமணி தேசிக வியாயகம்பிள்ளை பிறந்ததினம்.
20.07.1937-வானொலியின் தந்தை மார்க்கோனி நினைவுநாள்.25.04.1874-20.07.1937
21.07.2001-நடிகர் திலகம் டாக்டர் பத்மசிறீ சிவாஜி கணேசன் நினைவுதினம்.
30.07.1433-பிரான்ஸ்நாட்டு மன்னன் லூயி நினைவுதினம்.

01.08.1940-சாரணிய இயக்கத் தந்தை பேடன் பவல் நினைவுநாள்.
08.08.1941-தத்துவமேதை ரவீந்திரநாத் தாகூர் இலக்கிய நோபல் பரிசு பெற்றவர் நினைவுதினம் (07.05.1861-08.08.1941)
12.08.1941-புகைவண்டிப் புகழ் ஜோர்ஜ் ஸ்டீவன் நினைவுதினம்.
17.08.1988-பாக்கிஸதான் ஜனாதிபதி சியாவுல் கக் விமான விபத்தில் பலியானநாள்.
18.08.1948-இந்திய விடுதலைவீரன் சுபாஸ் சந்திரபோஸ் நினைவுதினம்.
20.08.1944-இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தி பிறந்ததினம்.
21.08.1940-சோவியத் புகழ் லியோன் றொட்ஸ்கி நினைவுதினம்.
25.08.1819-விஞ்ஞானி ஜேம்ஸ்வாட் நினைவுதினம். (1736-1819)
25.08.1865-விஞ்ஞானி மைக்கல் பிரேட் நினைவுதினம். (1791-1865)
26.08.1910-அன்னை திரேசா பிறந்ததினம்.
31.08.1997-பிரித்தானிய இளவரசி டயானா மறைந்த தினம் (1961-1997)
31.08.1952-குழந்தைகள் கல்வியின் புதியமுறைப் புகழ்த் தந்தை லூ.மரியா மொன்றசூரி நினைவுதினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள்:-

18.07.1826-பிரான்ஸ் நாட்டவரான யோசப் நியூபே என்பவரால் முதன் முதல் புகைப்படம் எடுக்கப்பட்டது.

19.07.1960-அமெரிக்க நாட்டவரான தியோடோர் மைமான் என்பவரால் முதன்முதல் லேசர்கதிர் கண்டுபிடிக்கப்பட்டது.

21.071885-ஜேர்மனியரான கார்ல் பென்ஸ் என்பவரால் முதன் முதல் கார் உருவாக்கப்பட்டது.

28.07.1924-பிரித்தானியரான எட்வின் கம்பிள் என்பவரால் முதன் முதல் சூரியபிரபஞ்சம் கண்டறியப்பட்டது.

03.08.1895-பிரான்ஸ் நாட்டவர்களான லூமியா சகோதரர்களால் நிழல்படக் கமரா கண்டுபிடிக்கப்பட்டது.

05.08.1438-ஜேர்மனி நாட்டவரான கூட்டன்பேர்க் என்பவரால் முதன் முதல் நவீன அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது.

22.08.1909-அமெரிக்க நாட்டவரான பெக்கிலாண்ட் என்பவரால் முதன் முதல் செயற்கை இழை பொருட் சரக்கு கண்டுபிடிக்கப்பட்டது. இதுவே பிளாஸ்டிக் உற்பத்திக்கு வழிகோலியது.

23.08.1896-நவீன ஒலிம்பிக்ஸ் போட்டிகள் கிறீஸ்லாந்து -ஏதென்ஸ் நகரில் ஆரம்பிக்கப்பட்டது.

---

## தகவல் துளிகள்:-

-உலகில் முதன் முதல் நிலக்கீழ் தொடரூந்து சேவை 1863ம் ஆண்டு பிரித்தானியாவில் ஆரம்பிக்கப்பட்டது.

-14.08.1914 தொடக்கம் 11.11.1918 வரை நீடித்த 1வது உலகப்போர் 1.561 நாட்கள் நீடித்தது. இப்போரில் சுமார் 1 கோடி படை வீரர்களும் 2 கோடி மக்களும் இறந்தார்கள்.

-ரோமானிப் பேரரசின் தலைவர்களான யூலியசீசர், அகஸ்டின்சீசர் ஆகிய இருவருமே, இன்று வழக்கிலுள்ள நாட்காட்டி அமைப்பதற்கு முதலில் வித்திட்டவர்கள். யூலை, ஆகஸ்ட் ஆகிய இரு மாதங்களும் இவர்களின் பெயர்களையே குறிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுடுக்கோ புதிர்ப் போட்டி முடிவு...

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 3 | 8 | 5 | 4 | 2 | 7 | 9 |
| 2 | 4 | 7 | 6 | 9 | 3 | 1 | 5 | 8 |
| 5 | 8 | 9 | 7 | 2 | 1 | 4 | 6 | 3 |
| 1 | 5 | 4 | 3 | 7 | 8 | 9 | 2 | 6 |
| 9 | 7 | 8 | 2 | 1 | 6 | 3 | 4 | 5 |
| 3 | 2 | 6 | 9 | 4 | 5 | 8 | 1 | 7 |
| 8 | 3 | 5 | 1 | 6 | 2 | 7 | 9 | 4 |
| 4 | 9 | 2 | 5 | 8 | 7 | 6 | 3 | 1 |
| 7 | 6 | 1 | 4 | 3 | 9 | 5 | 8 | 2 |

## சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி முடிவு...

| | | | |
|---|---|---|---|
| தி | ங் | க | ள் |
| த் | று | ற் | கா |
| க | டி | ப | க |
| அ | ன் | னை | ம் |

## குறுக்கெழுத்துப் போட்டி முடிவு...

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தா | ய் | லா | ந் | து | ள | சி |
| ய் | பா | ப் | கோ | ரி | ட | கோ |
| நா | வ | ல | ர் | யோ | யா | ணே |
| டு | கு | ர | த | த | னா | ஸ் |
| ட் | ள | ன் | நா | ன | கா | வ |
| ணா | மி | னா | சு | ன் | ச | ர |
| ப | கு | டி | யே | ற் | ற | ம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணக்குப் புதிர்ப் போட்டி முடிவு...

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | × | 3 | + | 5 | = | 11 |
| + | | × | | + | | |
| 4 | + | 7 | − | 1 | = | 10 |
| + | | − | | + | | |
| 9 | − | 6 | × | 8 | = | 24 |
| = | | = | | = | | |
| 15 | | 15 | | 14 | | |

## இரண்டு படங்களுக்கிடையிலான 8 வித்தியாசங்கள்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலம் மாறிப் போச்சு!...

அவசர வாழ்வு அவதிப் பொழுது
அனைவரும் ஒன்றாய்க் கூடி அமர்ந்து
அன்பாய்ப் பேசி அணைத்து மகிழ்ந்து
அகமதிப் பகிர கணமது இல்லை

அன்னை தந்தை அன்பு மக்கள்
அனைவர் பேச்சும் குறுஞ்செய்தியாகி
அனைத்துக்கரத்திலும்தவழ்ந்துநிற்குது
ஆளுமைகொண்டு கைத்தொலைபேசி

அடித்துப் பிடித்து வாங்கிய வீட்டில்
அளைந்து குழைந்து இன்பத்தை நுகர
ஆளரவற்று வெறுமையாய் நிற்குது
அழகிய உறவுகள் ஆலாய்ப்பறக்குது

குடும்பம் என்ற குவலயம் மறந்து
தனியே பேசுறார் தாமே நகைக்கிறார்
ஓய்வினைத்தேடி கணனியை நாடுறார்
உலகேகைக்குளெனஎக்காளம்போடுறார்

முகநூல் பார்த்து வாழ்த்து வழங்கிறார்
முன்னிற்கும்உறவின் உன்னதம்அறியார்
காலத்தின் நியதி ஞாலத்தில் மாற்றம்
கண்டதும் கேட்பதும் மனதின் ஓலம்

அன்றைய ஆயுள் தொண்டு ஆழமாய்
இன்றோ உடலில் புதுப் புது நோயாய்
அரைகுறையாக ஆயுளும் முடியுது
இதுவும் இங்குகாலத்தின் மாற்றம்!..

திருமதி கீத்தா பரமானந்தன்
ஜேர்மனி.

## திரும்ப கிடைகும்....

தமிழர் என்பது நம் இனம்
தமிழில் க் , ச் என்று
வருவது வல்லினம்
ங் , ஞ் என்றால் மெல்லினம்
ய் , ர் என்பது இடையினம்

வளைக்க முடியாதது அந்த வானம்
உடைக்க முடியாதது கானம்
தொலைக்கமுடியாததுகல்வி ஞானம்
தொலைக்கக் கூடாதது மானம்

குடிக்கக் கூடியது குளிர்பானம்
செய்ய கூடாதது பிறரை ஏளனம்
எங்கும் தாவிப் பாயும் மனித மனம்
பிறருக்கு கொடுத்தால்
திரும்ப கிடைகும் கனம்...

கவி மீனா- ஜேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டைப்படக் கவிதை (மண் இதழ்-177)




கலக்கத்திலிருந்து மீட்டெடுத்திடும் கனிந்துவருகின்றமனத்தெளிவு
காலகாலமாய் கொண்டாடிவரும் தொழிலாளரின் மனஉறுதிப்பிழிவு
குழப்பத்திலிருந்து உருவாக்கிக் கொண்டதால் உருவானஅதிர்வு
குரோதங்களின் உச்சமே முள்ளிவாய்க்காலில் தமிழினத்தின் அழிவு.!

உலகத்தின் வீதியெங்கும் செங்கொடியுடனான எழுச்சிக் கோசங்கள்
உள்ளூரின் வீதியெங்கிலும் செங்குருதியினால்த் தீட்டியகோலங்கள்
கலகத்தில் கிடைத்த வெற்றியால் களிப்போடு நீளுகின்ற ஊர்வலங்கள்
கயவர்களின் துவேசத்தினால் கரியாய்ப்போனதோ தமிழரின் உடலங்கள்..

வான்எட்டும் மேதின மகிழ்ச்சிக்கோசமிங்குவரை முட்டும் மரணக்கோலம்
தேன் சொட்டும் வெற்றிஜாலம் தீராதோ எங்களினத்திலினிமரணஓலம்
வரையட்டும் மனஉறுதிப்பாடம் வளராதோ தமிழரின் ஒற்றுமைப்பாலம்
தீரட்டும் பகைமைக் காலம் சிதையட்டும் இனிவன்முறைக் கலாச்சாரம்.!

பேசட்டும் உலகத்தின் உதடுகள் பிறக்கட்டும் அமைதியின் நாதங்கள்
பாரெட்டும் நயவஞ்சகரின் பாதகங்கள் படரட்டும் நீதியின் நற்பாதங்கள்
பரவட்டும் மனிதத்தின் ஈரங்கள் பகிர்ந்திடட்டும் உரிமையின் கீதங்கள்
சிதறட்டும் மனங்களில் சங்கடங்கள் நிறையட்டும்தேசத்தில் மங்கலங்கள்.!

-அம்பலவன்புவனேந்திரன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருகிய நினைவுக்காடு....

(அம்பலவன் புவனேந்திரன்)

ஏதேதோ தேசங்களில்
ஏவரெவருக்கோ பூபாளத்துடன்
பூக்கும் புதியநாட்கள்..
இங்கு,முகாரியே முனகி
முழு ஜீவிதத்தையும்
விழுங்கிவிடும் என்று
ஏக்கமும் பதற்றமும்
ஆடிவயிற்றைஅன்றாடம் பிசையும்..
ஆடியின் ஆட்டம்
அட்டையாய் ஒட்டிக்கொண்டு
விழிகளுக்குள் நெளியும்..
தீ தின்ற உடலங்கள்
தெருவெங்கும் சருகாக..
கதறலும் கண்ணீரும்
காற்றினை உருக்கி
காதுகளுக்குள் திராவகமாய்
திராணியற்று இறங்கும்..
காரிருள் கசங்கியதால்
கணப்பொழுதையே போர்த்தும்..
உள்ளங்கைக்குள் உயிர்மூச்சு
உதிர்ந்துவிட உதறலெடுக்கும்..
வேர்களை விட்டுவிட்டு
விழுதுவிட்டு மரங்கள்பல
வேட்டிச்சாய்க்கப்பட்ட விபரீதம்..
கொடுமைகளின் கும்மாளம்
கொடி பிடித்தலைந்தன..
சிங்களச் சிம்மாசனங்கள்
சிரித்தபடி அமர்ந்தன..
உலகத்தின் காதுகளுக்கு
எட்டாதசெய்திகள்
உதிரத்தால் எழுதியே
உமிழ்ந்தது காலவெள்ளம்..
தாலியைப் பறிப்பதற்காய்
தலைகளைக் கொய்தனர்..
தமிழ் வார்த்தை கேட்டவுடன்
தரையில்ப் போட்டு
மிதித்தனர்..
திலகமிட்ட மாதரைத்
தீவிரமாய் ருசித்த மிருகங்கள்
தீர்ந்த இச்சையுடன்
தீயிட்டு பொசுக்கின..
அடிவானம் கூட,
மூன்று தினங்களாய்
அழுதபடி சிவந்தேகிடந்தது...
நெடுநாளாய் புகைபிடிக்காத
நீலவானம் கூட
நிம்மதியாய் கரிப்புகையை
நிர்வாணமாய் ஊதியது...
உலகத்தின் உதடுகள்
உல்லாசபுரியென
உச்சரித்ததை மறந்து
மௌனத்தை அடைகாத்து
மாற்றுதேசத்தைத் தேடின..
நீர் சூழ்ந்ததீவில்
நீதியையும் மனிதத்தையும்
மிதித்தே கொன்றனர்..
தீபகற்பத்தின் வடக்கும் கிழக்கிலும்
தீக்குஞ்சுகளை வளர்த்தனர்..
புத்தரின் புத்திரர்களுக்கு
புத்திகெட்டது இன்றல்ல..
அரைநாற்றாண்டுக்கு மேலாய்
அக்கினி மூட்டிய சிங்களம்
அன்னைத் தமிழினத்துக்குக்
கறையைப் படியவிட முயன்று
கரியைப் பூசிக்கொண்டது..
நினைவுக்காடு கருகுகிறது
நீர்சொரிவதற்கு மேகங்களில்லை..
நிலத்தினில் விழுந்த வீரியவிதைகள்
நிட்சயமொருநாள் விருச்சமாகும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொலைந்து போன கடிகாரம்-----

நகரும் நாளின் உரிமையாய்
பொழுதும் புலரும்
உன்தோழி கடந்தவை
அனைத்தும் கழிந்தவையே
தொலைந்து போன கடிகாரம்
போலேநகர்ந்து சென்ற
நாளெல்லாம்இழந்து போனேன்
உயிர்ப்பின்றிஇனியும்
தொலைந்து போக
அனுமதியாதொடராமல்
விடேன்-உன்னோடு
ஒயாமுள்ளில் ஒசை தந்து
ஒய்வின்றி உழைக்கும்
திறனாளி நாளாய்
மணியாய் காலமுமாய்
ஆண்டாய் மாற்றும்
சக்தியேநானும் உந்தன்
குடைநிழலில் நனைந்து
போன மழைத்துளியே
வீணாய் எதுவும் விலத்தாமல்
எழவேன் எழவேன்
விநாடியெல்லாம்பூவாய் பூத்தால்
சரமாவேன் எழத்தாய்
மலர்ந்தால் காவியமாய்
உறவாய்த் தொடர்வேன்
உறங்காது உன் உரிமை
கொண்டு தயங்காது.

திருமதி வசந்தா ஜெகதீசன்
ஜேர்மனி

## கைக்கூ கவிதைகள்

கூடு:-
சுமையாக நடந்து செல்லும்போது
பாதுகாப்பு ஆமையின் கூடு...

நேயம்:-
அடைகாக்க அறியாவிட்டாலும்
காக்காவின் மனித நேயத்தின்
பிறப்பு குயிலினம்...

கச்சேரி:-
மழையின் பின் தொடரும் இசையும்
இனிமையாக ரசித்துக் கேட்டேன்
தவளையின் பாட்டுக் கச்சேரி...

காளான்:-
மழையில் நனைந்து கரையாமல்
குடையாக உதவுவது
காளான் மொட்டுக்கள்...

தாமரை:-
சேற்றில் மலர்ந்தும் சேறு ஒட்டவில்லை
தண்ணீர்பட்டும் ஒட்டவில்லை தாமரை..

தாய்:-
நிலாவைக்காட்டி அழும் குழந்தை
அமாவாசை வந்துவிடும் தயங்கும்தாய்..

மலர்கள்:-
தோட்டம் அழித்துக் கட்டிய கட்டிடத்தில்
அழகிய தழைகளுடன் மலர்கள்...

கள்ளிப்பால்:-
தாய்ப்பாலுக்கு அழும் பெண்குழந்தை
தாயானவள் ஊட்டுகிறாள் கள்ளிப்பால்..

திருமதி.ஜெயா நடேசன்
ஜேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிப்போம்!...கொஞ்சம் சிரிப்போம்!...

("சிரித்திரன்" சுந்தரின் கேள்வி-பதில்)




1)ஐந்து விரல்களுக்கும் மோதிரம் அணிபவர்கள் பற்றி?...
பதில்:- நவீன "பொற்" கைப் பாண்டியர்கள்.

(2)தமிழ் சமூகத்தில் சீதனம் கொடாமல் ஒரு பெண் திருமணம் செய்தால்.?..
பதில்:- மாமியாரிடம் மங்களம் பெறுவாள்.

(3)1958 இனக்கலவரத்தின்போது தமிழர்களைத் தாரில் குளிப்பாட்டினார்களாமே?...
பதில்:- அது "தார்" மீகம்.

(4)பணக்காரப் பெண்ணுக்கும் ஏழைப் பெண்ணுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?...
பதில்:- பணக்காரப் பெண் அன்னநடை....ஏழைப்பெண் அன்னத்திற்கு நடை.

(5)குடிகாரனுக்கும் யோகிக்கும் உள்ள ஒற்றுமை என்ன?...
பதில்:- இருவரும் தண்ணியில் நடப்பவர்கள்.

(6)உமக்குப் புரியாதது எது?...
பதில்:- விவாகரத்துப் பெருகும் உலகில் எவ்வாறு சனத்தொகை பெருகுகிறது என்பதுதான்.

(7)காலால் அடிக்கும் கராத்தேக்காரன் பற்றி உமது கருத்து என்ன?..
பதில்:- வயிற்றில் அடிக்கும் கடைக்காரர்களைவிட நல்லவன்.

(8)நம்மவர்கள் ஜீவகாருணியம் உள்ளவர்களா?...
பதில்:- ஆம்...அம்மாவும் அகதியும் பட்டனி கிடக்க...தங்கக் கத்தியால் கேக் வெட்டிப் பிறந்தநாள் கொண்டாடுவார்கள்.

(9)நதி ஓரத்தில் பிறந்த நம் நாகரீகம் இன்று எங்கே வந்து நிற்கிறது?...
பதில்:- தண்ணியில் மிதந்து போதைவஸ்த்தில் வந்து நிற்கிறது.

(10)கலியாணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறதாமே?..
பதில்:- அப்போ வாங்கும் சீதனத் தொகையும் சொர்க்கத்திலா?.. நிச்சயிக்கப்படுகிறது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி-152
(ஆடி + ஆவணி -2016)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ:-
01-05-அதிகமான சுற்றுலாப் பயணிகள் சென்றுவரும் ஆசிய நாடு ஒன்று.
05-07-செடி வகையைச் சேர்ந்தது.
15-18-வேதாகமம் (பைபிள்) நூலை தமிழில் மொழிபெயர்த்தவரின் செல்லப்பெயர்
44-49-இடம்பெயர் மக்களின் மீள் இது இடம்பெறாததால் இன்றும் நம்மக்கள் வாழ்வு அவலம்தான்.

வ-இ:-
11-08-வடமாகாணத்தில் ஓர் ஊர்.
14-12-கூரிய ஆயுதம் ஒன்று.
25-23-வியாபாரி - விற்பவரிடையே சிலர் இது பேசுவர்.
32-31-சிலர் எப்பொழுதும்.........என்று அகங்காரம் கொள்வார்கள்.
39-37-மறக்கமுடியாத பேரழிவைத் தந்த இயற்கை அனர்த்தம்.

கீ-மே:-
37-23-வாசனைத்திரவிங்களில் ஒன்று.
41-27-பெண் ஒருவரின் பெயர்.
43-22-பனம் பண்டங்களில் ஒன்று.
46-18-மக்கள் அமைதியாக வாழ நல்ல போதனைகளைத் தந்தவர் இவர்.

மே-கீ:-
01-22-எவ்வளவு செல்வங்கள் இருந்தாலும் இந்த நாட்டைப் போல் வருமா..
05-40-இலக்கியத்தில் ஒருவர்.
13-27-பிரித்தானிய இளவரசி ஆனால் இவர் இப்பொழுது உயிருடன் இல்லை.
14-49-இலங்கையில் பாடல் புகழ்பெற்ற இந்துசமயக் கோவில் ஒன்று.

இப்போட்டியின் விடைகளைக் கண்டுபிடியுங்கள்..முடியாவிடின் பக்கங்களைப் புரட்டினால் விடை கிடைக்கும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரளிப் பூ



இது ஒரு நஞ்சு நிறைந்த பூ மரம் வெள்ளை சிவப்பு என இரு நிறங்களில் நான் கண்டிருக்கிறேன் அரளியிலும் செவ்வரளி பொன்னரளி என்றும் பல நிறங்களிலும் இருக்கின்றன என்பதை நான் வாசித்து அறிந்துள்ளேன் இந்தப் பூவை பெண்கள் தலையில் சூடுவதில்லை கோயில்களுக்கு அர்ச்சனைக்காகவே கோயில் நந்தவனங்களிலும் வளர்க்கப்படுகின்றன ஊரில் இது காடு கரம்பு குளக்கரை வாய்கால் ஓரம் என எங்கும் காணப்படும் இந்தப் பூ மிக அழகாக இருக்கும் இருந்தும் வீடுகளில் இதை வளர்க்க பெரிதும் யாரும் விரும்புவதில்லை காரணம் பயம்தான்.

இதில் பூ முதல் வேர் காய் வரை நஞ்சுத் தன்மை இருப்பதால் அதை தெரியாமல் தன்னும் யாராச்சும் பிள்ளைகள் தொட்டு அளைந்து வாயில் வைத்தால் மரணிக்க நேரிடும் என்ற பயத்தில் இந்த மரம் வீடுகளில் வளர்ப்பது குறைவு. ஆனால் கோயிலில் அர்ச்சனைக்காக இந்தப் பூக்களை பறிக்கிறார்கள் அல்லது யாராச்சும் தற்கொலை செய்ய விரும்புபவர்கள் இந்த மரத்தின் காய்களைப் பறித்து அரைத்துச் சாப்பிட்டு இறப்பதாகப் பல தமிழ்ப் படங்களில் காட்டுகிறார்கள்

இதை ஜேர்மனியில் ஒலியாண்டர் ( Oliyander ) எனச் சொல்வார்கள் இது இங்கு விலை உயர்ந்த பூக்கண்டு இங்கு கோடைகாலங்களில் வெளியில் வைக்கலாம் குளிர்காலங்களில் சட்டியில் வளர்க்கும் பூக்கன்றுகள் உள்ளுக்கு எடுத்து வைக்காவிடில் பட்டு விடும்.நஞ்சு மரம் என்று தெரிந்தும் நானும் இங்கு வீட்டுமாடியில் (பல்கனியில்) வைத்து வளர்கிறேன் நச்சுப் பாம்புக்கு பால் ஊத்தி வளர்ப்பது போலே தண்ணி ஊத்தி வளர்கிறேன் மரம் தானாக வந்து என்னை கடிக்காது என்பதால் கண்ணை பறிக்கும் அழகான பூவுக்கு இப்படி ஒரு நஞ்சுத் தன்மையா? என சிந்திக்க தோன்றுகிறது கண்ணுக்கு அழகாக இருக்கிறது என்று நாம் எதையும் ஆசை படக்கூடாது என்பதற்கு இது ஒரு இயற்கையின் எடுத்துக்காட்டோ? இறைவனின் படைப்பில் எத்தனை புதுமை?..

கவி மீனா - ஜேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்!...

ப.பசுபதிராசா - ஜேர்மனி.

நாம்கொண்ட ஒரு இலட்சியமோ அல்லது ஒரு கொள்கையோ வெற்றி என்பதைவிட அதை நிறைவேற்றிக் காட்டுகின்றவழி அவ்விலட்சியத்தைக் காட்டிலும் சிறப்பானதாக இருக்க வேண்டும். அப்போதுதான் அவ்விலட்சியத்துப் பாதை சடுதியில் பின்னடைவைச் சந்தித்தாலும், நாளடைவில் பெரும்பாலும் அக்கோட்பாடு ஏற்றுக்கொள்ளப்படும் ஓர் நியாயமாக அங்கீகாரம் பெறும். செகுவேரா என்ற புரட்சிக்காரனின் சிந்தனைகளை அவன் முழுமுதல் எதிரியான அமெரிக்கா அன்று வன்மையாக நிராகரித்திருந்தாலும் இன்றைய அமெரிக்க இளைஞனின் எண்ணங்களில் எளிர்ச்சியூட்டும் நவீனம் வடித்திருந்த சிந்தனைச் சிற்பியாக செகுவேரா வலம் வருகின்றான்.

தென்னாபிரிக்கத் தேசிய காங்கிரசின் தீவிரவாத இளைஞனாகக் குற்றம்சாட்டி சிறையில் அடைத்தே பிரித்தானிய ஏகாதிபத்தியம் இருபத்தேழ வருடங்களாக மக்களுக்காக மண்டலே காட்டிய மன உறுதிக்கு ஒருநாள் எதிரியே செங்கம்பளம் விரித்து வரவேற்க வந்த காலச்சூழலும், அண்ணல் காந்தி சொந்த மக்களாலேயே சுட்டுக்கொல்லப்பட்டபோது....காந்தி எங்களிடம் மிகவும் பாதுகாப்புடனும் கௌரவத்துடனும் இருந்தாரே என பிரித்தானியப் பிரதமர் வில்லியம் சேர்ச்சில் மனம் நொந்ததும் கொள்கையைவிட அதை வழிநடத்தி வந்த ஆளுமை ஏற்படுத்திய வண்ண...வண்ணப் பூக்கள் என்பதை மறுப்பது யார்!...

இந்த இருபத்தொராம் நூற்றாண்டின் ஆரம்பம் மொத்தமாக ஒரு மனிதகுலத்தை தின்று முடித்தது என்றால் அது இலங்கைத் தமிழ் மக்களாகிய எங்களைத்தான். ஆனால் தமக்கு அளிக்கப்பட்ட அந்தச் சோதனைகளையே சாதனைகளாக்கிக் காட்டுவதில் இணையற்றவர்களும் அவர்களே. இச்சாதனைகளை இவர்கள் நடாத்துவதற்கு இவர்கள் வாழும் புலம்பெயர் நாடுகளின் அற்புதமான பாராபட்சமற்ற, நீதியான நிர்வாகங்கள்தான் காரணம். தமிழர்களின் கைகளிலே அதிகார மையங்கள் இருந்து அந்த ஆளுமையின் பிரதி விளைவாக இதுவரை எண்ணற்கரிய மரணங்கள் நேர்ந்திருக்கிறதேயன்றி ஒருவன் அதனால் சிறப்படைந்தான், அல்லது உயர்வடைந்தான் என்ற பெருமை இதுவரை பதிவாகவில்லை.

உலகமெல்லாம் தமிழ்மக்கள் பெரும்பான்மையாக இருந்தும் அந்நாட்டின் வேறு இன மக்களின் ஆளுமைக்குட்பட்டு வாழ இயற்கை பணிக்கின்றது. குறிப்பாக சுமார் ஏழகோடி மக்களைக்கொண்ட தமிழ் நாட்டின் உயர் அரச பதவியை ஏழபேரைக்கூட கொண்டிராத ஒருபிறமாநில மக்களை ஆளவந்த விதி அழகாகக்காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பேற்பட்ட அற்புதமான, நேர்மையான,நீதியானவற்றை நாம் புலம்பெயர் நாடுகளிடம் இருந்து கற்றுக்கொள்ள முன்வரவில்லை என்பது மட்டுமல்ல, அதை எதிர்காலச் சந்ததியினரிடத்தும் வந்து சேர்ந்துவிடாமல் அவர்களுக்கும் மூளைச்சலவை செய்கின்றோம். இதில் இன்னோர் ஆபத்து என்னவென்றால் எங்கட கலாச்சாரம், பண்பாடுதான் மிகவும் சிறந்தது என்று மேடை ஏறுகின்ற எவரும் பேசாமல் விடுவதில்லை என்பதுதான். எல்லாக் கெட்டபழக்கங்களையும் தானாகத் தெரிந்துகொள்ளும் நாம் சீதனம் வாங்கும் நிலை வரும்போதுமட்டும் அம்மாவிற்குப் பின்னால் அப்பாவி இளைஞனைப் போலிவேஷம் போட்டு அம்மா விடாப்பிடியாக நின்றபடியால்தான் நானும் சீதனம் வேண்டவேண்டிவந்தது என்று நாக்கூசாமல் கூறும் இந்தத்தமிழ்ப் பெடியளைவிட வயதுவந்த இருவர் மனமொத்தபடி அவர்களுக்குள் இருக்கும் திறமைகளைப் பகிர்ந்துகொண்டு, புரிந்துணர்ந்து வாழ்வதில் என்ன தவறு. உங்கள் கலாச்சாரத்தில் சீதனம் கொடுத்தும் இறந்துபோன உயிர்களைவிட அவர்களின் எண்ணங்களால் யாரும் மரணிக்கவில்லை. அதுதான் பண்பாடு.

ஒரு நன்கு படித்த நற்பழக்க வழக்கமுள்ள ஒரு பின்தள்ளப்பட்ட இளைஞனை, படிக்காத பண்புகெட்ட ஒரு உயர்சாதிப் பெண் மணக்க, மரணித்தாலும் வரமாட்டாள் என்றபின் சமூக முட்டாள்தனங்களின் அமுக்கம் கூடிக்கொண்டே போகும். நான் என்ன சொல்ல வருகின்றேன் என்றால்...ஒரு இனம் எல்லாவற்றையும் தெரிந்துகொண்டுதான் பிறக்கும் என்றில்லை. ஆனால் நாம் வாழும் சமூகங்களிடம் நன்மை இருக்கும் எனக்கண்டால் அதையும் நாம் அறிவின் உயர்வுக்குச் சேர்த்தால் நல்லது நமக்கு.

இப்போது பலருக்குப் புதிய ஞானம் பிறக்க ஆரம்பிக்கின்றது. அதுதான் இருகோட்டுத் தத்துவம். முன்பு தங்கள் பிள்ளை ஒன்று பின்தள்ளப்பட்டவனைத் திருமணம் செய்யத்தடுத்த பெற்றோர்கள் இப்போது தங்கள் பிள்ளைகள் மிக வேகமாக வெள்ளைக்கார மக்களைத் திருமணம் செய்துகொள்ளத் தொடங்குகின்றபோது..அட!..இவன் தமிழன்..இருந்துவிட்டுப் போகட்டுமே எனப்பிள்ளைகள் விலகிப்போகும் துயரம் கருதியும் அவர்கள் தம்மை விட்டுவிட்டுப் போய்விடுவார்கள் என்ற கூடுதல் எண்ணம் ஏழைகளையும் ஏறெடுத்துப்பார்க்கவைத்துவிட்டது. ஆனால் நீங்கள் தடுத்தாலும் மாற்றம் வரும்.

தமிழர்கள் புலம்பெயர் நாடுகளுக்கு வந்ததும் அவர்கள் தம் சொந்த பந்தங்கள் ஒன்றுகூட உடனடியாக எடுத்துக்கொண்ட அமைப்பு வடிவம் என்பது கோவில்களை உருவாக்குவது. அதுதான் தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதி மேலாண்மைகளை ஊரிலிருந்து கற்றுக்கொண்ட செப்படி வித்தைகளை இங்கு விதைபோட அமைத்த முதல் வடிவம். அகதி என்பது மற்றவர் பார்வையில் அவமானமாக இருந்தபோது அதற்கும் அந்தஸ்த்து பெருமை கண்டவன் தமிழன்.

அந்த அகதி அந்தஸ்த்தை தனது குடும்ப உறுப்பினர் அனைவருக்கும் வாங்கித்தந்தவன் யாழ்ப்பாணத்தமிழன். ஆயினும் அநேக தமிழர்களுக்கு இன்னும் சொந்தவீடு இல்லை. இன்னும் சொந்தத் தொழில் இல்லை. அவன் எதிர்காலத் தலைமுறையினருக்குப் பாடம்சொல்லிக்கொடுக்க தெரிந்தவனுக்கு சொந்தமாய் ஒரு பள்ளிக்கூடம் இல்லை. ஆனால் நிலவறைகளிலிருந்து எழுந்தருளிய அவன் சமய சாமிகளுக்கு மட்டும் பல ஏக்கர்களில் இருந்து மாடமாளிகைகளாகக் கோடகோபுரங்களாக சொந்தமண்ணின் மக்களே வாயைப்பிழந்து வானளாவிக்கிடப்பது அந்தக் கடவுளுக்கே தெரியாத சூட்சுமம்.

இப்போதும் பற்பல சாமிகளுக்கு வசந்தம் பிறந்தால் வாழ்வு பிறக்கும். எந்தக்கடை வாசலிலும் கோவில் விழாக்கால விஞ்ஞாபனங்கள். எந்த வானொலியைத் திருகினாலும் அந்தக்கோவில்களின் அருள்மழையின் விளம்பர விகிதங்கள். கடைகளின் ஆடைகளுக்கான அரைச்சலார்கள் என அற்புதம் வழிகின்றன. கடவுள் நம்பிக்கையை மட்டும் நம் மக்களின் மனங்களிலிருந்து அகற்றிவிடுவது அவ்வளவு சுலபமல்ல. ஒரு கடவுள் அருளைக் குறைவாகத் தருகின்றது, இன்னோர் கடவுள் அருளைக் கூடுதலாகத் தருகின்றது என்று முட்டாள்தனமாகக் கூறினாலும் அது உண்மை என்று ஏற்று உடனடியாக மதம்மாறுபவர்கள் ஆயிரம்... ஆயிரம்.

ஆனால் கடவுள் இல்லை என்பவனையே ஏற்கும் ஒருசிலர்கூட அந்த நாத்திகனுக்கும் விபூதி பூசி, சாம்பிராணி கொழுத்திக் கும்பிடும் கடவுள் மார்க்கத்தைக் கைவிடமுடியாத மறுப்பாளர்கள். என் பகுத்தறிவுத்தந்தை, அறிவின் ஞானப்பகலவன் பெரியாரைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாட்டு மக்கள் தொண்ணூறு வீதமானவர்களும் கடவுள் நம்பிக்கை கொண்டவர்கள் என்பது ஆச்சரியமான உண்மையே. தந்தையின் அதிரடி முற்றுமுழுதான மாற்றத்தை நீண்டகால கடவுள் அடிமைத்தனம் நின்று நிதானித்து வென்றுவிட்டது என்பதே உண்மை.

இப்படிக் கடவுள் வழிபாட்டில் காலமாற்றம் காணும் தமிழன் தன் மனமாற்றத்தைக் கடுகளவேனும் மாற்றமுடியாமல் படுகுளியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடப்பதும் ஏன்?.. விழாக்காலங்களில் இப்படிப் பெட்டி பெட்டியாகப் பழங்களைக் கொண்டுவந்து குவித்துவிட்டுப் பின்பு பகிர்ந்தளிப்பது என்ற பேரில் பழங்களை எறிந்து விளையாடுவதும் ஏன்?..மக்கள் ஒரு மாம்பழத்திற்காக மண்டைகளோடு மண்டை உடையும் மார்க்கம் கடவுளை அடையப் பணக்காரர்கள் போடும் பக்தி வேஷமா?...பகல் வேஷமா?...

அல்லது ஆண்டான் அடிமைச் சாத்தியப்படாத இந்த மண்களில் காசை வைத்துக் காட்டிவிட்டுப் போகும் கேடு கெட்ட செய்கைகளுக்குக் கடவுள் போர்வையா?.. என் அன்பான மக்களே நாம் பலா மரத்தையும் வாழை மரத்தையும் மாமரத்தையும் வீட்டில் வைத்து வளர்ப்பதற்காக நாட்டிற்கே பணத்தை வரியாகக் கட்டிய உலகப்பெருமக்கள். அப்படி நாடு கட்டிப்போ் ஆண்ட மக்கள் கோவில் வாசல்களில் கட்டப்பட்டிருக்கும் வாழைப்பழத்தைப் பலர் பார்க்கக் களவெடுத்து உண்கின்றோம்.. பழங்களோடு பழங்களாகப் பிசையப்படுகின்றோம். இனிமேல் வேண்டாம் இந்த விபரீதங்கள். ஒரு தாா்ப்பூசணித்துண்டு கிடைக்காமலா வெளிநாடு வந்தீர்கள். நம்மை அளக்கும் கருவிகளை அவதானியுங்கள்.

அந்த ஆலயபிரதம குருக்கள் ஐயாமீது எனக்கு மிகவும் மரியாதை. ஒரு செயல் வீரன். என் நண்பனின் கோழைத்தனத்தை மதிப்பதைவிட ஒரு எதிரியின் திறமையினை மதிப்பவன் நான். அந்தப் பெருமகன் தேரில் இருந்தபடி இப்படிச் செய்யாதீர்கள் என இரந்து வேண்டினும் யாரும் அவர் சொல்லை மதித்தாய் இல்லை. இப்படி உருவாக்கியவன் எண்ணங்களைவிட இவ்வாலயங்களைத் தங்கள் இஷ்டத்திற்கு இழுத்துச்செல்லும் அயோக்கியர்கள் அழிய ஆரம்பமாகிவிட்டனர்.

பட்டாடைகளும் வயிறுமுட்டத் தொங்கும் சங்கிலிகளும் போட்டுக்கொண்டு பழையபஞ்சாங்க பஞ்சாட்சரங்கள் பாதை வருகின்றனர். பள்ளிக்கூடங்களுக்குக் கொள்ளி சொருகிவிட்டு நாட்டில் ஏழை எளிய மக்களுக்குச் சுடுகாட்டுப்பாதை திறந்து வைத்துவிட்டு, இலக்கியக் குப்பைகளை கோவிலிலும் குடமுழக்குச் செய்துவிட்டு, தன் தம்பட்டம் அடிக்கும் இந்தச்சாதி எத்தன்களை இனம்காண யாரால் முடியாவிட்டாலும் ஒரே ஒரு பேனா தன் ஊற்றுக்கண் திறந்து மூச்சை உள்வாங்கி நின்று கொண்டே இருக்கும். அந்தப்பேனா ஒரு வினா?.........

------------------------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி சொல்லல் தமிழர்பண்பா?....

திருமதி.கெங்கா.ஸ்ரான்லி.ஜேர்மனி

கலாச்சாரம் ,பண்பாடு பற்றிப் பேசும்நாம் அதைக் கடைப்பிடிக்கிறோமா? என்றால் அதுதான்இல்லை. மேடைப்பேச்சு, கதிர்வீச்சுவேகம் குறைந்தால் புயல்போச்சு ஆக நடைமுறையில் காணமுடியவில்லை. நாங்கள் ஒழுக்கசீலர்தான், இருந்தாலும் புலம்பெயர்நாட்டில் , புதுமோகங்கள், மோகங்கள் பரவாயில்லை. ஆனால் ,மற்றநாட்டவரிடம் உள்ள நற்குணங்களையும் பின்பற்றலாமே. அன்னம் பாலையும் நீரையும் பிரிப்பதுபோல நாம்செய்யமாட்டோம். அவர்களிடையேயும் பண்புகள் இருக்கின்றன. அதையும்நாம் எடுத்துக்கொள்ளலாம் நாகரிகம்தான்முக்கியமல்ல. நாகரிகத்தோடு பண்பும் முக்கியம்.

எம்மவர் பண்பாடு உடையவர் என்றுசொன்னாலும், அவர்களிடம் அந்தநன்றி என்றவார்த்தை பிரயோகிக்கப்படுவதுஇல்லை. ஒருஉதவிசெய்தால் அதற்கு நாம்நன்றி கூறவேண்டும்.அப்போஉதவி செய்பவர் மனதிலும் ஒருமகிழ்ச்சி உண்டாகும்..அடநான்செய்த உதவிக்கு அவர்நன்றிகூறிவிட்டாரே என்று. இப்படிபார்க்கையில் நன்றிகூறுவது, பிரதிபலனை எதிர்பார்ப்பதாகக் கருதக்கூடாது. மனதிற்கு ஒருமகிழ்ச்சிதருவதே.ஒருவர் நமக்கு ஒருஉதவியைசெய்தால் அதைப்பெற்றுக்கொண்டு,அவரைப் புறந்தள்ளல், நாகரிகமன்று, பண்பாடும்இல்லை. அவர்மனம் நோகும்.அவர் நினைப்பார் நான் இவ்வளவும்செய்தும் ஒருவார்த்தைகூடச் சொல்லவில்லையே என்று!.

இந்நாட்டவர்கூட எனது சகதொழிலாளி, உரையாடும்போதுகூறினார். தான்தனது உறவுக்கு,எவ்வளவு உதவிசெய்தேன். நன்றிஎன ஒரு வார்த்தை சொல்லவில்லையே என ஆதங்கப்பட்டார்.அதன்பிறகே எனது சிந்தனையில்தட்டியது. நானும்அவதானிக்கத்தொடங்கினேன். நம்மவரிடம இதுஎந்தஅளவு நடைமுறையில் உள்ளது என.குறைவாகவே உள்ளது.ஒருசிலர் தமதுகொண்டாடங்களில் மற்றவர்களிடம் உதவிபெறுவார்கள். ஆனால் அந்த உதவியைச் சிரமத்தின் மத்தியில் செய்தார்களே அவர்களுக்கு ஒரு நன்றியைச் சொன்னால் மனம்குளிரும்,அவர்கள் பட்டசிரமம் ,இன்றைய வாழ்வின் கடுகதி, வேலை, நேரம் பற்றாக்குறை, இதுவெல்லாம் நன்றி என்ற வார்த்தையில் மூழ்கிவிடும் ஆனால் அதைச்சொல்வதில் ஏன்தயக்கம்.சிலர் படித்தவர்கள் ,ஆசிரியர் கூட நன்றி என்று கூறுவதில்லை. குரு வழிகாட்டிமாணவருக்கு அந்த ஆசிரியர் நல்லபழக்க, வழக்கத்துடன் நன்றி என்று சொல்லவேண்டும் என்பதையும் சொல்லிக்கொடுக்கவேண்டும்.ஆனால். சிலபேரிடம் அப்படிச்சொல்லும் தன்மை இல்லை அப்படியானால் அவர்மாணவர் சொல்வாரோ?.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிலே பெற்றார் பிள்ளைகள், உதவிசெய்தால் அதற்குநன்றி சொல்லவேண்டும், அதைபார்த்துப் பிள்ளைகளும் பழகிக்கொள்வார்கள். இதுவே தொடரும் நடைமுறை, அதைவிட்டுவிட்டு அது , இது எனக்கதைப்பதில் பிரயோசனமில்லை "செய்வனதிருந்தச்செய்" என்பதுபோல் பெரியவகளாகிய நாம் சரியாகச்செய்தால் எம்பிள்ளைகளும் அதைச்சரியாக பின்பற்றுவர். எல்லோரும் அப்படிசொல்வது இல்லை, என்றில்லை, சொல்லுபவர்களும் இருக்கின்றார்கள், சொல்லாதவர்களும் இருப்பதினால் இதை எழுதத்தோன்றியது. "ஒருபானை சோற்றுக்கு ஒருசோறுபதம்" .என்பர்,ஆனால் மேலே சோறுபதமாக அவிந்து இருக்கும் கீழே அடியில்கூட அவிந்தும் இருக்கும் அல்லவா ? அதேபோல் செய்கைகளும் அப்படியே. இதை விளங்கிக் கொள்ளாவிட்டால் குறைகூறலாம்,

ஆனால் இனிமேல் நன்றி என்று யார் சொல்லுகிறார் அது எந்தளவு, நடைமுறையில் நம்மவரிடம் உள்ளது என்று அவதானித்துப் பார்த்தால் விளங்கும். இன்றைய காலகட்டத்தில் செய்த உதவிகளை மறப்பது வழமையாகிவிட்டது. முன்புகால் செய்தஉதவியினை மறவாது சீர்தூக்கி பார்த்து நடந்தனர் நம்முன்னோர். அனால் இன்று நன்றி மறந்து வாழும் மாந்தர்தான் அதிகம், எல்லாரையும் கூறமுடியாது. பெரும்பான்மை அப்படித்தான் தோன்றுகின்றது-

எமதுபெற்றார் நமது முன்னோர் கூறியது போல் அறம், ஒழுக்கம், நன்றி மறவாமை, இப்படி எத்தனையோ நல்வழிகளைச் சொல்லிவளர்த்தனர். ஆனால் நாம் அப்படிசெய்கிறோமா?.. அல்லது சொல்லி வளர்த்தோமா?... தம்பிள்ளைகளை பெறறோர் சிந்திக்கவேண்டும். ஆகவே பெற்றோரே நீங்கள் முதலில் செய்யும் உதவிக்கு நன்றி கூறப்பழகுங்கள். பிள்ளைகள் அதைப்பார்த்து நன்றிகூறுவார்கள். பெற்றோரிடம் இல்லாத பண்பு பிள்ளைகளிடமும்வராது. அதனால் பெற்றோர் பண்பதனை மறவாது பேணிக்கொள்ளுங்கள். வளரும் அடுத்ததலைமுறை நன்றாக வளரட்டும்!...

-----------------------------------------

| | |
|---|---|
| ஈரடி!... | பெண்!... |
| அளவாகப் பேசும்<br>நிறைவான குறள்!... | கலையியலையும் களவியலையும்<br>கற்பித்துத்தரும் கலைக்கல்லூரி!.... |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பெண்களின் நிலை.....

திருமதி சிவகாமசுந்தரி கணேசநாதன்-ஜேர்மனி

இன்று உலகில் பெண்கள் பல சாதனைகளைப் புரிந்து கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. பெண்கள் பெருமைமிக்கவர்களாக உருவாகும் பொழுது அவ்வீட்டிலுள்ள அனைவரும் இயல்பாகவே பெருமையோடு உலா வர வழி ஏற்படும். "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்" என பெண்களின் குறிக்கோளை கூறியது மட்டுமல்லாமல் "எட்டும் அறிவினில் ஆணிற்கிங்கே பெண் இளைப்பில்லை காணென்று கும்மியடி" என்ற பாடலில் பெண்சமுதாயம் பெருமை பெற்றது. யுகம் யுகமாக முகம் பார்க்க மட்டுமே கண்ணாடி பார்த்த பெண்கள் கணிப்பொறித்திரையோடு உரையாடும் காலமிது. இன்று எந்தத்துறையை எடுத்துக்கொண்டாலும் சரி அதில் முன்னேறியுள்ள பெண்களின் பிண்ணணியில் இருப்பது கல்வி. இந்திராகாந்தி, அன்னைதெரசா, அன்னைபூபதி போன்றவர்களை உருவாக்கியது ஒரு பொறுப்பான தாய்தான் என்பதை உணரவேண்டும்

பெண் உலகின் விழிவெள்ளியாகத் திகழ்கிறாள்.மாதர்தம்மை அடக்கி வைக்கும் மடைமையை ஒழித்துவிடுபவளாக பெண் விளங்குகிறாள். முக்கியமான விடயம் ஒன்றை சொல்லியே ஆகவேண்டும். பாரதி வாழ்ந்த காலத்தில் பெண்களின் நிலைதான் என்ன? சொல்லவே நாக்கூசுகிறது. ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்று எண்ணியிருந்த காலமது என்பதையும் மறுப்பதற்கில்லை கிராமங்கள் ஆனாலும் சரி நகரமானாலும் சரி பாமரபெண்ணானாலும் சரி படித்தபெண்ணாலும் சரி இன்றைக்கும் பெண்களின் நிலை சில வகையில் மிகவும் இழிவாக மனவேதனைப்படும் விதமாக உள்ளது. இப்படிப்பட்ட பெண்களுக்கு எதிரான செயல்கள் தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

1789ஆம் ஆண்டு யூன் 14ந்திகதி சுதந்திரம், சமத்துவம், பிரநிதித்துவம் போன்ற கோரிக்கைகளை ஏற்று பிரஞ்சுப்புரட்சி நடாத்தப்பட்டது. 1848 பிரான்சில் புறுசியசில் இரண்டாவது குடியரசை நிறுவிய 'லூயி பிளாங்' பெண்கள் அரசவை ஆலோசனைக்குழுக்களில் இடம்பெறவும் வாக்குரிமை அளிக்கவும் ஒப்புதல் தந்த நாள் 1848 ஆம் ஆண்டு மார்ச்மாதம் 8ம்நாள். இதுவே அனைத்துலக பெண்கள்தினம் என அறிவிக்கப்பட்டு இன்று 167 வருடங்கள் ஆகியும் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகள் ஓய்ந்தபாடில்லை. ஆம் இந்த 20ம்நூற்றாண்டில் தமிழர் தாயகத்தில் நடந்தேறிய காட்டுமிராண்டி தனங்களை தட்டிக்கேட்க முன்வரவில்லை. இப்போது சிரியா, ஈராக் போன்ற நாடுகளில் வாழ்பவர்களை அந்நாட்டு குழப்பங்களுக்காக அடைக்கலம் கொடுக்க ஐரோப்பிய நாடுகள் முன்வந்துள்ள வேளை சிங்கள ராணுவத்தால் இலங்கையில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப்பெண்கள் அனுபவித்த பாலியல் வல்லுறவு துன்புறுத்தல் போன்ற பல்வேறு பிரச்சனைகளை இன்னும் எதிர்கொள்ளும் இந்நிலையில் ஏன் அடைக்கலம் கொடுக்கமறுக்கின்றதோ தெரியவில்லை. ஒவ்வொரு நாட்டுக்குள்ளும் கைக்கூலிகள் இதுதான் உண்மை.

எமது தமிழ்ச்சமுதாயம் பெண் என்பவள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு போன்ற கோட்பாடுகளுக்குள் இருப்பின் அவள்தான் பெண். இல்லையெனில் ஓடிப்போனால் ஓடுகாலி என்பதுவும் யதார்த்தமே. பெண் ஆணோடு சேர்ந்து பழகினால் அவளுக்கு வேசி எனவும் பிள்ளை பெற்றுக்கொடுக்கும் இயந்திரம் கருப்பை பழுது என்றால் அவள் மலடி என எத்தனையோ பட்டங்கள். இவ்வகையான இன்னல்கள் பெண்களின் வாழ்க்கையில் ஏற்படுவதற்கும் தரக்குறைவாக பேசுவதற்கும் பெண்கள் தடம்புரள்வதற்கும் ஆண்கள் எவ்விதத்திலும் காரணம் இல்லையா..

இன்றைய பெண் சமுதாயத்தை பீடித்துள்ள நோய்களுள் பலவற்றை குறிப்பிடலாம். வரதட்சனை, பால்யவிவாகம், பெண்சிசுக்கொலை, உடன்கட்டைஏறுதல்,போன்றவிவகாரங்களைகுறிப்பிடலாம்.பெண்சிசுக்கொலை நடந்தேறுவதற்கு முக்கியகாரணமே வரதட்சனைக்கொடுமையே எனலாம். அப்படி விவாகம் செய்தாலும் அவர்கள் கொத்தடிமையே. ஏன் இடம்பெயர்ந்து மேலைத்தேய நாடுகளில் வாழ்ந்தாலும் சில இல்லங்களில் சில பெண்களின் நிலை இதுதான். இதனை கவிஞர் வைரமுத்து அவர்கள் வேதனையோடு குறிப்பிடுவதை ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். "பாவம் பெண்கள் இந்த இல்லறக்கிரிக்கெட்டில் கட்டிலறைக்கும் சமயலறைக்கும் ரன்கள் எடுத்தே ரணமாய்போனார்கள்". இது போன்ற நிலையில் தான் பெரும்பாலான பெண்களின் வாழ்கை உள்ளது. ஆம் "பெண் போடும் இரட்டைவேசம்" என்றே சொல்வேன். உடன்கட்டை ஏறுதல் போன்ற விவகாரங்கள் இன்றைக்கு குறைந்ததிற்கு கி.பி 1774ல் வங்காளத்தில் பிறந்த பிராமண குடும்பத்தைச் சேர்ந்த "ராஜாராம்மோகன் ராயின்" தலை சிறந்த சமுக சேவையை குறிப்பிடலாம். ஆதாவது சதி எனும் உடன்கட்டை ஏறுவதை எதிர்த்து போராடியதும் பலதாரமணம் ஒழிக்கப்பட்டு கைம்பெண் மறுமணம் கலப்புத்திருமணம் போன்றவற்றை ஆதரித்தமையையும் கூறலாம். "திருமணம் சொர்கத்தில் அல்ல ரொக்கத்தில் தான் நிட்சயிக்கப்படுகிறது." இந்த மனநிலை மாற வேண்டும். ஆண்கள் பெண்களுக்கு சீதனம் கொடுக்கும் நிலை உருவாக வேண்டும். அத்துடன் பெண்களை ஆண்கள் தம் துணையாக பார்க்க வேண்டும் எனக் கூறுகிறார் பாரதி எப்படி எனில் "ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தழைக்குமாம்" என்று கூறினார். இந்த வழியில் ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாக வரும் பொழுது வரதட்சனைக் கொடுமை முடிவுக்கு வரும். ஆண் என்பவன் தாயின் கருவறையில் இருக்கும்போது தாய்படும் இன்னலை கண்டுவிடமுடியாது. பிறந்து பெரியவனாகி அவனும் திருமண பந்தத்தில் புகுந்து தாய்மை அடைந்த அவனது மனைவியை பார்த்தும் திருந்தாத ஆண்வர்க்கங்கள் எப்பவும் திருத்திவிடமுடியாது. ஒரு பெண்ணானவள் குழந்தை பெற்றெடுப்பதில் 1ம்மாதம் உதிரம்மிஞ்சி 2ம்மாதம் இதுவென்றுஅறிந்து 3ம்மாதம்முழவதும் தெரிந்து 4ம்மாதம் வாந்திஎடுத்து 5ம்மாதம் மாங்காய்தின்று 6ம்மாதம் உடலதுநோக 7ம்மாதம் இடுப்பது நோக 8ம்மாதம் நடைதளர்ந்து 9ம்மாதம் சிலர் முன்அழது 10ம்மாதம் பலர் முன் அழது பெற்றெடுக்கும் அவளுக்கு எத்தனைதான் இன்னல்கள்.

சிங்கள வெறிகாடையர்களால் தழிழ்ப்பெண்கள் அனுபவித்த கொடுமைகளை சனல்4 காட்சிகளை பார்த்து கண்ணீர் விட்டழததும் மறக்கவில்லை. தாய்க்கும் தாரத்திற்கும் வித்தியாசம் கண்டு கொள்ளாத ஆண்வர்க்கம் பெண்களை காமவெறி கொண்டு பார்க்கும் இவர்கள் எல்லாம் அன்னையர் தினத்தை எப்படி மதிப்பர். "பாதகம் செய்பவரைக்கண்டால் பயம் கொள்ளல் ஆகாது பாப்பா மோதிமிதித்துவிடு பாப்பா" அவர் முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா என்று பாரதி பிஞ்சு பிள்ளைகளின் மனதில் விதைத்தார் ஏனெனில் இந்தப் பெரிசுகள் சொன்னால் கேட்காதுகள் என்று நினைக்கதோன்றுகிறது.

பெண்ணை மனதளவில் பலவீனப்படுத்தி தாழ்வுமனப்பாங்கை உண்டாக்காமல் அவளை பாதுகாப்பதே மேலானது. பெண்ணை தெய்வமாக, தேவதையாக, தலைவியாக, வர்ணிக்கும் இலக்கியங்கள் உயர்வான மதிப்பை போற்றும் அதே நேரம் பெண்ணின் இயல்பான மன ஓட்டங்களை உணர்வுகளை மதித்து பழக வேண்டியது ஒவ்வொரு ஆணின் கடமையாகும். அப்போதுதான் பெண்ணுரிமை என்பது செயலால் சரியாகும். எனினும் பாரதி கண்ட புதுமைப்பெண் மலர்ந்து விட்டார்கள் என்று சொல்லிவிடமுடியாது. ஆனால் பெண்கள் மனம் வருந்தி கண்ணீர் சிந்துகிற எந்த மண்ணும் செழிக்காது. எத்தனை வளம் பலம் இருந்தாலும் நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பெண்ணின் வெற்றிக்குத் தோள் கொடுத்து துணை நிற்போம். அப்போது தான் இந்தத் தேசம் உலகில் முதல் இடத்தை எட்டும்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (XXXI) 31 வது ஒலிம்பிக் போட்டிகள் - 2016 - பிறேசில்

| | |
|---|---|
| நடத்தும் நகரம் | ரியோ டி ஜனேரோ, பிரேசில் |
| பங்குபெறும் நாடுகள் | 168 தகுதி (206 எதிர்பார்ப்பு) |
| பங்குபெறும் வீரர்கள் | 7,363 (10,500க்கும் கூடுதலாக எதிர்பார்ப்பு) |
| நிகழ்ச்சிகள் | 304 - 28 விளையாட்டுக்கள் |
| துவக்க நிகழ்வு | ஆகஸ்ட் 5 |
| இறுதி நிகழ்வு | ஆகஸ்ட் 21 |
| அரங்குகள் | மரக்கெனா விளையாட்டரங்கம் |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்குகள் - மரக்கெனா விளையாட்டரங்கம்

2016 கோடைக்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள், (2016 Summer Olympics), அலுவல்முறையில் 31வது ஒலிம்பியாட்டின் விளையாட்டுக்கள் (Games of the XXXI Olympiad) அல்லது ரியோ டி ஜனேரோ 2016 ஒலிம்பிக் விளையாட்டுக்கள் ஆகஸ்ட் 5, 2016 முதல் ஆகஸ்ட் 21, 2016 வரை பிரேசிலின் ரியோ டி ஜனேரோ மாநகரத்தில் நடைபெற உள்ள தற்கால உலக ஒலிம்பிக் விளையாட்டுக்களாகும். 2016 கோடைக்கால மாற்றுத்திறனாளர் ஒலிம்பிக் விளையாட்டுக்களும் இதே நகரத்தில் இதே குழுவின் மேற்பார்வையில் செப்டம்பர் 7 முதல் 18 வரை நடைபெற உள்ளன. தென் அமெரிக்காவில் நடைபெற உள்ள முதல் கோடைக்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளாக இது இருக்கும். முன்னதாக 1968ஆம் ஆண்டில் வட அமெரிக்க கண்டத்தில் இருக்கும் இலத்தீன் அமெரிக்காவின் அங்கமான மெக்சிகோவில் நடைபெற்றுள்ளது.

இந்த ஐந்து ஒலிம்பிக் வளையங்களும் 1913ல் வடிவமைக்கப்பட்டு, 1914ல் அங்கீகரிக்கப்பட்டு, 1920 கோடை ஒலிம்பிக் விளையாட்டுக்களில் முதன் முதலில் பயன்படுத்தப்பட்டன ஒலிம்பிக் விளையாட்டுக்கள் (Olympic Games அல்லது Olympics) என்பது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கோடை காலத்திலும் குளிர் காலத்திலும் மாற்றி மாற்றி பல்வேறு விளையாட்டுக்களுக்கு நடத்தப்படும் அனைத்துலகப் போட்டி ஆகும். இதில் ஆயிரக்கணக்கான விளையாட்டு வீரர்கள் பங்கு பெறுகின்றனர். உலகின் முதன்மையான விளையாட்டுப் போட்டியாகக் கருதப்படும் ஒலிம்பிக்கில் 200 நாடுகளுக்கு மேல் கலந்து கொள்கின்றன. பண்டைய கிரீஸ் நாட்டில் இந்தப் போட்டிகளை நடத்தும் வழக்கம் இருந்து வந்தது. பின்னர், பியர் ஃபிரெடி, குபர்த்தென் பிரபு என்ற பிரான்ஸ் நாட்டு பிரபுவால் (nobleman) 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தப் போட்டிகளை நடத்தும் வழக்கம் மீண்டும் வந்தது. இவர் 1894 ஆம் ஆண்டுஅனைத்துலக ஒலிம்பிக் குழுவை உருவாக்கினார். இதன் அமைப்பும், அதிகாரமும் ஒலிம்பிக் பட்டயத்தினால் வரையறுக்கப்படுகின்றன. அனைத்துலக ஒலிம்பிக் குழுவே ஒலிம்பிக் இயக்கத்தைநிர்வகித்து வருகிறது. உலகப் போர் நடைபெற்ற ஆண்டுகள் தவிர்த்து, 1896 முதல், நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை கோடை ஒலிம்பிக் விளையாட்டுக்கள் நடைபெற்று வருகின்றன. ஆதி கால ஒலிம்பிக்ஸ் போட்டிகள் கி.மு.776 இல் கிரேக்க நாட்டிலுள்ள ஒலிம்பியாவில் தொடங்கி கி.பி.393 வரை நடைபெற்றன. கிரேக்க கவிஞர் பானாஜியோடிஸ் ஸௌட் ஸாஸ் கி.பி.1833இல் எழுதிய "இறந்தவர்களின் உரையாடல்" என்னும் கவிதை இப்போட்டிகளை மீண்டும் தொடங்கும் ஆர்வத்தை உருவாக்கியது. 20 ஆம் 21 ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட ஒலிம்பிக் இயக்கத்தின் வளர்ச்சி ஒலிம்பிக் விளையாட்டுக்களில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள், ஊனமுற்றோருக்கான மாற்றுத் திறனாளர் ஒலிம்பிக் விளையாட்டுக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதின்ம வயதினருக்கான இளையோர் ஒலிம்பிக் விளையாட்டுக்கள் என்பன தொடங்கப்பட்டமை இம் மாற்றங்களுட் சில. பனிக்கால விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் பொருட்டு 1924 முதல் குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுக்கள் நடத்தப்படுகின்றன. தொடக்கத்தில் கோடை கால மற்றும் குளிர் கால ஒலிம்பிக் விளையாட்டுக்கள் ஒரே ஆண்டில் நடத்தப்பட்டு வந்தன. 1994 முதல் கோடைக்கால ஒலிம்பிக் விளையாட்டுக்கள் முடிந்து இரண்டு ஆண்டுகள் கழித்து குளிர் கால ஒலிம்பிக் விளையாட்டுக்கள் நடத்தப்படுகின்றன. பொருளாதாரம், அரசியல், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சிகளுக்கு ஏற்ப ஒலிம்பிக் குழவும் பல்வேறு மாற்றங்களைச் செய்யவேண்டியிருந்தது. இது, தொழில்முறை சாராத போட்டியாளர்கள் பங்குபெறும் போட்டியாக இருக்கவேண்டும் என்றே இவ்வியக்கத்தை உருவாக்கிய கூபேர்ட்டின் எண்ணியிருந்தார். ஆனாலும், ஒலிம்பிக் குழு இந்த விதியை மாற்றித் தொழில்முறை விளையாட்டு வீரர்களையும் போட்டிகளில் பங்குபற்ற அனுமதித்தது. மக்கள் ஊடகங்களின் முக்கியத்துவம் வளர்ந்து வந்தபோது, நிறுவன விளம்பர ஆதரவு முறை உருவாகி இப்போட்டிகள் வணிகமயமாக்கப்பட்டன. 1916, 1940, 1944 ஆகிய ஆண்டுகளில் நடைபெற வேண்டிய ஒலிம்பிக் போட்டிகள் உலகப் போரினால் நடைபெறவில்லை. பனிப்போர்க் காலத்தில் பல நாடுகள் இப்போட்டியைப் புறக்கணித்ததனால், 1980, 1984 ஆண்டுகளில் இடம்பெற்ற போட்டிகள் மட்டுப்படுத்தப்பட்ட பங்கேற்புடனேயே நடைபெற்றன.

ஒலிம்பிக் இயக்கம் அனைத்துலக விளையாட்டுகள் கூட்டமைப்பு, தேசிய ஒலிம்பிக் குழுக்கள், ஒவ்வொரு ஒலிம்பிக் போட்டிகளுக்குமான ஏற்பாட்டுக் குழுக்கள் என்பவற்றை உள்ளடக்குகிறது. முடிவுகளை எடுக்கும் அமைப்பு என்ற அளவில், அனைத்துலக ஒலிம்பிக் குழு எந்த நகரில் போட்டிகளை நடத்துவது என்பது குறித்து முடிவு எடுக்கின்றது. இவ்வாறு தெரிவு செய்யப்படும் நகரம், ஒலிம்பிக் பட்டயத்துக்கு ஏற்றவகையில், போட்டிகளை ஒழுங்கு செய்வதற்கும், நிதி வழங்குவதற்குமான பொறுப்பை ஏற்கவேண்டும். போட்டிகளில் இடம்பெறும் விளையாட்டுக்களை உள்ளடக்கிய நிகழ்ச்சி நிரலைத் தீர்மானிக்கும் பொறுப்பும் அனைத்துலக ஒலிம்பிக் குழவிடமே உள்ளது.ஒலிம்பிக் கொடி, தீப்பந்தம் போன்ற சின்னங்களும், தொடக்கவிழா, நிறைவுவிழா போன்ற நிகழ்வுகளும் ஒலிம்பிக் போட்டிகளின் பகுதிகளாக உள்ளன. கோடைகால ஒலிம்பிக்கிலும், குளிர்கால ஒலிம்பிக்கிலும் 33 வெவ்வேறு விளையாட்டுக்கள் தொடர்பில் இடம்பெறும் ஏறத்தாழ 400 போட்டிகளில் 13,000க்கு மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் பங்கேற்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு போட்டியிலும் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் வீரர்களுக்கு முறையே தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கம், வெண்கலப் பதக்கம் ஆகிய பதக்கங்கள் வழங்கப்படுகின்றன. ஏறத்தாழ உலகில் உள்ள எல்லா நாடுகளுமே பங்கேற்கும் அளவுக்கு ஒலிம்பிக் போட்டி வளர்ச்சி அடைந்துள்ளது. இத்தகைய வளர்ச்சி, புறக்கணிப்புகள், போதை மருந்துப் பயன்பாடு, கையூட்டு, பயங்கரவாதச் செயல்கள் போன்றவை தொடர்பான பல சவால்களுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலையையும் ஏற்படுத்தியுள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் போட்டிகளும், அது தொடர்பான ஊடக விளம்பரமும் பல விளையாட்டு வீரர்கள் தேசிய அளவிலும் சில சமயங்களில் பன்னாட்டு அளவிலும் கூடப் புகழ் பெறுவதற்கான வாய்ப்பை வழங்குகின்றன. அத்துடன் போட்டிகளை நடத்தும் நகரமும், நாடும் தம்மை உலகுக்கு வெளிப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பையும் ஒலிம்பிக் ஏற்படுத்துகிறது.

ஒலிம்பிக் நடந்த வருடங்களும் இடங்களும்...

| | |
|---|---|
| 1896 | ஏதென்ஸ், கிரேக்கம் |
| 1900 | பாரிஸ், பிரான்சு |
| 1904 | செயிண்ட் லூயிஸ், ஐக்கிய அமெரிக்கா |
| 1908 | இலண்டன், இங்கிலாந்து |
| 1912 | ஸ்டாக்ஹோம், சுவீடன் |
| 1920 | ஆண்ட்வெர்ப், பெல்ஜியம் |
| 1924 | பாரிஸ், பிரான்சு |
| 1928 | ஆம்ஸ்டர்டாம், நெதர்லாந்து |
| 1932 | லாஸ் ஏஞ்சலீஸ், ஐக்கிய அமெரிக்கா |
| 1936 | பெர்லின், ஜெர்மனி |
| 1948 | லண்டன், இங்கிலாந்து |
| 1952 | ஹெல்சின்கி, பின்லாந்து |
| 1956 | மெல்போர்ன், ஆஸ்திரேலியா |
| 1960 | ரோம், இத்தாலி |
| 1964 | டோக்கியோ, ஜப்பான் |
| 1968 | மெக்ஸிகோ சிட்டி, மெக்சிக்கோ |
| 1972 | ம்யூனிச், ஜெர்மனி |
| 1976 | மாண்ட்ரீல், கனடா |
| 1980 | மாஸ்கோ, சோவியத் ஒன்றியம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1984 லாஸ் ஏஞ்சலஸ், ஐக்கிய அமெரிக்கா
1988 சியோல், தென் கொரியா
1992 பார்சிலோனா, ஸ்பானியா
1996 அட்லாண்டா, ஐக்கிய அமெரிக்கா
2000 சிட்னி, ஆஸ்திரேலியா
2004 ஏதென்ஸ், கிரேக்கம்
2008 பெய்ஜிங், மக்கள் சீனக் குடியரசு
2012 இலண்டன், ஐக்கிய இராச்சியம்
2016 ரியோ டி ஜனேரோ, பிரேசில்

உலகப் போர் சமயங்களில் மட்டும் (1916, 1940 , 1944) ஒலிம்பிக்ஸ் நடைபெறவில்லை.

இன்றைய ஒலிம்பிக்ஸ் 1896ல் ஏதென்ஸ் நகரில் தான் துவங்கியது. அடுத்த கோடை 2020ம் ஆண்டில் ஜபான் நாட்டின் டோக்கியோ நகரில் நடக்கவுள்ளது.

## பனி ஒலிம்பிக்ஸ் நடந்த வருடமும் , இடமும்

1924 சாமொனிக்ஸ், பிரான்ஸ்
1928 செயிண்ட் மோரிட்ஜ், ஸ்விட்சர்லாந்து
1932 ப்ளாசிட் ஏரி, ஐக்கிய அமெரிக்கா
1936 கார்மிஷ்ச், ஜெர்மனி
1948 செயிண்ட் மோரிட்ஜ், ஸ்விட்சர்லாந்து
1952 ஆஸ்லோ, நோர்வே
1956 கார்டினா, இத்தாலி
1960 ஸ்குவாவ் வேலி, ஐக்கிய அமெரிக்கா
1964 இன்ஸ்ப்ரக், ஆஸ்திரியா
1968 க்ரெநோபில், பிரான்ஸ்
1972 சாப்போரோ, ஜப்பான்
1976 இன்ஸ்ப்ரக், ஆஸ்திரியா
1980 ப்ளாசிட் ஏரி, ஐக்கிய அமெரிக்கா
1984 சாராஜெவோ, யூகோஸ்லாவியா
1988 கால்கேரி, கனடா
1992 ஆல்பர்ட்வில்லே, பிரான்ஸ்
1994 லில்லேஹாம்மர், நோர்வே
1998 நாகானோ, ஜப்பான்
2002 சால்ட் லேக் சிட்டி, ஐக்கிய அமெரிக்கா
2006 தோரீனோ, இத்தாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 வான்கூவர், கனடா
2014 சோச்சி, ரஷ்ஷியா
உலகப் போர் சமயங்களில் மட்டும் (1940 , 1944) பனி ஒலிம்பிக்ஸ் நடைபெறவில்லை.
1992 வரை பனி ஒலிம்பிக்சும் கோடைக்கால ஒலிம்பிக்சும் ஒரே ஆண்டிலேயே நடைபெற்று வந்தது. இதை மாற்ற வேண்டி 1994ல் மீண்டும் ஒரு பனி ஒலிம்பிக்சை நடத்தினார்கள். அதன்படி தற்பொழுது கோடைக்கால ஒலிம்பிக் நடந்து 2 ஆண்டுகள் கழித்து பனி ஒலிம்பிக் நடக்கும்.
அடுத்த பனி ஒலிம்பிக், 2018ல் தென்கொரியாவில் நடக்க இருக்கிறது.

ரியோ ஒலிம்பிக் போட்டிகளில் முதன் முறையாக பங்கேற்கும் அகதிகள் அணியை சர்வதேச ஒலிம்பிக் கவுன்சில் அறிவித்துள்ளது.
ஆகஸ்ட் 5-ம் திகதி பிரேசிலில் 31-வது கோடை கால ஒலிம்பிக் போட்டி தொடங்குகிறது. ஒலிம்பிக் போட்டி வரலாற்றில் அகதிகள் அணி பங்கேற்க இருப்பது இதுவே முதல் முறையாகும். அணியில் 6 வீரர்கள், 4 வீராங்கனைகள் இடம் பிடித்துள்ளனர். அணியின் அதிகாரிகளாக 12 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒலிம்பிக் கொடியின் கீழ் இவர்கள் பங்கேற்பார்கள். தெற்குசூடான், சிரியா, காங்கோ, எத்தியோப்பியா ஆகிய நாடுகளை சேர்ந்த வீரர்-வீராங்கனைகள் அணியில் இடம் பெற்றுள்ளனர். சர்வசேத ஒலிம்பிக் கமிட்டியின் தலைவர் தாமஸ் பேக் பேசுகையில், 206 நாடுகளை பிரதிநித்துவப்படும் வீரர்களுக்கு இணையாக, அகதி வீரர்கள் அடங்கிய அணியும் ஒலிம்பிக் போட்டிகளின் போது ஒரே மாதிரியாக நடத்தப்படும் என உறுதியளித்துள்ளார்.

ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க ரஷ்ஷியாவுக்கு தடை...
கடந்த வாரம் உலக தடகள வீர்ர்களின் நிர்வாக அமைப்பு எடுத்து முடிவை ஆதரித்து, விளையாட்டு போட்டிகளில் பங்கேற்பதற்கு ரஷ்ஷிய தடகள வீரர்கள் தடைசெய்யப்பட்டுள்ளதாக சர்வதேச ஒலிம்பிக் குழு தெரிவித்துள்ளது. இந்த ஆண்டு ரியோ டி ஜெனிரோவில் நடைபெறும் ஒலிம்பிக் விளையாட்டுகளுக்காக முன்னதாகவே ரஷ்ஷிய தடகள விளையாட்டு வீரர்கள் அரச ஆதரவில் ஊக்கமருந்து பெறுவதாக குற்றச்சாட்டுகள் உள்ளன. ஆனால், ரஷ்ஷிய தடகள வீரர்கள் ரியோ ஒலிம்பிக்கில் போட்டியிட தகுதியனவர்கள் என்று அவர்களின் சர்வதேச விளையாட்டு கூட்டமைப்பால் அறிவிக்கப்படலாம் என்றும் சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைவர் தாமஸ் பாக் தெரிவித்துள்ளார். இந்த முடிவை எதிர்த்து மேல்முறையீடு செய்ய போவதாக ரஷியா அறிவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக குத்துச்சண்டை வீரர் முகமது அலி காலமானார்..

**17.01.1942** **03.06.2016**



குத்துச்சண்டை உலகின் தலைசிறந்த வீரரும், முன்னாள் உலக சாம்பியனுமான மொஹமட் அலி தனது 74 ஆவது வயதில் அமெரிக்காவில் காலமானார். சுவாசக் கோளாறு காரணமாக எரிசோனா பினிக்ஸ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் 03.06.2016 அன்று காலமானார். காஸ்சியுஸ் மர்செல்லஸ் கிளே (Cassius Marcellus Clay) என்ற இயற்பெயரைக் கொண்ட இவர் 1964ஆம் ஆண்டு இஸ்லாம் தேசம் இயக்கத்தில் சேர்ந்த பின் தன் பிறப்பு பெயரை முகம்மத் அலி என மாற்றிக் கொண்டார்.

1942ஆம் ஆண்டு ஜனவரி 17ம் திகதி பிறந்த தி கிரேடேஸ்ட் (The Greatest), தி லூயிவிள்ளே லிப் (The Louisville Lip) என்ற பல்வேறு பட்டப் பெயர்களாலும் அழைக்கப்பட்டார். குத்துச்சண்டை அரங்கில் பல சாதனைகளுக்கு உரித்துடைய மொஹமட் அலி 1981 ஆம் ஆண்டு சர்வதேச குத்துச்சண்டை கோதாவிலிருந்து விடைபெற்றார். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல குத்துச்சண்டை போட்டிகளில் பங்கேற்று தனக்கென தனி முத்திரையை பதிவு செய்துகொண்டவர். பரமவைரிகளான ஜோ.ஃபிரேஸியர், ஜார்ஜ் ஃபோர்மன் ஆகியோரை வீழ்த்தி உலக ஹெவிவெயிட் பட்டத்தை பெற்றவர்.

அவர் பங்கேற்ற சர்வதேச போட்டிகள் 61. அதில் 56 போட்டிகளில் பட்டம் வென்றார். அதில் 37 முடிவுகள் நாக்-அவுட் (எதிரி மீண்டும் போட்டியிடமுடியாத அளவுக்கு தாக்கி நிலைகுலையச் செய்வது) முறையிலும், 19 முடிவுகள் நடுவரின் தீர்ப்பு வாயிலாகவும் அவருக்கு பட்டம் வழங்கப்பட்டது. 5 முறை மட்டுமே போட்டிகளில் தோல்வியுற்றார். அமெச்சூர் போட்டிகள் மூலம் 100 வெற்றிகளையும் 5 தோல்விகளையும் பெற்றுள்ளார்.

1960ல் ரோமில் நடைபெற்ற கோடைக்கால ஒலிம்பிக் போட்டியில் லைட் ஹெவிவெயிட் பிரிவில் தங்கம் வென்றார். வெள்ளை-கறுப்பர் பாகுபாடு காரணமாக அதற்கு எதிர்ப்பு தெரிவித்து தங்கப் பதக்கத்தை ஒஹியோ ஆற்றில் வீசியதாக அவர் மீது சர்ச்சை எழுந்தது. 1960-63 வரை குத்துச்சண்டை போட்டி அவருக்கு பொற்காலமாகவே இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது கனடியப் பயணம்...

திருமதி.ஜெயா நடேசன்
ஜேர்மனி

ஜேர்மனி நாட்டிலிருந்து எனது கனடியப்பயணம் அத்திலாந்திக் பெரும் சமுத்திரத்தைக் கடந்து விமானத்தில் பறக்கவேண்டியதாயிற்று. கனடாவின் தலைநகரம் ஒற்றாவாக இருந்தாலும் நான் ரொரன்ரோ நகரத்திற்கே செல்லவேண்டி இருந்தது. மிகவும் பிரபலமான மாநிலமான ஒன்றாறியாவிலுள்ள ரொரன்ரோ பிரசித்தி பெற்ற நகரமாக விளங்குகின்றது. முதலில் நான் அங்கு கண்டுகொண்டது அந்த நாட்டின் தேசிக்கொடியான மேபிள் இலை, வெள்ளைத்துணியில் சிவப்பு நிறமுள்ள அந்த நாட்டின் கொடியை எங்கு பார்த்தாலும் பட்டொளி வீசிக் காற்றில் ஆடி அழகூட்டியவண்ணமே காணப்பட்டன. அப்போது எங்கள் நாட்டுக் கொடியையும் நம் நாட்டின் நிலையையும் ஒருகணம் நினைத்துப் பார்த்தேன். இந்த இலையின் மரமானது எல்லா இடங்களிலும் காணப்பட்டன. இந்த மரத்தின் சிறப்பு என்னவெனில் றப்பர் மரத்திலிருந்து றப்பர்பால் வெட்டி எடுப்பதுபோல இம்மரத்திலிருந்தும் சாறு எடுத்து ஒருவகை Syrup (பாணி) செய்து குடிபானமாக அருந்துகிறார்கள். மிகவும் பிரபலமான ரொரன்ரோ நகரப்பகுதிகளில்தான் பல நாடுகளைச் சேர்ந்த புலம்பெயர் மக்கள் வசித்து வருகிறார்கள். சுமார் 200 நாடுகளைச் சேர்ந்த சுமார் 165க்கும் மேற்பட்ட மொழிகளைப் பேசும் சமூகங்கள் வாழ்கிறார்கள்.

இவர்களின் மத்தியில்தான் எம் இனத்தவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 1980 ஆண்டுகளின் பின்புதான் நம்மவர்கள் அதிகமானோர் குடியேறியிருக்கிறார்கள். 1991 - 2001 காலப்பகுதியில் கனடாவில் குடியேறியவர்களில் நம்நாட்டு மக்கள் 5வது இடத்தைப் பிடித்தனர். அதாவது சீனா, இந்தியா, பிலிப்பைன்ஸ், கொங்கொங் ஆகிய நாடுகளுக்கு அடுத்ததாக நம்நாட்டு மக்கள் இடத்தை வகிக்கின்றனர். அப்போது அகதிகளாக வந்தவர்களில் 10 வீதத்தினர் மட்டுமே அரசாங்க அங்கீகாரத்துடன் வந்தார்கள் எனத்தெரிவிக்கப்படுகின்றது. 1999 ஆண்டில் நூறுக்கு மூன்றுபேரும், 2000 ஆண்டில் நூறுபேருக்கு ஏழுபேருமாக நம்நாட்டு அகதிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

ஏனைய பெரும் தொகையான நம்மவர்கள் தாமாகவே வந்து அகதி அந்தஸ்த்துக் கோரியவர்களாவர். தமிழ் அகதிகள் வருகையின்போது கனடாவில் ஆரம்பத்தில் குவிபெக் மாநிலத்தின் நுழைவு அமெரிக்கா ஊடாக இருந்ததாம். அவ்வேளை அமெரிக்கா ஊடாக வரும் அகதிகளை அமெரிக்கா ஏற்கவேண்டும் என்ற ஒப்பந்தம் இரு நாடுகளுக்குமிடையேகைச்சாத்திடப் போவதில்லையாம். 1986ம் ஆண்டு கனேடியப் பிரதமர் பிரயன் மல்ரேனி அகதியுரிமை கோரியவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் பல தமிழ் அகதிகள் அகதிவிசாரணைகள் இல்லாமலே அகதி உரிமை பெற்றனராம். பின்னர் மனித உரிமைகள் மறுக்கப்பட்ட 18 நாடுகளைச் சேர்ந்தவர்களுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டன.. அவ்வேளையில்தான் ஜேர்மனி நாட்டிலிருந்து 165 தமிழர்கள் இலங்கையிலிருந்து அகதிகளாக வருவதாகக்கூறி கப்பலில் வந்திறங்கியபோது 1986ல் வதியுரிமை வழங்கப்பட்டதாம். இவ்வாறாக வந்த அகதிகள் கடும் உழைப்பால் உயர்ந்தனராம். பலருக்குக் கல்வித்திறன் இருந்தும் தமது குடும்பங்களை, பெற்றோர், சகோதரர், உறவுகளைக் காத்துக்கொள்வதற்காக, அவர்களைப் பராமரிப்பதற்காக இரண்டு, மூன்று வேலைகள் என உழைத்துச் சம்பாதித்து உதவினார்களாம். பின்னர் தமக்கு அகதி உரிமை, நிரந்தர வதிவுரிமை கிடைத்த பின்பு அவர் தம் குடும்ப உறுப்பினர்களை ஸ்பொன்சரில் (பிணை) வரவழைத்தனராம். அதிலே வயதானவர்களுக்கு அதிக சலுகைகள் கிடைப்பதால் மிகவும் சந்தோஷமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். கோவில் வழிபாடுகள், வயோதிபர்கள் ஒன்றுகூடல், கலைவிழாக்கள் எனப் பல விழாக்கள் நடைபெறுவதால் அவற்றில் பங்குகொள்ளும் வயதானவர்கள் சந்தோசமாகவே பொழுதைப் போக்குகிறார்கள் என்று கூறிக்கொள்ளலாம்.

கனடாவில் வசித்துவரும் தமிழர்கள் பலர் கல்வியில் உயர்ந்து காணப்படுகின்றனர். வீடுகள் சொந்தமாகக் கொள்வனவு செய்வதில் கூடிய ஆர்வம் காட்டி ஏட்டிக்குப் போட்டியாகப் பெரும் முதலீட்டுடன் கொள்வனவு செய்து பராமரித்துக் கடின உழைப்பால் உயர்ந்துள்ளனர். அதிகமாக ரொரன்ரோவின் ஸ்காபுரோ, மார்க்கம், வூட்பிறிஜ் நகரங்களில் அதிக தமிழர்கள் வசிக்கிறார்கள். பல விதமான வியாபார தாபனங்கள் யாழ் நகர்போல் காட்சியளிக்கின்றன. பல சங்கங்கள் , அமைப்புக்கள், கோவில்கள், சமூக நலச் சங்கங்கள் தாயகம் நோக்கிய நல்ல செயற்பாடுகளையும் மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற தமிழ் ஊடகங்களும் நிறையவே இயங்கிக்கொண்டிருக்கின்றன.

அடுத்து மொன்றியல் நகரத்திற்கும் சென்றுவந்தேன். இந்த நகரத்திலும் தமிழர்கள் பெருந்தொகையினர் வாழ்கிறார்கள். இந்நகரம் பிரென்சுக் கொலனியாக இருந்தமையினால் பிரஞ்சு மொழியே முதலாவது மொழியாகவும் ஆங்கிலம் இரண்டாவது மொழியாகவும் இடம்பிடித்துள்ளன. இங்கு சீனநாட்டவர்கள்தான் அதிகமாக வாழ்கிறார்கள். இந்துமதக் கோவில்களும் காணப்படுகின்றன. மலைக்கோவில் என்று உயர்ந்த மலையில் புனித சூசையப்பர் கோவிலும்,அதனுள்ளே புனித அந்திரயாள் சுருபமும் காணப்பட்டது. இவரின் நாக்கு அழியாமல் ஓர் பேழையில் மிகப்பாதுகாப்பாக வைத்திருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. இங்கு வருபவர்கள் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தும் சுகமடைந்துள்ளார்கள் என்பது உண்மையாகும்.. மலைமீது இருக்கும் இக்கோவிலுக்குப் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிகள் தாண்டிப் போனால் கோவிலின் முன்பகுதியில் நின்று பார்த்தால் கனடாவின் பல இடங்களையும் பார்க்கக்கூடியதாக இருக்கும். இவ்விடம் சுற்றுலாப் பயணிகள் வந்துபோகும் இடமாகக் காணப்படுகின்றது. மலை ஏறிக்களைப்படைந்து வருவோருக்கு அதன் கீழ்ப்பகுதியில் நீராகாரங்கள் பருகி இளைப்பாறிச் செல்லக்கூடிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தோடம்பழத்தைப்போல் ஒரு பெரிய அழகான உருவமாக அமைத்து அதன்கீழ் இந்தக் கடைகளை அமைத்துள்ளனர்.

நான் அங்கு சென்ற சமயம் காலநிலையும் இடங்கொடுத்தபடியால் கனடாவின் பல இடங்களையும் சுற்றிப்பார்த்தேன். ”நயகரா” நீர்வீழ்ச்சி முக்கியமானது. அதில் இரு நீர் வீழ்ச்சிகள் ஒன்று அமெரிக்காவிற்கு மற்றையது கனடாவிற்குச் சொந்தமானது. இந்த நீர்வீழ்ச்சிகளை நேரடியாகப் பார்த்தபோது மனது குளிர்ச்சியடைந்தது. அது அழகான அற்புதமான காட்சியாகும். அந்த நீர்வீழ்ச்சியை கப்பல்களிலும் சென்று பார்த்து மகிழ்கிறார்கள். அடுத்து சி.என் ரவர் (C N Tower) மிக உயரமான கட்டிடம் லிப்டில் (உயர்த்தி) ஏறிப்போய்ப் பார்த்தால் கனடா நாட்டையே ஒரு தடவை பார்த்துவிடலாம். அடுத்து (Royal Ontario Musem ) நூதனசாலை அல்லது காட்சியகம் அங்கு பழையகாலத்து உபகரணங்கள், அரசர்கள், பாவித்த ஆபரணங்கள் , பொருட்கள், உடைகள், பறவைகள், மிருகங்கள், பாவித்த தளபாடங்கள் , பொருட்கள், பழமை வாய்ந்த பொருட்கள் என மிகவும் நேர்த்தியாகவும் அழகாககவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

Aquariam Of Canada இந்த இடத்தில் கடல்வாழ் உயிரினங்களும் நிலத்தில் அகழ்வாராய்ச்சியில் எடுக்கப்பட்ட வைரங்கள், இரத்தினங்கள், செம்புகள், வெள்ளிகள் பல நாடுகளில் எடுக்கப்பட்டு இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையிலிருந்தும் பெறப்பட்ட இரத்தினக்கல்லும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. அடுத்து பழையகோட்டையைப் (Loma) பார்த்தேன். அங்கு சீன மக்களின் கை வண்ணத்தில் உருவான எத்தனையோ அற்புதமான பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அன்றை நாளில் ஒரு சீனத்தம்பதிகளுக்குத் திருமணம் நடைபெற்றது. அதையும் பார்த்து மகிழ்ந்தேன்.

அங்குவாழும் நம் மக்கள் மிகச்சிறப்பான வாழ்க்கை நடாத்துகிறார்கள். இயந்திரமயமான வாழ்க்கைதான். எல்லோரும் உழைத்து வாழ்கிறார்கள். நம்மவர்களிடையே மேலத்தேச கலை. கலாச்சாரம்.நாகரீகம் வளர்ந்ததால் நம்மக்கள் பலர் நமது தமிழ்மொழியையும் பண்புகளையும் இன அடையாளங்களையும் இழந்துதான் வாழ்கிறார்கள். எமது தாய்மொழியாம் தமிழ் அற்றுப்போகக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன. இருப்பினும் நல்லதொரு நாட்டைப் பார்த்து வந்தது மனதுக்கு ஆறுதலையும் மகிழ்வையும் தந்தன!....ஆகவே நீங்களும் வருடத்தில் ஒரு நாட்டையாவது பார்த்து மகிழுங்கள்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐரோப்பிய யூனியனிலிருந்து வெளியேறியது பிரித்தானியா: அதிகாரப்பூர்வ அறிவிப்பு 23-06-2016

ஐரோப்பாக்கண்டத்தில் உள்ள நாடுகள் தங்கள் சமூக, பொருளாதார வளர்ச்சியை கருத்தில் கொண்டு "ஐரோப்பிய யூனியன்" என்ற கூட்டமைப்பை உருவாக்கின.இதில் பிரான்ஸ், ஜேர்மனி, பெல்ஜியம், பிரிட்டன், இத்தாலி, டென்மார்க், போர்ச்சுக்கல் உள்ளிட்ட 28 நாடுகள் இடம்பெற்று உள்ளன. இதில் உள்ள நாடுகள் தங்கள் நாட்டின் எல்லைகளை பிற உறுப்பு நாடுகளுக்கு திறந்து வைத்துள்ளன. இந்த அமைப்பின் கடைசி உறுப்பு நாடாக 1-7-2013 அன்று குரோசியா சேர்க்கப்பட்டது.

ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் நாடுகளில் வசிப்பவர்கள் அந்த அமைப்பில் உள்ள எந்தவொரு நாட்டுக்கும் சென்று வாழலாம், வேலைவாய்ப்புகளை பெறலாம், கல்வி கற்கலாம், தொழில் தொடங்கலாம். இதன் காரணமாக ஐரோப்பா கண்டத்தில் உள்ள பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் பிரிட்டனில் அதிக அளவில் குடியேற தொடங்கினார்கள்.

ஐரோப்பிய யூனியன் தலைவர் டொனால்ட் டஸ்க், 27 நாடுகளை கொண்ட கூட்டமைப்பாக தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியம் செயல்படும் என உறுப்பு நாடுகளின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன் என கூறியுள்ளார். இது ஒரு வரலாற்று சிறப்புமிக்க தருணம்தான் என்றாலும் அச்சப்படும்படியாக ஏதுமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### வாக்கெடுப்பு- இறுதி முடிவுகள்

ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரித்தானியா 17,410,742 பேர் வெளியேறவும், 16,141,241 பேர் இணைந்திருக்கவும் வாக்களித்துள்ளனர்.

| | எதிராக | ஆதரவாக |
|---|---|---|
| | LEAVE | REMAIN |
| England | 15,188,40 | 13,266,996 |
| Northern Ireland | 349,442 | 440,437 |
| Scotland | 1,018,322 | 1,661,191 |
| Wales | 854,572 | 772,347 |

வாக்கெடுப்பின் முடிவுகள் பற்றி விமர்சித்துள்ள முன்னாள் அமைச்சர் ஒருவர், பிரித்தானியா மற்றும் ஐரோப்பாவுக்கு இது ஒரு பயங்கரமான நாள் என கடுமையாக சாடியுள்ளார், மேலும் இதற்கான விளைவுகள் மோசமாக இருக்கும் எனவும் எச்சரித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானியாவின் பிரதமராக டேவிட் கமரூன் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என British Politician Paddy Ashdown தெரிவித்துள்ளார் Christchurch East Dorset Broadland மக்கள் வெளியேறுவதற்கும், Cheltenham> Brighton & Hove-ல் மக்கள் இணைந்திருப்பதற்கும் வாக்களித்துள்ளனர் Scottish Green party-யின் துணைத்தலைவர் Patrick Harvie கிடைத்துள்ள வெற்றிக்கு வரவேற்பு அளித்துள்ளார். மேலும் தங்கள் கட்சி ஐரோப்பிய யூனியனில் இருந்து விலக வேண்டும் என ஆரம்பம் முதலே ஆதரவு தெரிவித்து வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானியா அதிகாரப்பூர்வமாக வெளியேறுவதற்கு இன்னும் 8.94,189 பேரின் வாக்குகள் தேவைப்பட்டன.

இதனால் தங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாக, குறிப்பாக வேலைவாய்ப்பு பறிபோவதாக பிரிட்டன் மக்கள் கருதத்தொடங்கினார்கள். பிரிட்டன் அரசாங்கம் வழங்கும் சமூக நலத்திட்டங்களின் பலன்களை பிற நாட்டினர் பெற்று விடுவதாகவும் அவர்கள் குற்றம்சாட்டினார்கள். மேலும் பிரிட்டனுக்கு பல்வேறு பாதிப்புகள் ஏற்படுவதாகவும், இதனால் ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து விலக வேண்டும் எனவும் கோரிக்கை நாளுக்கு நாள் வலுத்தது. இதனையடுத்து மக்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்த முடிவு செய்யப்பட்டு, வாக்கெடுப்பு 23-06-2016ல் நடந்தது. தொடர்ந்து நாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 382 மையங்களில் வாக்குகள் எண்ணப்பட்டன. பெரும்பாலான மக்களின் தெரிவு பிரிட்டன் வெளியேறுவதாக இருந்தது, இந்நிலையில் அதிகாரப்பூர்வமாக பிரிட்டன் ஐரோப்பிய யூனியனில் இருந்து வெளியேறுவதாக அறிவிக்கப்பட்டது.

ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரித்தானியா வெளியேறவேண்டும் என வாக்களித்தவர்கள்....

-65 வயதிற்கு மேலுள்ள வயதினர் - 59%
-50 -64 வயதினர் - 53%
-25 -49 வயதினர் - 40%
-24 வயதிற்குக் கீழுள்ளவர்கள் - 18%

ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரித்தானியா விலகக்கூடாது என வாக்களித்தவர்கள்....

-65 வயதிற்கு மேலுள்ள வயதினர் - 33%
-50 -64 வயதினர் - 38%
-25 -49 வயதினர் - 38%
-24 வயதிற்குக் கீழுள்ளவர்கள் - 38%



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனியில்..........கௌசியின் "முக்கோணமுக்குளிப்பு" நூல்வெளியீட்டுவிழா....



காலம் தன் கால்களின் திசைகளையும் பாதைகளையும் மாற்றிக்கொண்டு போனாலும் கலைகளும் இலக்கியங்களும் தம் ஆயுளையும் பார்வைகளையும் விசாலப்படுத்திய வண்ணமே விரிகின்றன. விஞ்ஞான வளர்ச்சியினால் நூல்களின் வாசிப்பும் கலைகளின் நேசிப்பும் மங்கிவருவதாக எழுப்பப்படும் குற்றச்சாட்டுக்களை உடைத்தெறிவதுபோல், உலகப்பரப்பில் இலக்கிய விழாக்களும் நூல் வெளியீடுகளும் நிகழ்ந்தவண்ணமே உள்ளன. இணையத் தளங்களின் விரிவாக்கமும் முகநூல்களின் மூர்க்கவீச்சும் ஈ-நூல்களின் எழுச்சியும், இன்றைய ஏடுகளாயும் நூல்களாயும் சஞ்சிகைகளாயும், இலக்கியங்கள் பவனிவருவதை மழுங்கடிக்க வாய்ப்புகள் இல்லை என்றே கூறமுடியும். தமிழ்கூறும் நல்லுலகெங்கும் இலக்கிய விழாக்கள் தினம் தினம் கொண்டாடப்பட்டுவருவதனையும் இந்த இணையதளங்களே விரைவாய் விரிவாய் வெளியிடுகின்றன. இதேவேளை இணையதளங்கள் மற்றும் முகநூல்கள் போன்ற விரைவுத் தொடர்புசாதனங்களின் அபரிமிதமான பரிணாம வளர்ச்சியானது இலக்கிய வளர்ச்சியின் இன்னொரு பரிமாணம் என்பதும் மறுப்பதற்கில்லை.

அந்தவகையில்தான் பல்கிப்பெருகிவரும் இலக்கிய கர்த்தாக்களும் படைப்பாளிகளும் தமது ஆக்கத்தினை ஆவணப்படுத்துவதில் மிகுந்த ஆர்வமுள்ளவர்களாக விளங்குகிறார்கள். ஆவணப்படங்களும் நூல்களின் வெளியீடுகளும் பற்பல இலக்கிய வடிவங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆவணப்படுத்தல்களும்புலம்பெயர்ந்த தேசங்களில் அன்றாடம் நடைபெறுவது தமிழிலக்கியவரலாற்றில் இன்னொரு வளர்ச்சிப்படியென்றால் மறுப்பதற்கில்லை. அந்த நீரோட்டத்தில் தனது இரண்டாவது படைப்பான"முக்கோண முக்குளிப்பு" எனும் கட்டுரைத்தொகுப்பு நூலினை வெளியிட்டுள்ள நிகழ்வாய் அமைந்த ஒருதிருவிழா,கடந்த 11.06.2016 சனிக்கிழமை யேர்மனி (டோட்முண்ட்) Dietrich - Keuning – Haus.Leopoldstraße 50 – 58y; இடம்பெற்றது.திருமதி.சந்திரகௌரி சிவபாலன் (கௌசி) அவர்கள் இலங்கைத் தமிழாசிரியராகவும் பின் ஆசிரிய ஆலோசகராகவும் தாயகத்தில் பணியாற்றியதன்பின் புலம்பெயர்ந்து யேர்மனியில் சோலிங்கன் என்ற நகரில் வசித்தாலும் தன் இலக்கிய தாகத்தைத்தீர்க்க வானொலி பத்திரிகைகள் சஞ்சிகைகள் போன்று பற்பல ஊடகங்களில் தனது பங்களிப்பினை நல்கிவருவதுடன் தற்போது பல்வகைப்பட்ட இணையதளங்களிலும் உலாவந்துகொண்டிருப்பதனைப் பலரும் அறிவார்கள். இவரின் முதலாவது நவீனமான "என்னையே நானறியேன்" என்ற நூல் 2014ம் ஆண்டு யேர்மனி கெல்சன்கிர்சன் நகரில் வெளியிடப்பட்டதனையும் இங்கு குறிப்பிடுதல் பொருத்தமாகும். அந்தவகையில் திருமதி.சந்திரகௌரி சிவபாலன் (கௌசி) அவர்களின்"முக்கோண முக்குளிப்பு" என்ற இக்கட்டுரைத் தொகுப்பும் இரண்டாவது வெளியீடாகும்.

யேர்மனி-தமிழ் எழுத்தாளர்சங்கத்தின் வெளியீடாக இடம்பெற்ற இவ்விழாவானது,11.06.2016 சனிக்கிழமை யேர்மனி (டோட்முண்ட்)நகரில் இடம்பெற்றது.15 மணியளவில் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான இனிய நிகழ்வானது மௌன அஞ்சலியாக இரண்டு நிமிடங்கள் அனுஸ்டிக்கப் பட்டதனையடுத்துத் தமிழ்த்தாய் வாழ்த்தினை சங்கீத ஆசிரியை திருமதி ஞானாம்பாள் விஜயகுமாரின் மாணவ மாணவிகள் நிகழ்த்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விழாவிற்கு நிழ்ச்சித்தொகுப்பாளராக யேர்மனி தமிழ் எழுத்தாளர்சங்கத்தின் உப தலைவரும் யேர்மன் தமிழ்க்கல்விச் சேவையின் பொறுப்பாளருமான திரு பொ.சிறிஜீவகன் அவர்கள் தொகுத்தளித்தார். நிகழ்ச்சிக்கான வரவேற்புரையினை யேர்மனிதமிழ் எழுத்தாளர்சங்கத்தின் உறுப்பினரும் யேர்மன் தமிழ்க்கல்விச்சேவையின் உப தலைவருமான திருமதி கலா மகேந்திரன் அவர்கள் வழங்கினார். இதனையடுத்து செல்வி. கௌசிகா மணிவேந்தன் அவர்களின் வரவேற்பு நடனம் அவையோரையும் வருகை தந்திருந்த பிரமுகர்களையும் அபிநய நடனத்தில் வரவேற்றது மகிழ்ச்சியூட்டியதெனலாம்.

விழாவினை ஏற்பாடுசெய்து சிறப்புற நடாத்திக்கொண்டிருந்த யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவரும் மண் கலையிலக்கிய சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான திரு. வ. சிவராசா அவர்கள் தலைமையுரை இடம்பெற்றது. தமிழ் எழுத்தாளர்சங்கத்தின் செயற்பாடுகளை சுருக்கமாக விளக்கியதுடன் கடந்த காலங்களில் சங்கமானது வெளியீடு செய்துவைத்த நூல்களைப் பட்டியல்போட்டதுடன் சங்கத்தால் அறிமுகம் செய்த நூல்களையும் கெரவிக்கப்பட்ட படைப்பாளிகளையும் பிரமுகர்களையும் இலக்கியவாதிகளையும் நினைவு கூர்ந்ததுடன்,புலம்பெயர் எதிர்காலச்சந்திக்கு தமிழ்மொழியையும் கலாச்சரா விழுமியங்களையும் எடுத்துச்செல்லப் படைப்பாளிகளும் இலக்கியவாதிகளும் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு தன்உரையினை நிறைவுசெய்தார்.

தொடர்ந்த நிகழ்வாக,கர்நாடக இசை இடம்பெற்றது. அதனை செல்வி. சந்தியா ரவீந்திரன் அவர்கள் படைத்தார். இவ்வரங்கில் இடம்பெற்ற கலைநிகழ்வில் பங்குகொண்ட கலைஞர்களுக்கு நினைவுப்பரிசுகளை நூலாசிரியர் திருமதி.சந்திரகௌரி சிவபாலன் (கௌசி) அவர்களும் பிரதம விருந்தினரும் வழங்கிய நிகழ்வு கலைஞர்களுக்கு கௌரவமாகவும் மகிழ்வாகவும் இருந்தமையை அவர்களின் முகங்களிலோடிய களிப்புரேகைகள் காட்டின. தொடர்ந்த முக்கிய நிகழ்வான நூலின் அறிமுகத்தினை யேர்மனி தமிழ் எழுத்தாளர்சங்கத்தின் செயலாளரும் எழுத்தாளருமான பொன். புத்திசிகாமணி அவர்கள் வழங்கினார்.கௌசியின்"முக்கோண முக்குளிப்பு" நூல் உருவான விதம்,எழுத்தாளர்சங்கத்தின் ஆலோசனைகள், நூலாசிரியரின் தமிழார்வம், சமூகப்பொறுப்பு,துணிந்து கருத்துக்களை படைக்கும் சாதுர்யம், படைப்புகளிலான ஆளுமை போன்ற தனித்தன்மைகளைச் சுட்டிக்காட்டியதுடன் நகைச்சுவை வெடிகளுடன் தொடர்ந்த அவரது உரையில், இந்நூலினை யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம் வெளியீடு செய்வதில் பெருமையடைவதாகவும் இன்னும் பல பயனுள்ள பல இலக்கிய வடிவங்களைதிருமதி.சந்திரகௌரி சிவபாலன் அவர்கள் படைக்கவேண்டும் எனவும் தெரிவித்து தமதுரையை நிறைவுசெய்தார்.இதனைத்தொடர்ந்து நூல்வெளியீடு இடம்பெற்றது. விழாவிற்கென கனடா நாட்டிலிருந்து சிறப்பு விருந்தினர்களாக வருகைதந்திருந்தவர்களில் ஒருவரான திருமதி.ரஞ்சிதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா (முன்னாள் ஆசிரியை இலங்கை)அவர்களினால் வெளியிட, முதற்பிரதியினை சமூக ஆர்வலர், தமிழ்ப்பற்றாளர் திரு. பவானந்தராஜா அவர்கள் பெற்றுக்கொண்டார். மிகவும் மகிழ்வான தருணமாக பலத்த கரவொலிகளின் மத்தியில்அந்த நிமிடத்துளிகள் மெல்லக்கரைந்தன.

தொடர்ந்து,கௌசியின் முக்கோண முக்குளிப்பு நூலினை பேராளர்கள் ஒவ்வொருவராக பிரதம விருந்தினர் திருமதி.ரஞ்சிதம் கந்தையா அவர்களின் கரங்களினால் பெற்றுக்கொண்டார்கள். அடுத்துநூல் விமர்சனம் இடம்பெற்றது. பூநகரி இரவி என்று இலக்கிய வட்டாரங்களில் அறியப்பட்ட திரு. சின்னத்துரை ரவீந்திரன்(கவிஞர்,ஆசிரியர் ) அவர்கள் நூலினை விமர்சனம் செய்தார். தன் சிறப்பான பேச்சால் சபையைக்கட்டி நூல்விமர்சனத்தை கொண்டுசென்றார். பகுத்தறிவுச்சிந்தனைகள், புலம்பெயர்வாழ்வின் பக்கங்கள், இலக்கியச்சுவைகள் என்று முப்பரிமாணங்களில் தன் அநுபவக்கூறுகளை நூலிலிருந்து ஒப்பீடு செய்து கவர்ச்சியான தெளிவான சொற்பொழிவைத் தந்தது நிறைவான நிகழ்வென்றே எடுத்துக்கொள்ளவேண்டும்.இறுதியாக வள்ளுவனின் குறளோவியங்களை நூலாசிரியர் கையாண்டவிதங்களை விதந்துரைத்த விமர்சகர்,கௌசியின் முக்கோண முக்குளிப்பு நூலாக்கத்துக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து, நூலாசிரியர் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதிய உலக மாற்றங்கள் பற்றிய கட்டுரைகளையும் இலக்கிய வடிவங்களாக எதிர்காலத்தில் படைக்கவேண்டும் என்று வேண்டுகோளைவைத்து நிறைவு செய்தார்.

தொடர்ந்த நிகழ்வில் சிற்றுண்டி இடைவேளை இடம்பெற்றது. பல்வகைப்பட்ட பலகார இனிப்பு வகைகள், பானங்கள் பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டன. மகிழ்வான அந்தத்தருணங்களை பலர் தத்தமது ஒளிப்பட, ஒளிப்பதிவுக்கருவிகளுக்குள் அடக்கிக்கொண்டார்கள். தொடர்ந்து செல்வி சகானாதிருச்செல்வத்தின் அபிநயத்தில் இடம்பெற்ற தில்லானா நடனத்தினை அடுத்து ஒருசில வாழ்த்துரைகள் இடம்பெற்றன. முதலில் மிருதங்கவித்துவான் திரு.தேவன் அவர்கள் கௌசியை வாழ்த்தினார். பின் வெற்றிமணி ஆசிரியர் முக.சிவகுமாரன் அவர்களின் வாழ்த்துரை இடம்பெற்றது. தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் உறுப்பினர்களில் திருமதி ஜெகதீஸ் மகேந்திரனின் வாழ்த்துக் கவியினைத் தொடர்ந்து தர, தமிழருவி ஆசிரியர் நயினை விஜயனின் வாழ்த்தினை அடுத்து தடாகம் இலக்கியப் பேரவையின் ஸ்தாபகரான கலைமகள் ஹிதாயா அவர்கள் இலங்கையிலிருந்து அனுப்பிவைத்திருந்த வாழ்த்துக்கவிதை ஒலிபரப்பானது. மேலும் திரு.பவானந்தராஜா அவர்களின் வாழ்த்தினையும் டென்மார்க்கிலிருந்து கவிதாயினி வேதா இலங்காதிலகம் அனுப்பிவைத்திருந்த வாழ்த்துக்கவிதையை திரு.சிறிஜீவகன் அவர்கள் வாசிக்க திருமதி சுலோசனா புவனேந்திரன் அவர்கள் நூலாசிரியருக்கு கையளித்தார்.மேலும் கலைநிழ்வுகளில் அடுத்த நிகழ்வாய் செல்வி சந்தியா நந்தகுமாரின் கர்நாடக இசைப்பாடல் இடம்பெற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து,பிரதம விருந்தினர் உரைக்கான நேரம், திருமதி. ரஞ்சிதம் கந்தையா (முன்னாள் ஆசிரியை இலங்கை)அவர்களின் பிரதம விருந்தினருரை இடம்பெற்றது தித்திப்பையும் தென்பினையும் சபையோருக்கும் குறிப்பாக இளையோருக்கும் ஏற்படுத்தியதென்றால் அது மிகைப்படுத்திய வார்த்தைகள் அல்ல. திருமதி.சந்திரகௌரி சிவபாலன் அவர்களை வாழ்த்தியதுடன் நூலினைப்படைத்த விதம். அவர்களின் இலக்கிய ஆர்வம், நேர்த்தியான தொகுப்பின் நுட்பம் என்று நூலின் சிறப்பினையும் கௌசியின் சமூகக்கடப்பாடு, பகுத்தறிவுத் தேடல்கள் என்று தொடங்கி குடும்ப மற்றும் தொழில்சார் பொறுப்புகளையும் வாயார மனதாரப்பாராட்டிய விதம் உண்மையில் மனநெகிழ்வைத்தந்த உன்னத தருணமாக என்னால் உணரமுடிந்தது. பிரதமவிருந்தினருக்கான நினைவுப்பரிசினை திருமதி. சந்திரகௌரி சிவபாலன் அவர்கள் வழங்கிப் பொன்னாடைபோர்த்தி ஆசிர்வாதத்தினைப் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்த வாழ்த்துக்களில் பான்னாட்டு புலம்பெயர் எழுத்தாளர் ஒன்றியத்தின் தலைவர் திரு.முருகதாசன் தனது ஆசிகளை சிற்றுரையோடு பகிர்ந்துகொண்டார்.மேலும் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் உறுப்பினர்களில் திரு.குகதாசன், திருமதி கெங்கா ஸ்ரான்லி, திருமதி கீதா பரமானதந்தன் ஆகியோரின் வாழ்த்துக்களோடு திரு.ப.பசுபதிராஜாவின் வாழ்த்துக்கவிதையும் இடம்பிடித்தது. மேலும் கலைநிழ்வுகளில் அடுத்த நிகழ்வாய் யேர்மனி தமிழ் எழுத்தாளர்சங்கத்தினர் நூலாசிரியருக்கான கௌரவத்தை செய்ய மேடையேறினர்.எழுத்தாளர்சங்கத்தின் பொருளாளர் கவிஞர் அம்பலவன்புவனேந்திரன் அவர்களால் யாத்து வாசிக்கப்பட்ட வாழ்த்து மடலை பிரதம விருந்தினர்திரு.கந்தையா அவர்கள் வழங்க திருமதி கந்தையா அவர்கள் கௌசிக்கு மலர்மாலை அணிவித்து சங்கத்தின்சார்பில் ஆசிகளை வழங்கிய தருணம் மண்டபம் அதிர்ந்த கரகோசத்தில் மூழ்கியது.

இதனையடுத்து,கௌசியின் "முக்கோண முக்குளிப்பு" நூல் வெளியீட்டு விழாவுக்கான ஏற்புரையை நூலாசிரியர் நிகழ்த்தினார். தான் நன்றிதெரிவிக்க வேண்டியநேரமிது என்றும் நூலாக்கத்துத் துணைபுரிந்தவர்களுக்கும் மகளுக்கும் கணவருக்கும் தனையீன்று சான்றோர்கள் மத்தியில் உலவவிட்ட தன்தாய்தந்தையருக்கும் ஆழமான நன்றிகளைத்தெரிவித்ததோடு மலேசியாவிலும் பிரித்தானியாவிலும் இந்நூலினை அறிமுகம் செய்ய உதவியவர்களுக்கும் வெளியீட்டுவிழாவினை நடாத்திக்கொடுத்த யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தினருக்கும் தன் நன்றியைத்தெரிவித்து விடைபெற்றார். நல்லதொரு இலக்கியவிழாவில் கலந்துகொண்ட திருப்தியுடன் நிறைவான இந்நிகழ்வின் நன்றியுரையை நூலாசிரியையின் மகளான செல்வி. மேனுஷா சிவபாலன் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார். மாலை ஏழு மணியளவில் விழா இனிதே நிறைவுபெற்றது!...

-கவிச்சுடர் அம்பலவன் புவனேந்திரன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவுகளை விதைத்த மல்லிகை ஜீவாவும் கனவுலகில் வாழும் டொமினிக்ஜீவாவும்......

முருகபூபதி
அவுஸ்திரேலியா



பிறப்பு 27 ஜூன் 1927 (அகவை 89)
யாழ்ப்பாணம்
தேசியம் இலங்கைத் தமிழர்
பணி இதழாசிரியர்
அறியப்படுவது எழுத்தாளர், மல்லிகை ஆசிரியர்
பெற்றோர் ஆவுரம்பிள்ளை யோசப், மாரியம்மா
வாழ்க்கைத் துணை இராணி
பிள்ளைகள் 2 பெண்கள், 1 ஆண்

2015 தொடக்கத்தில் நான் இலங்கைக்கு வந்ததும் முதலில் தொலைபேசியில் பேசியவர்களில் டொமினிக்ஜீவாவும் ஒருவர். அவர் நீண்ட காலம் நடத்திய மல்லிகை இதழ் நிறுத்தப்பட்டதன் பின்னர் அவரை சந்திப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. எனினும் 2011 இற்குப்பின்னர் அவருடன் தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்தேன். மல்லிகை நின்றுவிட்டதை அறிந்து அவர்பற்றிய நீண்ட விரிவான கட்டுரையும் எழுதினேன். பல இதழ்களில் வெளியானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது பால்யகால நண்பர் எஸ்.பொ. சிட்னியில் மறைந்ததும் தகவலும் சொன்னேன். இம்முறை பயணத்தில் அவரைச்சந்தித்து நீர்கொழும்பில் பெப்ரவரி 28 ஆம் திகதி நடத்தவிருந்த நெய்தல் விழாவுக்கு அழைப்பதற்காக முற்கூட்டியே தகவல் தெரிவித்து -அவர் அந்த நாளை எமக்காக ஒதுக்கிவைக்கவேண்டும் என்பதற்காக அதுபற்றியும் உரையாடியிருந்தேன்.

எனது குரலைக்கேட்டதும் குதூகலத்துடன் பேசினார்."வடக்கு, கிழக்கு பயணங்களை முடித்துக்கொண்டு வருவேன்" என்று அவருக்கு உறுதியளித்தேன். சுமார் 46 வருடமாக வெளிவந்த மல்லிகை கடந்த மூன்று ஆண்டுகாலமாக வெளிவரவில்லை. ஜீவா யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு இடம் பெயர்ந்து வந்த பின்னர் கொழும்பு - 13 இல் 201, ஸ்ரீகதிரேசன் வீதியிலிருந்து (முன்னாள் செக்கடித்தெரு) மல்லிகை வெளியானது. அதற்கு முன்னர் கஸ்தூரியார் வீதியில் அவருடைய ஜோசப் சலூன் முகவரியிலிருந்தும், பின்னர் ராஜா தியேட்டருக்குப் பின்னால் சிற்றொழுங்கையிலிருந்தும் வெளியானது. அந்த ஒழுங்கையிலிருந்து தற்பொழுது தினக்குரல் யாழ்.பதிப்பு வெளியாகிறது.

அதன் பின்னும் பல வருடங்கள் மல்லிகை வெளியானது. ஜீவா தொடர்ந்தும் இலங்கையெங்கும் அலைந்து திரிந்து மல்லிகையின் தாரக மந்திரமாக ஒலித்த மகாகவி பாரதியின் வரிகளே இந்த அங்கத்தின் தலைப்பில் வருகிறது.

சாதாரண குடும்பத்தில் பிறந்து தனக்குத்தெரிந்த தொழிலையே செய்து வாழ்ந்தவரை - தோழர் கார்த்திகேசன் மாஸ்டர் இடதுசாரி அரசியலுக்குள் அழைத்து வந்தார். ராஜகோபாலன் என்ற இலக்கிய ஆர்வலர் இலக்கியத்தின்பால் திருப்பினார். கணித வாத்தியாரின் கணக்கை திருத்தியதனால் "உனக்கெதற்குப்படிப்பு....போய் சிரையேன்டா...' - என்று அவமானப்படுத்தியதும் பள்ளிப்படிப்புக்கு முழுக்குப்போட்டார். மல்லிகை நடத்தியபொழுது இடதுசாரிச் சிந்தனையாளர்களினதும் முற்போக்கு இலக்கியவாதிகளினதும் சகவாசத்தினால் தன்னையும் சர்வதேசியவாதியாக்கிக்கொள்ள முயன்று பிற மொழி இலக்கியங்களுக்கும் மல்லிகையில் களம் வழங்கினார்.

சகோதர சிங்கள இலக்கியவாதிகளின் மீது நேசமுற்று பிரபல மூத்த சிங்கள இலக்கிய மேதை மார்ட்டின் விக்கிரம சிங்காவை கௌரவித்து மல்லிகை முகப்பில் அவரது படத்தை வெளியிட்டு சிறப்பிதழ் வெளியிட்டார். அதனைக்கண்டு பொறுக்கமுடியாத ஒரு அதிதீவிர தமிழ்க்கொழுந்து, யாழ். மத்திய கல்லூரிக்கு முன்னால் தமது பிரியத்துக்குரிய சைக்கிளில் வந்துகொண்டிருந்த ஜீவாவை வழிமறித்து - மார்ட்டின் விக்கிரமசிங்காவின் படத்துடன் வெளியான மல்லிகை இதழை வாங்கி அவர் முன்னாலேயே கிழித்து முகத்தில் எறிந்துவிட்டுச்சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்னும் பல வருடங்கள் மல்லிகை வெளியானது. ஜீவா தொடர்ந்தும் இலங்கையெங்கும் அலைந்து திரிந்து மல்லிகை விநியோகித்து ஈழத்து தமிழ் இலக்கியத்தை வளர்த்தார். வளம்படுத்தினார்.
ஆனால் - அந்த அதி தீவிர தமிழ்க்கொழுந்து அகதியாகச்சென்று ஐரோப்பிய நாடொன்றில் தனது வாழ்வாதாரத்திற்காக ஐரோப்பிய மொழி படித்து வாழ்கிறது.
"ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி யாதியினைய கலைகளில் உள்ளம் ஈடுபட்டென்றும் நடப்பவர் பிறர் ஈன நிலைகண்டு துள்ளுவர்"
- என்ற பாரதியின் மந்திரத்தை மல்லிகையில் உச்சாடனம் செய்த ஜீவா இன்று எப்படி இருக்கிறார்....? இலக்கிய உலகில் கனவுகளை விதைத்தவர்.... இன்று ஒரு புதிய கனவுலகில் வாழ்கிறார். அது குழந்தைகளின் உலகம். 47 ஆண்டுகளை நெருங்கிய மல்லிகை 50 ஆண்டுகளை நிறைவு செய்துவிடவேண்டும் என்றுதான் மல்லிகையை நேசித்த பலரும் எழுதினார்கள். பேசினார்கள். தமது முக நூல்களில் பதிவுசெய்தார்கள். ஆனால், ஜீவாவுக்கும் மல்லிகைக்கும் யார் மணிகட்டுவது...?

எவரும் முன்வரவில்லை. முன்வந்திருந்தாலும் ஜீவா அதற்கு சம்மதித்திருப்பாரா...? என்பதும் கேள்விக்குறி. அவருக்கு எதிர்பாராதவிதமாக வந்த சுகவீனத்தால் அவர் இன்று மட்டக்குளியில் பேரக்குழந்தைகளுடன் விடப்பட்டுள்ளார். நூற்றுக்கணக்கான தமிழ், முஸ்லிம், சிங்கள படைப்பாளிகள் - கல்விமான்கள் , அறிஞர்களின் வாழ்வையும் பணிகளையும் சித்திரிக்கும் கட்டுரைகளையும் அவர்தம் படங்களையும் பதிவுசெய்த மல்லிகை இன்று நூலகம் இணையத்தில் மாத்திரமே பதிவாகியிருக்கிறது. பலரதும் வீடுகளில் பல்கலைக்கழகங்களில் நூலகங்களில் முன்னைய பிரதிகள் , ஆண்டு மலர்கள் இருக்கின்றன.ஜீவா இலங்கையர்களை மட்டும் மல்லிகையில் கனம் பண்ணவில்லை. இந்திய சோவியத் உட்பட பல சர்வதேச படைப்பாளிகளுக்கும் உரிய மரியாதையை வழங்கினார்.

ஜீவா சில சமயங்களில் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்றும் முகத்துக்கு நேரே பேசும் இயல்புள்ளவர். யாழ்ப்பாணத்தில் பிரபலமாக இருந்த தம்பித்துரை அன் சன்ஸ் என்ற பத்திரிகை - புத்தகக்கடைக்கு மாதாந்தம் மல்லிகையில் பத்துப்பிரதிகளை வழங்குவார். அந்த கடை உரிமையாளர் அதனை பத்திரமாக பாதுகாத்து மேசையின் கீழே வைத்திருந்துவிட்டு, அடுத்த தடவை ஜீவா புதிய இதழின் பிரதிகளை கொடுக்கவரும்பொழுது, "எதுவும் விற்கவில்லை"- என்று மேசையின் கிழே இருந்த பத்து பிரதிகளையும் எடுத்துக்கொடுப்பார். இந்த நாடகம் பல மாதங்களாக அரங்கேறியது. வழக்கம்போல் கடையில் தொங்கும் குமுதம், ஆனந்தவிகடன், பொம்மை, பேசும் படம் இதழ்கள் விற்பனையாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் ஜீவாவின் தர்மாவேசம் விழித்துக்கொண்டது. "நாளைக்கு நீர் இறந்துபோனால் உம்முடைய சாவீட்டுக்கு குமுதம், ஆனந்த விகடன், பொம்மை, பேசும் படம் ஆசிரியர்கள் வரமாட்டார்கள். யாழ்ப்பாணத்திலிருக்கும் இந்த ஜீவாதான் வருவான்" - எனச்சொன்னது அவரது தர்மாவேசக்குரல்.

ஒரு சமயம் The Island பத்திரிகை வெளியிடும் நிறுவனம் வெளியிட்ட திவயின சிங்கள ஏடு ஜீவாவை பேட்டி கண்டு எழுத விரும்பி நாள் குறித்தது. அவருக்கு சிங்களம் தெரியாது. என்னை உடன் அழைத்துச்சென்றார். அந்த நேர்காணல் சந்திப்பு கொழும்பு கலாபவனத்தில் (Art Gallery ) செய்து தந்தவர் கலாசார திணைக்களத்தில் செயலாளராக பணியாற்றிய தமிழ் அபிமானி கே.ஜி. அமரதாஸ.அவ்வேளையில் குட்டிமணி - சிறையில் இருந்தார். அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித்தலைவராக பிரபலமாகியிருந்தார்.

சிங்கள வாசகர்களுக்கு தமிழ் இலக்கியம் போதியளவு அறிமுகம் இல்லாதிருந்த காலம். ஆனால், மார்ட்டின் விக்கிரமசிங்கா, டி.பி. இலங்கரத்னா, குணதாச அமரசேகர, கருணாசேன ஜயலத், ஜீ. பி.சேனாநாயக்கா, குணசேன வித்தான, ஆரியரத்தின வித்தான, கே.ஜயத்திலக்க, மடவள எஸ். ரத்நாயக்கா போன்ற இலக்கியவாதிகள் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகமாகியிருந்தனர்.
ஜீவா, அந்த நேர்காணலில் மேலே குறிப்பிட்ட சிங்கள எழுத்தாளர்களின் பெயர்களைச்சொல்லி, இவர்களையெல்லாம் எமது தமிழ் இலக்கிய வாசகர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். ஆனால் , சிங்கள வாசகர்களுக்கு தெரிந்த பெயர்கள் அமிர்தலிங்கமும் குட்டிமணியும்தான். எனச்சொன்னதும், அந்த சிங்கள நிருபர் அசந்துவிட்டார். பின்னர் தன்னை சுதாகரித்துக்கொண்டு, இந்தக்கருத்தையே இந்த நேர்காணலுக்கு தலைப்பாக எழுதுவேன் என்றார்.

அந்த நிருபர் சொன்னவாறே அந்தத்தலைப்பு ஜீவாவின் தர்மாவேசக்குரலாக அந்தச்சிங்கள ஏட்டில் ஒலித்தது.தொடக்க காலத்தில் மல்லிகையின் ஆண்டு மலர்கள் ஒவ்வொரு வருடமும் ஓகஸ்ட் மாதத்தில் வெளியாகும். பிற்காலத்தில் ஜனவரி மாதத்தில் வெளியானது. இறுதியாக நான் பார்த்த மல்லிகை 46 ஆவது ஆண்டு மலரில் 2001 இல் பாராளுமன்றத்தில் அஸ்வர் எம்.பி., மல்லிகை பற்றி உரையாற்றியபொழுது ஜீவாவையும் அவரது தேசிய உடையையும் விதந்து போற்றியது பற்றிய தகவலை இரத்தினச்சுருக்கமாக வெளியிட்டு பாரளுமன்ற பதிவேட்டு திகதியையும் (Hansard - 04-02-2001) குறிப்பிட்டிருந்தார். மல்லிகை இலக்கிய வாசகர்களின் மனதில் மட்டுமல்ல இலங்கைப்பாராளுமன்றத்திலும் ஒலித்திருக்கிறது என்ற பெருமிதம் அதில் தெரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் தமிழில் முதல் முதலில் சிறுகதைக்காக சாகித்திய விருது பெற்றவர். சாகித்திய இரத்தினா, தேசத்தின் கண், கனடா இலக்கியத்தோட்டத்தின் இயல் விருது என்பனவற்றையெல்லாம் பெற்றுள்ள ஜீவா, - 2010 - 2011 காலப்பகுதியில் என்னுடன் உரையாற்றியபோதெல்லாம்... " எல்லாம் போதுமப்பா... இனி எனக்கு என்ன தேவை....? முடிந்த வரையில் எனக்குத் தெரிந்ததை எனக்குத்தெரிந்த விதமாகச்செய்தேன்.... எல்லாம் போதுமப்பா...' என்ற களைப்புத்தொனியுடன் சொல்லியிருக்கிறார்.
அவர் எனக்குள்ளும், பலருக்குள்ளும் பயனுள்ள விதைகளை விதைத்தவர். எனக்குத் தெரிந்த மட்டில் மல்லிகை நீர்கொழும்பு பிரதேச சிறப்பிதழ், ( 1971) அவுஸ்திரேலியா சிறப்பு மலர் (2000) சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு (2011). அந்தக்கனவுளை நனவாக்கியிருக்கின்றோம். ஒருசமயம் இலங்கை வந்தபொழுது எனக்காக மல்லிகை காரியாலயத்தில் நடத்திய சந்திப்பில்தான் மாநாடு பற்றிய எண்ணக்கருவை விதைத்தார். நீர்கொழும்பு, திக்குவல்லை, மினுவாங்கொடை, அநுராதபுரம் முதலான தமிழ் மக்கள் செறிந்து வாழாத பிரதேசங்களிலிருந்தெல்லாம் பலரை இலக்கிய உலகிற்கு அழைத்து வந்து களம் அமைத்துக்கொடுத்தவர். பிரதேச மொழி வழக்குகள் ஆய்வுகளில் பேசுபொருளாவதற்கு தூண்டு கோலாக இருந்தவர். ஐரோப்பிய நாடுகளில் நடக்கும் இலக்கியச்சந்திப்பிற்காக அழைக்கப்பட்டு பரிஸிலும் லண்டனிலும் பாரட்டப்பட்டவர். சோவியத்தின் அழைப்பில் சென்று திரும்பியவர். தமிழக முற்போக்கு எழுத்தாளர் சங்கம், கலை, இலக்கிய பெருமன்றம் "எட்டயபுரம் பாரதி மன்றம்" கிறிஸ்தவ இலக்கியச்சங்கம், (C.L.S) முதலானவற்றின் அழைப்பில் சென்றவர். மணிவிழா, பவள விழா முதலானவற்றை கடந்து வந்தவர்.... இன்று மட்டக்குளியில் , காக்கைதீவில் மாலைப்பொழுதுகளில் சூரியன் மறையும் ரம்மிய காட்சியை கண்டு களித்துக்கொண்டிருக்கிறார். நண்பர் மேமன் கவியுடன் அவரைச்சந்திக்கச்செல்லும் பொழுது இரவாகிவிட்டது. கண்டவுடன், "எப்பொழுது வந்தீர்"...? எனக்கேட்டார்.

"நான் இலங்கை வந்தவுடனேயே தொலைபேசியில் சொன்னேன்தானே... ஜீவா"என்றேன்."அப்படியா" ...?' - என்று குழந்தையைப்போன்று சிரித்தார். 28 ஆம் திகதி "நெய்தல்" விழாவுக்கு அழைக்கின்றேன். போக்குவரத்து வசதியெல்லாம் செய்து தருவேன். வாருங்கள். உங்கள் நண்பர்கள் பலர் வருகிறார்கள். பழைய நீர்கொழும்பின் இலக்கிய காலம் பற்றி நீங்கள் பேசவேண்டும்.' என்றேன்.என்னை மன்னித்துக்கொள்ளும். நான் இப்பொழுது மகன், மருமகள் பராமரிப்பில் இருக்கின்றேன். வெளிநடமாட்டங்களை குறைத்துக்கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே செல்லும்பொழுது தனக்கேதும் நடந்தால் அது அவர்களையும் பாதிக்கும். அவர்களுக்கு நான் கஷ்டம் தரவிரும்பவில்லை. நீங்கள் நன்றாக விழாவை நடத்துங்கள். எனது வாழ்த்துக்கள் என்றும் இருக்கும்.'- என்றார். அப்பொழுது எனது கைத்தொலைபேசி சிணுங்கியது. பேசும் வரையில் அமைதியாக இருந்துவிட்டு, "பூபதி... அவுஸ்திரேலியாவுக்கு திரும்பிச்செல்லும் முன்னர் இந்த மொபைலை எனக்கு தந்துவிட்டுச்செல்லும்" என்று ஒரு குழந்தையைப்போன்று சொன்னார்.

"உங்களிடம் இல்லையா"...?' - என்று கேட்டேன். கிடைத்ததெல்லாம் சரியாக வேலை செய்யவில்லை என்றார். வெளித்தொடர்புகள் ஏதும் அற்று வீட்டுக்குள்ளே இருக்கும் இவருடைய மொபைல் விருப்பம் பற்றி வெளியே வந்ததும் உடன் வந்த நண்பரிடம் கேட்டேன். எத்தனை மொபைல்கள் அவரிடம் வந்தன என்ற பட்டியலை அவர் சொன்னார்.

மல்லிகை நின்றது கவலைதான். ஏமாற்றம்தான். கோமல் சாமிநாதன் நடத்திய சுபமங்களா நின்றபொழுது அவர் முதுகுத்தண்டு நோயினால் காலமாகியிருந்தார். எனினும் இறுதி இதழாக அவருக்கு அஞ்சலி செலுத்தும் சிறப்பிதழ் வெளியானது. மல்லிகை நின்றதை நாம் இலக்கிய - ஊடக வரலாற்றுப்பின்னணிகளுடன் ஆராய்தல் பொருத்தமானது.

பி.எஸ். ராமையா நடத்திய மணிக்கொடி, ரகுநாதன் நடத்திய சாந்தி, விஜயபாஸ்கரன் நடத்திய சரஸ்வதி, ஜெயகாந்தன் நடத்திய ஞானரதம், நா. பார்த்தசாரதி நடத்திய தீபம் , கண்ணதாசன் நடத்திய கண்ணதாசன் ஆகியன நின்றன. அதன் பிறகு அவற்றை எவரும் நடத்துவதற்கு முன்வந்ததாகத் தெரியவில்லை.

ஆனால் - வணிக இதழ்கள் என வர்ணிக்கப்பட்ட குமுதம், ஆனந்தவிகடன், என்பன தலைமுறை தலைமுறையாக வெளியாகிறது. கல்கியும் - கலைமகளும் வருகின்றன. கல்கி, கிருஷ்ணமூர்த்தியுடன் கல்கியோ, கலைமகள் கி.வா. ஜகந்நாதனுடன் கலைமகளோ நின்றுவிடவில்லை. ஆனால், ஜீவா இருக்கும்பொழதே மல்லிகை நின்றுவிட்டது. எஸ்.பொன்னுத்துரையின் மறைவுடன் தமிழகத்தில் இயங்கிய அவரது மித்ர பதிப்பகமும் வந்தது. குமரன் இதழையும் பதிப்பகத்தையும் தொடக்கிய மூத்த படைப்பாளி செ. கணேசலிங்கனின் குமரன் இதழ் நின்றுவிட்டாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குமரன் பதிப்பகம் இலங்கையிலும் தமிழகத்திலும் இயங்குகிறன. கணேசலிங்கன் அதற்கென ஒரு வாரிசை உருவாக்கி வளர்த்துவிட்டார். பதிப்பகமும் மூடப்பட்டுவிட்டதாக சில நாட்களுக்கு முன்னர் தகவல் வந்தது.

குமரன் இதழையும் பதிப்பகத்தையும் தொடக்கிய மூத்த படைப்பாளி செ. கணேசலிங்கனின் குமரன் இதழ் நின்றுவிட்டாலும் - குமரன் பதிப்பகம் இலங்கையிலும் தமிழகத்திலும் இயங்குகிறது. எம்மவர்கள் எங்கே தோற்றுப்போனோம்... ? அதற்கான பின்னணி என்ன...?
மல்லிகை ஜீவா பல மேடைகளில் மல்லிகையின் எதிர்காலத்திற்காக உயில் எழுதிவைத்திருப்பதாகவும் சொல்லியிருக்கிறார். தனது மகன் திலீபன் தனக்குப்பின்னர் மல்லிகையை நடத்துவார் என்று இழையோடும் கருத்துக்களை மல்லிகை ( தூண்டில்) கேள்வி - பதில் பகுதியிலும் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனால், இன்று அவற்றை அவரிடம் யாராவது நினைவு படுத்தினால்... " அப்படியா"...?' என்றுதான் கேட்பார். இந்த "அப்படியா" சொல்லைக்கேட்க விரும்பாமல்தான் அவரைச்சந்திக்கும் பலரும் அவரது சுகத்தை விசாரிப்பதுடன் விடைபெறுகிறார்கள். அன்று இரவு நானும் மேமன்கவியும் ஜீவாவை சந்தித்த வேளையில், ஜீவாவை சந்திப்பதற்கு முத்து. முருகமூர்த்தி என்ற விசேட வைத்திய நிபுணர் கிழக்கு மாகாணத்திலிருந்து வந்தார். அவர் எழதிய "நீரிழிவை வேரறுக்க" என்ற நாலின் வெளியீட்டு விழாவுக்கு ஜீவாவை அழைப்பதற்காகவே அழைப்பிதழுடன் வந்திருந்தார். அவருக்கும் அன்றுதான் ஜீவாவின் அஞ்ஞாத வாசம் தெரிந்திருக்கும்.

நான் தொகுத்து வெளியிட்ட நெய்தல் நாலில் ஜீவாவின் படமும் அவர்பற்றிய குறிப்புகளும் இருக்கின்றன. நீர்கொழும்பு பிரதேசத்தையும் என்னையும் ஈழத்து இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்திய அவரை நீர்கொழும்பு விழாவில் கனம் பண்ணவிரும்பியிருந்தேன். அவ்வாறு அவரை அழைத்தால் அவருக்கு 1970 - 1980 கால கட்டத்தின் புத்துயிர்ப்பு நினைவுகள் மலர்ந்து மீண்டும் அவரை உற்சாகப்படுத்தலாம் என்பதே எனது எண்ணமாக இருந்தது. "அவரை தாராளமாக அழைத்துச்செல்லுங்கள்"... என்றுதான் அவரது மருமகள் சொன்னார். ஆனால் - அவரது எண்ணம் வேறாக இருந்தது. அவர் தாம் அவர்களில் தங்கியிருப்பதாகவும் வெளிப்பயணங்களில் தனக்கு ஏதும் நடந்துவிட்டால்... என்ன செய்வது...? என்ற தயக்கத்தையே மீண்டும் சொல்லிக்கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிட்னியில் மறைந்த எஸ்.பொ. குறித்து அடிக்கடி கேட்டார். கஸ்தூரியார் வீதியில் எஸ்.பொ.வும், கணேசலிங்கனும், தானும் டானியலும் ஒன்றாக அமர்ந்து தேநீர் குடித்த பழைய நினைவுகளை பகிர்ந்தார். எஸ்.பொ.வுடன் பல தடவைகள் தான் சண்டையிட்டு பேசாமலும் இருந்திருக்கின்றேன். ஆனால், அவருடனான நினைவுகளை மறக்க முடியவில்லை. பலரும் போய்விட்டார்கள். ஒரு வெற்றிடம் தோன்றியிருக்கிறது. வெறுமை தெரிகிறது. எனச்சொல்லி நீண்ட பெருமூச்சை உதிர்த்தார். விடைபெறும்பொழுது மீண்டும் "தமக்கு ஒரு மொபைல் வேண்டும்" என்று மறக்காமல் நினைவுபடுத்தினார்.அந்த மொபைல் தற்பொழுது இயங்காமல் வீட்டில் அவரைப்போன்று ஓய்வு எடுக்கிறது.

இவரது நூல்கள் (தொகுதி)
சிறுகதைத் தொகுப்புக்கள்(தொகுதி)
தண்ணீரும் கண்ணீரும் (1960)
பாதுகை (1962)
சாலையின் திருப்பம் (1967)
வாழ்வின் தரிசனங்கள் (2010)
டொமினிக் ஜீவா சிறுகதைகள்

கட்டுரைத் தொகுப்புக்கள்
அனுபவ முத்திரைகள்
எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்
அச்சுத்தாளினூடாக ஓர் அனுபவ பயணம்
நெஞ்சில் நிலைத்திருக்கும் சில இதழ்கள்
முப்பெரும் தலைநகரங்களில் 30 நாட்கள்

மொழிபெயர்ப்பு நூல்
UNDRAWN PORTRAIT FOR UNWRITTEN POETRY (எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்) (மொழிபெயர்ப்பு: கந்தையா குமாரசாமி, மல்லிகைகைப்பந்தல், 2004)

ஜீவா பற்றிய ஆய்வு நூல்கள்
டொமினிக் ஜீவா - கருத்துக் கோவை (தொகுப்பு: மேமன்கவி)
மல்லிகை ஜீவா நினைவுகள் (லெ. முருகபூபதி, 2001)
பட்டம் மறுதலிப்பும் பல்வேறு சர்ச்சைகளும் (தொகுப்பு: மேமன்கவி)
மல்லிகை ஜீவா - மனப்பதிவுகள் (திக்குவல்லை கமால், 2004)

விருதுகள்
2013: இயல் விருது (கனடா தமிழ் இலக்கியத் தோட்டமும், ரொறொன்ரோ பல்கலைக்கழக தென்னாசியக் கழகமும் இணைந்து வழங்கியது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரக் குறிப்புக்கள்....

## மூலிகை சாறில் முழுமையான ஆரோக்கியம்!...

நம் முன்னோர்கள் பலன் அறிந்து பயன்படுத்தி வந்த மூலிகைகள் ஏராளம். மூலிகைகளை சாறாகவும், கஷாயமாகவும் செய்து சாப்பிடுவதன் மூலம் நோய்கள் நம்மை நெருங்கவிடாமல் செய்யலாம். இதோ, சில மூலிகைகளும், அதன் பலன்களும்

அருகம்புல் - ரத்த சுத்திகரிப்பு
இளநீர் - இளமை
வாழைத்தண்டு - வயிற்றுக்கல், மலச்சிக்கல்
வெண் பூசணி - அல்சர்
வல்லாரை - மூளை, நரம்பு வலுபடும்
வில்வம் - வேர்வையை வெளியேற்றும்
கொத்தமல்லி - ஜீரண சக்தி
புதினா - விக்கல், அஜீரணம்
நெல்லிக்காய் - முடி வளர்ச்சி, அழகு
துளசி - தொண்டை சளி, சோர்வு
முடக்கத்தான் - மூட்டு வலி, வாதம்
தூதுவளை - தும்மல், இருமல்
கரிசிலாங்கண்ணி - பார்வை திறன் மேம்படும்
கடுக்காய் - புண்களை ஆற்றும்
அகத்தி இலை - உடல் உஷ்ணம்
ஆடாதொடா - ஆஸ்துமா, குரல் வளம்

## மாம்பழத்தின் மருத்துவ பயன்கள்...

மாம்பழத்தைத் தொடர்ந்து உண்டு வந்தால் தோல் பளபளப்பாகும்.
தோல் நோய், அரிப்பு போன்றவை மாறும்.
தீராத தலைவலியை மாம்பழச்சாறு தீர்க்கும், கோடைக்காலத்தில் ஏற்படும் மயக்கத்தை தீர்க்கும்.
மாம்பழத்தில் உள்ள நார்ச்சத்து ஜீரணத்தைக் கூட்டும்.
பல்வலி, ஈறுவலி போன்றவற்றை மாம்பழம் குணப்படுத்தும்.
மாம்பழம் நோய்த்தடுப்பு சக்தியைக் கூட்டும்.
மாம்பழச்சாறு நரம்புத்தளர்ச்சியைக் குணப்படுத்தும்.
கண்ணில் நீர் வடிதல், மாலைக்கண் போன்றவற்றை மாம்பழம் குணப்படுத்தும்.
மாம்பழச்சதையை மிக்சியிலிட்டு சிறிதளவு பால் சேர்த்து, ஏலக்காய், ஐஸ் துண்டுகளைச் சேர்த்து அருந்த சுவையாக இருப்பது மட்டுமின்றி கோடையில் ஏற்படும் வெப்பம், மற்றும் தோல் தொல்லைகளை நீக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மது மற்றும் சிகரெட் பழக்கங்களால் எவ்வளவு செலவு செய்கிறீர்கள் தெரியுமா?

மது அருந்துதல் மற்றும் சிகரெட் பிடிப்பது போன்ற தீய பழக்கத்திற்காக ஒரு நபர் தனது வாழ்நாள் முழுவதும் எவ்வளவு செலவு செய்கிறார் என்பது தொடர்பாக கனடா நாட்டை சேர்ந்த தொண்டு நிறுவனம் ஆய்வு ஒன்றை வெளியிட்டுள்ளது.

மது அருந்துவது சிகரெட் பிடிப்பது போன்ற பழக்கத்தை நிறுத்தினால் அதிகளவில் பணம் சேமிக்கலாம் என்பது இப்பழக்கம் உள்ள ஒவ்வொரு நபருக்கும் தெரியும்.ஆனால், தனது வாழ்நாள் முழுவதும் எவ்வளவு பணத்தை சேமிக்க முடியும்? இந்த சேமிப்பின் மூலம் எவ்வளவு வருமானம் பெற முடியும் என்பது குறித்து Canadian Men's Health Foundation என்ற தொண்டு நிறுவனம் கனடா பொதுமக்கள் மத்தியில் ஆய்வு ஒன்றை மேற்கொண்டுள்ளது.

மது மற்றும் சிகரெட் பழக்கம் உள்ள ஆண்களின் செலவுகளை பற்றி மட்டும் எடுக்கப்பட்ட ஆய்வின் முடிவுகள் வெளியிடப்பட்டன. இதில், ஒரு நாளில் 5 சிகரெட் பிடித்து ஒரே ஒரு முறை மட்டும் மது அருந்துவதன் மூலம் ஒரு நபர் அவரது வாழ்நாள் முழுவதும் 2,75,000 டொலர்(3,98,14,500 கோடி இலங்கை ரூபாய்) செலவிடுகிறார்.இந்த தொகையை 30 முதல் 75 வயது வரை ஒரு துறையில் முதலீடு செய்திருந்தால், அவருக்கு 1.7 மில்லியன் டொலர்(24,61,26,000 கோடி இலங்கை ரூபாய்) வருமானம் கிடைக்கும்.இதேபோல், ஒரு நாளில் 20 சிகரெட்டுகள் பிடித்து 3 முறை மது அருந்தும் பழக்கம் உள்ள ஒரு நபர் அவரது வாழ்நாள் முழுவதும் 6,28,000 டொலர் செலவிடுகிறார்.இந்த தொகையை அவர் 45 ஆண்டுகளுக்கு முதலீடு செய்திருந்தால், அவருக்கு 3.2 மில்லியன் டொலர் வருமானம் கிடைத்திருக்கும் என ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்த ஆய்வு முடிவுகளை வெளியிட்ட தொண்டு நிறுவனத்தின் தலைவரான Wayne Hartrick என்பவர் பேசியபோது, கனடா நாட்டில் உள்ள ஒரு ஆணின் சராசரி ஆயுட்காலம் 79 வயது ஆகும். ஆனால், அந்த ஆண் மது சிகரெட் போன்ற தீயப்பழக்கத்திற்கு அடிமை ஆவதால், அவர் 10 வருடங்களுக்கு முன்னதாகவே உயிரிழக்க நேரிடுகிறது. மது, சிகரெட் போன்ற பழக்கத்தால் தன்னுடைய நிதியை மட்டும் ஒருவர் இழக்கவில்லை. இதனால், நாட்டின் பொருளாதாரத்திற்கும் இழப்பீடு ஏற்படுகிறது.

இந்த பழக்கத்தால் உண்டாகும் வியாதிகளை குணப்படுத்த கனடா அரசாங்கத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் 20.3 பில்லியன் டொலர் தேவைப்படுகிறது.ஆனால், இந்த பழக்கத்தை மாற்றிக்கொள்வதன் மூலம் ஆரோக்கியமாக வாழ்வதுடன், நாட்டின் பொருளாதாரத்தையும் மேம்படுத்த முடியும் என Wayne Hartrick தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக அகதிகள்...




போர் காரணமாக உள்நாட்டிலே அகதிகளாக வசிப்பவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டு இதுவரை இல்லாத அளவு 6 கோடியைத் தாண்டியதாக சுவிஸ் உள்நாட்டு அகதிகள் கண்காணிப்பு மையம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஜெனீவாவைச் சேர்ந்த உள்நாட்டு அகதிகள் கண்காணிப்பு மையம்' வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

உள்நாட்டுப் போர் காரணமாக சொந்த நாட்டிலேயே அகதிகளாக வசிப்போரின் எண்ணிக்கை கடந்த ஆண்டு 4.08 கோடியைத் தாண்டியுள்ளது. இது இதுவரை இல்லாத அளவு மிக அதிக எண்ணிக்கையாக உள்ளது.

ஐ.எஸ் பயங்கரவாதிகளின் எழுச்சிக்குப் பிறகு தான் இந்த எண்ணிக்கை பன்மடங்காக உயர்ந்தது.

கடந்த ஆண்டு 86 லட்சம் மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர். இவர்களில் மேற்கு ஆசியா, வடக்கு ஆப்பிரிக்கா ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் மட்டும் 48 லட்சம் பேர் ஆவர்.

மேலும், சிரியா, ஈராக், ஆப்கானிஸ்தான், மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு, கொலம்பியா, காங்கோ, நைஜீரியா, தெற்கு சூடான், உக்ரைன் ஆகிய நாடுகளில் நடைபெறும் போர் காரணமாக அதிக அளவில் மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறினர்.

போர் தவிர, இயற்கைப் பேரழிவுகள் காரணமாகவும் 1.92 கோடி பேர் இருப்பிடங்களை விட்டு வெளியேறி, உள்நாட்டு அகதிகளாக வசித்து வருகின்றனர்.

இந்த வகையில் சிரியா, ஈராக், ஆப்கானிஸ்தான், இந்தியா, சீனா, நேபாளம் ஆகிய நாடுகளில் தான் அதிகம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்று உதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம். எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம்.இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

| | | |
|---|---|---|
| 01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா) | - 480-00 யூரோ |
| 02. திரு.திருமதி.யஜிந்தா.ராஜமோகன் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - மட்டக்களப்பு | - 480-00 யூரோ |
| 03. செல்வன்.விஷ்ணு,செல்வி.பவுத்ரா.விஜயகௌரி | - சுவீஸ்லாந்து | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - கிளிசொச்சி | - 480-00 யூரோ |
| 04. செல்வன்.நகுல்.துரையரங்கன் | - ஜேர்மன் | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - திருகோணமலை | - 480-00 யூரோ |
| 05. செல்வி.அஜந்தி.அழகராசா | - பிரித்தானியா | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 யூரோ |
| 06. செல்வன்.ஜெய்சன்.ஜெயபாலன் | - பிரித்தானியா | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - திருகோணமலை | - 480-00 யூரோ |
| 07. திருமதி.பராசக்தி.பரமசாமி | - பிரித்தானியா | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 யூரோ |
| 08. திருமதி.ரதி.சின்னத்துரை | - பிரித்தானியா | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 யூரோ |
| 09. திருமதி.பிரிந்தாவனி.தனபாலசுந்தரம் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 யூரோ |
| 10. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 யூரோ |
| 11. செல்விகள்.வினிஷா.இராஜ்குமார்,தீபா.தர்மராசா | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு | - மட்டக்களப்பு | - 240-00 யூரோ |
| 12. செல்வி.சுகிர்தா தவராஜ் | - ஜேர்மனி | |
| ((ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு | - கிளிநொச்சி | - 100-00 யூரோ |
| 13. செல்வன். சியாந்த எமில் சர்வானந்தன் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு | - வவுனியா | - 200-00 யூரோ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு

ஆரம்ப இருப்பு 20-05-2016 + 350-83

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

02. திரு.திருமதி. யஜிந்தா. ராஜ்மோகன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

03. திருமதி. பராசக்தி. பரமசாமி - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

04. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

05. திருமதி பிரிந்தாவனி தனபாலசுந்தரம் - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

06. திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

07. செல்வி.தீபா.தர்மராசா,செல்வி வினிஷா ராஜ்குமார்-Gottingen + 120-00
(ஆதரவற்றசிறார் ஒருவரின் கல்விச்செலவு அன்பளிப்பு)

08. திரு.சிவகுமாரன் சாந்தலிங்கம் - Pforzheim + 20-00
09. செல்விகள் நிரோ, நித்தியா இரத்தினசிங்கம் - Duidburg + 100-00
10. செல்வன்கள் ஜெனீதன்,ஜெதீசன் பிரபாகரன் - Oberhausen + 150-00
(பிறந்தநாள் அன்பளிப்பு)
11. திரு.கிறிஸ்ரி அமலதாசன் - London + 150-00
(தாயாரின் நினைவுநாள் அன்பளிப்பு

-----------

+ 1370-83



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

+ 1370-83

அனுப்பியது:-

1. அன்பகம் சிறுவர் காப்பகம்
   வவுனியா - 680-00
2. ரூத் மிஷன் - பெண்கள் இல்லம்
   ஜெயபுரம்-கிளிநொச்சி - 500-00

வங்கிக்கட்டணம் 2x 35-00 - 70-00

-------

- 1250-00

வங்கிவரி:- (01.05.2016 - 31.05.2016) - 10-22
(01.06.2016 - 30.06.2016) - 26-92

----------

- 1287-14 -1287-14

----------

15-07-2016ல் மீதி கையிருப்பு + 83-69


மாணிக்கவாசகர் சிறுவர் பராமரிப்பு இல்லம்
சந்திவெளி, மட்டக்களப்பு.
வரவுச் சீட்டு

திகதி 24/05/2016

| விபரம் | ரூபா | சதம் |
|---|---|---|
| (77147.75 [illegible]) | 77147 | 75 |
| மொத்தம் | 77147 | 75 |

ரூபா (77147.75)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாமையாளர்

மாணிக்கவாசகர் சிறுவர் அபிவிருத்தி நிலையம்

[illegible]

திரு. வ. சிவராசா

பிரதம ஆசிரியர்

மண் சஞ்சிகை

ஜேர்மனி.

ஐயா,

[illegible]

[illegible]

[illegible]

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பா கிண்ணம் - பிரான்ஸ்
## உதைபந்தாட்டம் - முடிவுகள் - 2016

Spielplan EM 2016: Achtelfinale - தெரிவுப்போட்டி

| Anstoß | Datum | Uhrzeit | Spielort | Heim Gast | Ergebnis |
|---|---|---|---|---|---|
| Sa. | 25.06.2016 | 15:00 | Saint-Étienne | Schweiz-Polen | 4:5 (n.E.) |
| | | 18:00 | Paris | Wales-Nordirland | 1: 0 |
| | | 21:00 | Lens | Kroatien-Portugal | 0:1 (n.V.) |
| So. | 26.06.2016 | 15:00 | Lyon | Frankreich-Irland | 2:1 |
| | | 18:00 | Lille | Deutschland-Slowakei | 3:0 (2:0) |
| | | 21:00 | Toulouse | Ungarn -Belgien | 0:4 (0:1) |
| Mo. | 27.06.2016 | 18:00 | Saint-Denis | Italien - Spanien | 2:0 (1:0) |
| | | 21:00 | Nizza | England-Island | 1:2 (1:2) |

Spielplan EM 2016: Viertelfinale - கால்இறுதிப்போட்டி

| Anstoß | Datum | Uhrzeit | Spielort | Heim Gast | Ergebnis |
|---|---|---|---|---|---|
| Do. | 30.06.2016 | 21:00 | Marseille | Polen-Portugal | 4:6 (n.E.) |
| Fr. | 01.07.2016 | 21:00 | Lille | Wales-Belgien | 3:1 |
| Sa. | 02.07.2016 | 21:00 | Bordeaux | Deutschland -Italien | 7:6 (n.E) |
| So. | 03.07.2016 | 21:00 | Saint-Denis | Frankreich -Island | |

Spielplan EM 2016: Halbfinale - அரைஇறுதிப்போட்டி

| Anstoß | Datum | Uhrzeit | Spielort | Heim Gast | Ergebnis |
|---|---|---|---|---|---|
| Mi. | 06.07.2016 | 21:00 | Lyon | Portugal-Wales | 2 - 0 |
| Do. | 07.07.2016 | 21:00 | Marseille | Deutschland-Frankreich | 0 - 2 |

Finale der EM 2016 - இறுதிப்போட்டி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| So. | 10.07.2016 | 21.00 | Saint-Denis | Portugal- Frankreich | 1 - 0 |

வெற்றிபெற்ற நாடு: - Portugal



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பா கிண்ணம் -2016- சில தகவல்கள்...

-1960ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 4 வருடங்களுக்கு ஒருதடவை இப்போட்டி நடைபெறும். இது 15வது போட்டியாகும். (10.06.2016 - 10.07.2016)

-பிரான்சிலுள்ள 10 பெரிய நகரங்களில் நடைபெற்றது.

-வெற்றிபெற்ற அணிக்குக் கிடைத்த பரிசுத்தொகை 67 கோடி ரூபா, 2வது பரிசுத்தொகை 34 கோடி ரூபா.

-ஆசியாக்கண்ட நாடான துருக்கி நாடும் இப்போட்டியில் சேர்க்கப்பட்டது.

-பிரித்தானியப் பிரதேசங்களிலிருந்து இந்தமுறை 4 அணிகள் பங்குபற்றின. (இங்கிலாந்து, வடஅயர்லாந்து, வேல்ஸ், அயர்லாந்து)

-ஸ்கன்டிநேவியன் நாடுகளிலிருந்து இந்தமுறை 2 நாடுகளே பங்குபற்றின. (ஐஸ்லாந்து, சுவீடன்)

-11.06.16ம் திகதி இங்கிலாந்து - ரஷ்ஷிய அணிகளுக்கிடையிலான போட்டியில் 1 - 1 என்ற கோல் கணக்கில் போட்டி முடிவடைய ரசிகர்களிடையே கடும் மோதல்கள் ஏற்பட்டன. 35 பேர் காயம். கலகம் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. பின்னர் ரஷ்ஷிய அணிக்கு ((Penalty) 1.69.000 டொலர் தண்டம் கட்டவேண்டும் என ஐரோப்பிய கால்ப்பந்தாட்டச் சங்கம் (UEFA) பணித்தது.

-ஒரு சில போட்டிகள் மழை காரணமாகவும், ரசிகர்கள் வெடிகளைக் கொழுத்தி மைதானத்துக்குள் எறிந்து குழப்பம் செய்ததாலும் தடங்கல்கள் ஏற்பட்டன. பின்னர் போட்டிகள் ஒழுங்காக நடைபெற்றன.

-இப்போட்டியில் ஆகக்கூடுதலான கோல்கள் 03.07.2016 அன்று பிரான்சும் ஐஸ்லாந்தும் மோதியதில் 5 - 2 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் வெற்றிபெற்றது.

-அனைத்துப் போட்டிகளும் கடுமையாகவே காணப்பட்டன. சிறிய நாடுகளின் விளையாட்டுக்களில் பல திறமைகள் காணப்பட்டன.

-மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற பல போட்டிகளில் மேலதிக நேரம் (Extra Time) கொடுக்கப்பட்டபொழுதுதான் பல அணிகள் கோல்களை அடித்து வெற்றிவாகை சூடின.

-நடப்பு உலகச்சம்பியனான ஜேர்மனி அணி 7.7.2016ல் நடைபெற்ற அரை இறுதிப்போட்டியில் தோல்வி. 2 - 0 என பிரான்ஸ் வெற்றிபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்த அண்டில் உலகெங்கிலும் ஊடக சுதந்திரம் வீழ்ச்சி!...

உலகின் அனைத்துப் பகுதிகளிலும் கடந்த ஆண்டில் ஊடக சுதந்திரம் வீழ்ச்சிகண்டுள்ளதாக ஊடகத்துறையை கண்காணிக்கும் அமைப்பு ஒன்று எச்சரித்துள்ளது.புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி பிரசாரங்களை மேற்கொள்ளும் புதிய காலகட்டத்தில் உள்ளோம் என்று எல்லையற்ற ஊடகவியலாளர்கள் என்ற கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. தனியார் துறையினரால் நடத்தப்படும் ஊடக நிறுவனங்கள் அதிக அளவில் வணிக நோக்கத்தை மையப்படுத்தி செயற்படும் அதேவேளை, உலகத் தலைவர்கள் பலரும் ஊடகம் மீது ஒடுக்குமுறைகளை நடைமுறைப்படுத்துவதாக அந்த கண்காணிப்பு அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. ஊடக சுதந்திர பட்டியலில் லத்தின் அமெரிக்க நாடுகள் பழைய நிலையிலிருந்து மேலும் சரிந்துள்ளன. முதல் மூன்று இடங்களில் பின்லாந்து, நெதர்லாந்து மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் உள்ளன.

### இலங்கையில்!...

இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட 35 தமிழ் ஊடகவியலாளர்களின் விசாரணையை உடன் ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி மற்றும் பொலிஸ் மா அதிபருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இன்று வரை 43 ஊடகவியலாளர்கள் படுகொலைசெய்யப்பட்டுள்ளனர். இதில் 35 தமிழ் ஊடகவியலாளர்களும் 05 சிங்கள ஊடகவியலாளர்களும் 03 முஸ்லீம் ஊடகவியலாளர்களும் அடங்குகின்றனர்.முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலத்தில் 01 ஊடகவியலாளரும், ரணசிங்க பிரேமதாசவின் ஆட்சிக்காலத்தில் 02 ஊடகவியலாளரும், சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் 13 ஊடகவியலாளர்களும், மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் 26 ஊடகவியலாளர்களும் படுகொலைசெய்யப்பட்டுள்ளனர்.

1985ஆம் ஆண்டு தொடங்கிய தமிழ் ஊடகவியலாளர்களின் படுகொலைகள் 2010ஆம் ஆண்டு வரை தொடர்ந்துகொண்டே இருந்தது.இந்நிலையில் இலங்கையில் நடைபெற்று வந்த படுகொலை ஆட்சியை ஊடகத்துறையின் பெரும்பங்குடன் முடிவுக்கு கொண்டுவந்த நல்லாட்சி அரசாங்கம், தற்போது இரண்டு சிங்கள ஊடகவியலாளர்களின் படுகொலை குறித்த விசாரணைகளையே ஆரம்பித்துள்ளது. ஆனால் இந்த நாட்டில் பெருந்தொகையாகக் கொல்லப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களின் விசாரணைகளை இன்றுவரை ஆரம்பிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்க விடையமாகும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NOOLAHAM
FOUNDATION

Noolaham
Foundation
நூலக நிறுவனம்

30.05.2016

*V. சிவராஜா (ஆசிரியர்)*
*மண் சஞ்சிகை - ஜேர்மனி*
*Am Windhoevel 18a*
*47249 Duisburg*
*Germany*

வணக்கம் ஐயா,

**<u>நூல்கள், சஞ்சிகைகள், பிரசுரங்களின் எண்ணிம ஆவணவாக்கம்</u>**

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாப்பதோடு அனைவருக்கும் கிடைக்கச் செய்வதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஆகும்.

இலங்கையில் பதிவுசெய்யப்பட்டு (GA 2390) தன்னார்வப் பங்களிப்பாளர்களால் வழிநடத்தப்படும் நூலக நிறுவனம் ஈழத்தின் முதன்மை எண்ணிம ஆவண நிறுவனமாக மிளிர்கின்றது.

இதுவரை 17,500 க்கும் அதிகமான வெளியீடுகளை ஆவணப்படுத்தியுள்ளதோடு ஏறத்தாழ 5,000 ஏட்டுச் சுவடிகளையும் பதிவுசெய்துள்ளோம். சுமார் 2,700 ஆளுமைகள், 1,700 நிறுவனங்கள் பற்றிய தகவல்களையும் திரட்டியுள்ளோம்.

அந்தவகையில் உங்களுடைய வெளியீடுகளை தந்துதவுவதோடு எண்ணிம ஆவணவாக்கத்துக்கான அனுமதியினையும் தருமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் புலம்பெயர் நாடுகளில் வெளிவந்த/வெளிவரும் இலங்கைத் தமிழ் பேசும் சமூகத்தினருடைய ஆவணங்களையும் கிடைக்க ஆவன செய்வீர்களாயின் பேருதவியாக இருக்கும். அவற்றை நாம் அவர்களின் அனுமதியுடன் எம் எண்ணிம நூலகத்தில் மின்வருடிப் பாதுகாத்து அனைவருக்கும் திறந்த அணுக்கத்தில் உலகளாவிய ரீதியில் பகிரமுடியும். இதனால் உங்களுடைய வெளியீடுகளை எவரும் எங்கிருந்தும் பெற்றுப் பயன் பெறவும் முடியும். அவ் அனுமதியினைப் பெறுவதற்கான படிவங்களை இக் கடிதத்துடன் இணைப்பதுடன், அதனை விரைவில் பூர்த்தி செய்து அனுப்பி உதவுமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

எமது செயற்பாடுகள் பற்றிய தகவல்கள், எமது உத்தியோகபூர்வ வலைத்தளமான www.noolahamfoundation.org இல் விரிவாக உள்ளன. மேலதிக தகவல்களுக்கு noolahamfoundation@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியினூடாகவும் +94 112 363261 என்ற தொலைபேசி எண்ணினூடாகவும் தொடர்பு கொள்ளலாம்.

நூலகச் செயற்பாடுகளுக்கு உங்கள் ஆதரவினை தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றோம்.

நன்றி

R. Pathmanaba Iyer



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் சக்திவாய்ந்த முதல்ப் பெண்மணி.....



அமெரிக்க பத்திரிகை ஃபோர்ப்ஸ் உலகின் மிக சக்திவாய்ந்த பெண்மணியாக தொடர்ந்து ஆறாவது முறையாக ஜேர்மனியின் சான்சலர் ஏஞ்சலா மெர்கலை தெரிவு செய்துள்ளது. அமெரிக்க பத்திரிகையான ஃபோர்ப்ஸ் 11வது முறையாக உலகின் மிக சக்திவாய்ந்த பெண்மணிகள் பட்டியலில் இவருக்கு முதலிடத்தை வழங்கி கௌரவித்து வருகிறது.

கடந்த 2011 ஆம் ஆண்டு தொடங்கி 6 முறை இந்த பட்டியலில் முதலிடத்தையும் தக்கவைத்துக் கொண்டுள்ளார் ஏஞ்சலா மெர்கல்.இந்த பட்டியலில் முதன் முறையாக இடம் பிடித்துள்ள ஸ்காட்லாந்து அரசியல்வாதியான நிக்கோலா ஸ்டர்ஜியன் 50-வது இடத்தில் உள்ளார். ஏஞ்சலா மெர்கலுக்கு அடுத்த இடத்தில் அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவாக வாய்ப்புகள் உள்ள ஹிலாரி கிளிண்டன் உள்ளார். மூன்றாவது இடத்தில் இருப்பவர் அமெரிக்க மத்திய வங்கிகளுக்கான முதன்மை அதிகாரியாக பணியாற்றிவரும் ஜேனட் யெல்லென். 4வது மற்றும் 5வது இடங்களில் மெலிண்டா கேட்ஸ் மற்றும் ஜெனரல் மோட்டோர் நிறுவனத்தின் முதன்மை அதிகாரியான மேரி பர்ரா ஆகியோர் உள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் மனைவி மீச்செல் 13வது இடத்திலும், பிரித்தானிய மகாராணியார் 29வது இடத்திலும் உள்ளனர். ராணி எலிசபெத் கடந்த ஆண்டு ஃபோர்ப்ஸ் வெளியிட்ட பட்டியலில் 49வது இடத்தில் இருந்தார்.2016 ஆம் ஆண்டின் உலகின் சக்திவாய்ந்த பெண்மணிகள் 100 பேரை தெரிவு செய்துள்ள ஃபோர்ப்ஸ் பத்திரிகையின் பட்டியலில் 51 பேர் அமெரிக்கர்கள், வெறும் 6 பேர் மட்டுமே பிரித்தானியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990 - 2016

# ERDE

## MANN

Germany / Ausgabe 178

WISSEN, KULTUR & LITERATUR
ZWEIMONATIGE AUSGABE
கல்வி, கலை, இலக்கிய சமூக
இருமாத இதழ்




யேர்மனி தமிழ் எழுத்தாளர்சங்கம் 11.6.2016ல் நடாத்திய
கௌசியின் முக்கோணமுக்குளிப்பு
நூல்வெளியீட்டு விழா நிகழ்வு.

வருட சந்தா ஜேர்மனி 15€
ஏனைய நாடுகள் 20€

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org